கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 19.07.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



சற்று அசந்தால் வாழ்க்கையையே பறித்து விடுவதுபோல் பயம் காட்டுகிற புற்றுநோய்








கேன்சருக்கு ஏழை பணக்காரன்கிற பாகுபாடு எல்லாம் கிடையாது. ஒருபக்கம் உயிரைத் துளைக்கிற வலி. இன்னொரு பக்கம் வாழ்க்கையே முடிஞ்சுடுமோங்கிற பயம். கையில காசு இருக்கறவங்களுக்கு இந்த வேதனை மட்டும்தான். ஆனால் தினசரி கூலி வேலை செஞ்சு, வயிற்றைக் கழுவ வேண்டிய ஏழைகளுக்கு? வேலைக்குப் போறதை எல்லாம் அப்படியே நிறுத்திட்டு கேன்சருக்கு சிகிச்சை எடுக்க வேண்டிய கட்டாயம். வேலைக்குப் போக முடியாததால் குடும்பச் செலவுகளுக்குத் திணற வேண்டிய அவலம்.

இப்படி மரண வேதனைப்படுகின்ற பரம ஏழைகளின் கஷ்டத்திற்கு, இறைவன் அருளால் நல்ல நிலைமையில் இருக்கும் நாம், ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டாமா?

புற்றுநோயால் அவதியுறும் ஏழைகள் இவர்கள் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாகிறது

யாருடைய உடல் வலியையும் வியாதியின் கொடுமையையும் மற்றவர்கள் பகிர்ந்துகொள்ள முடியாது. இருப்பினும் குறைந்தபட்சம், மனிதநேய அடிப்படையில், அவர்களைப் பேணி பராமரிக்கும் "ஸ்ரீமாதா டிரஸ்ட்" நடத்தி வரும் தர்மசாலாவிற்கு பொருள் உதவி செய்வதன் மூலம் அங்கு தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகளுக்கு இலவசமாக உணவு கொடுத்து அவர்களது நோய்க்கு இலவச சிகிச்சை பெற உதவலாமே?



நோயாளிகள் தங்கும் வசதியான அறை



சௌகரியம் மிகுந்த உணவு அறை

ஸ்ரீ மாதா டிரஸ்ட்

நிர்வாக அலுவலகம்:
"குரு கிருபா", 3, சாஸ்தா அவென்யூ,
திருமழிசை தெரு, சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.

ராஜஸ்தானி தர்மசாலா,
பழைய கேன்சர் இன்ஸ்டிட்யூட் வளாகம்,
ஈஸ்ட் கனால் பேங்க் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Phone: 2442 0727 / 2440 4950



வி.கிருஷ்ணமூர்த்தி
நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர்
கைபேசி: 94440 01065

நீங்கள் அளிக்கும் நன்கொடையை, "SRI MATHA TRUST" என்ற பெயரில் காசோலையாக அனுப்பி வைக்கலாம். நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு 80(G) பிரிவின்படி வருமான வரிவிலக்கு உண்டு

Sponsored Advt.

உங்கள் சேவை தொடர, தொடர்புகொள்ளுங்கள் : திரு.காமாட்சிமணி - 93848 33325
அரிமா.என்.சங்கரம் - 93848 20727 திருமதி எஸ்.ராமா - 93810 20727 | திரு.எ.அமெரிக்கன் - 9003247857

பயன்பெறும் நோயாளிகளின் மனம் திறந்த எண்ணங்கள்!!

சத்தான உணவு சுவைத்து மகிழும் ஏழை நோயாளிகள்







இந்த தர்மசாலாவில் நானும் என் அம்மாவும் ஒன்பது மாதங்களாக தங்கியிருக்கிறோம். இங்கு தினமும் நல்ல உணவு வழங்குகிறார்கள். எங்களுக்கு உறவினர்களோ, பண வசதியோ இல்லை. தர்மசாலா இல்லாவிட்டால் எனக்கு வைத்தியம் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும். இங்கு நாங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். இங்கு இருக்கும் அனைவரும் நன்றாக இருக்க வேண்டும் என அல்லாவை வேண்டுகிறேன்.

அஷ்ரப் (12 வயது) O.P.No.10850/08

என் அம்மாவிற்கு மார்பக புற்றுநோய். ஆறு மாதங்கள் சிகிச்சை பெற்றாக வேண்டிய சூழ்நிலையில் பயத்துடன் குழம்பினேன். கேன்சர் மருத்துவ மனையின் ஆலோசனை மூலம் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நடத்திவரும் இந்த தர்மசாலாவில் நானும் என் அம்மாவும் தங்கி உள்ளோம். இங்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம். மனிதனுக்கு மிகவும் அவசியமானது உணவு, உடை, இருப்பிடம். இவை மூன்றையும் இங்கு எங்களுக்கு கொடுக்கிறார்கள். எங்கள் வீட்டில் உள்ளது போலவே உணர்கிறோம்.

சுஜிதா (21 வயது)

ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் எனக்கு கழுத்தில் புற்றுநோய் வந்துள்ளது. நான் தர்மசாலாவில் மூன்று வாரங்களாக தனியாக தங்கியிருக்கிறேன். இங்கு சாப்பாடு மிகவும் நன்றாக இருக்கிறது.

நான் இங்குதனியாக இருந்தாலும் பாதுகாப்பாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறேன். என்னை இங்கு நன்றாக பார்த்துக்கொள்கிறார்கள்.

சிவசக்தி (14 வயது) O.P.No.2186/08



உணவு சமைக்கும் தாத்தா பாசத்துடன் உணவு பரிமாறுகிறார்





புற்றுநோயின் வலியை மறந்து, இயற்கை காற்றை சுவாசிக்கும் நோயாளிகள்

உங்கள் உதவிகளை இப்படி அளிக்கலாமே ...

- ஒரு நாளைக்கு ஒரு நோயாளியின் உணவுக்காக ரூ.60 அளிக்கலாம்.
- ஒவ்வொரு மாதமும் ஒரு நோயாளி என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதும் ரூ.720 அளிக்கலாம்.
- காலை சிற்றுண்டி மட்டும் கொடுக்க ரூ.2000 வழங்கலாம்.
- ஏழை நோயாளிகளுக்கு மதிய உணவு அல்லது இரவு உணவு அளிக்க ரூ.3000 வழங்கலாம்.
- இந்த தர்மசாலாவின் ஒரு நாள் சாப்பாடு செலவான ரூ.7000 அளிக்கலாம்.
- காலை முதல் இரவு வரை முழு நாள் உணவை ஆண்டுக்கு ஒரு முறை கொடுக்க உங்கள் சார்பாக ரூ.60000 கொடுத்து நீங்கள் ஒரு "வள்ளல்" ஆகலாம். நீங்கள் கொடுக்கும் இந்த தொகை டிரஸ்டின் காப்பு நிதியில் சேர்க்கப்பட்டு, அதன் வட்டியிலிருந்து இந்த தர்மம் செய்யப்படும்.
- பெரிய மனதுடன் ரூ.100000 கொடுத்து, நீங்கள் இந்த புனித சேவையின் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம்.

சினி சிப்ஸ்

'பையா' படத்தின் ஷூட்டிங் ஸ்பாட் பக்கம் சென்றால் திரும்பிய திசையெல்லாம் தமன்னா பெயர்தான் ஒலிக்கிறது. லைட் பாய் முதல் தயாரிப்பாளர் வரை அனைவரிடமும் நட்புடன் பேசி அத்தனை பேரின் மனத்தையும் கவர்ந்து வைத்திருக்கிறார் தமன்னா.

(படம் முடிஞ்சதும் அம்மணிக்கு தனியா ஒரு பூசணிக்காய் சுத்திப் போடுங்க)

சூர்யா நடிக்கும் 'ஆதவன்' படத்தைத் தயாரிப்பது உதயநிதியின் ரெட் ஜெயண்ட் என்பது தெரியும்தானே? படத்தில் உதயநிதியும் ஒரு வேடத்தில் நடிக்கிறார். இது தெரிந்ததும் வேறு சிலர் அவரை, தங்கள் படத்தில் கதாநாயகனாக நடிக்க வைக்க முயற்சிக்கிறார்களாம்.

(வசனம் தாத்தாவா?)

'மாயாண்டி குடும்பத்தார்' எதிர்பார்த்த அளவுக்குப் போகவில்லை. அதனால் தருண்கோபி தெலுங்கில் வெற்றிபெற்ற 'உல்லாசங்கா உற்சாகங்கா' என்ற படத்தை, தமிழில் ரீமேக் செய்து தானே நாயகனாக நடித்து இயக்கும் வேலையில் மும்முரமாய் இறங்கியுள்ளார்.

(இந்தப் படமாவது உல்லாசத்தைத் தருமா?)

உலகமே நம்பிவிட்ட பிரபுதேவா - நயன்தாரா திருமணத்தைப் பற்றி பிரபுதேவாவின் மனைவி நம்பவில்லையாம்.

(மனிதர் போன ஜென்மத்துல எக்கச்சக்க புண்ணியம் செய்திருப்பாரோ?)

'லக்' ஹிந்திப் படத்தில் நடிக்கும் ஸ்ருதி கமல்ஹாசனின் கவர்ச்சியான காஸ்ட்யூம் ஸ்டில்களைப் பார்ப்பவர்கள்



ஆடிப் போகிறார்கள். 'அப்பா ஒண்ணும் சொல்ல லையா?' என்று கேட்டால், 'அவர் கதையை மட்டும்தான் கேட்டார். மற்றபடி எல்லா முடிவு களையும் எடுக்கிறது நான்தான்' என்கிறார்.

(சுதந்திரா ஸ்ருதி?)

'ஆடுகளம்' பட ஷூட்டிங்கில் தம்மைச் சும்மாவே உட்கார வைத்து நேரத்தை வீணாக்கு வதாகக் கோபத்தில் இருக்கிறார் த்ரிஷா. சமீபத்தில் ஹிந்திப் படம் ஒன்றிலும் 'புக்' ஆகியுள்ளவர், தமிழுக்கு குட்பை சொல்லிவிட்டு, மும்பைக்குப் போய் விடலாமா என யோசித்து வருகிறார்.

(பறிகொடுத்துடாதீங்க கோலிவுட்காரங்களே!)

விஜய்க்கு அடுத்த படத்துக்கான கதை ரெடி. 'அழகர்மலை' பட இயக்குநர் எஸ்.பி.ராஜ்குமார் சொன்ன கதை 'வில்லு'க்கு ரொம்பவே பிடிச்சுப் போச்சாம். கதை மட்டும்தான் ராஜ்குமாருடையது. இயக்கத்துக்கு வேற ஆளைத் தேடிட்டு இருக் காங்க.

(தில்லா இல்லையோ கதை...?)

எந்திரன், ராவணா என அடுத்தடுத்து தமிழில் வலம்வரப் போவதால் நாயகி ஐஸ்வர்யாராய் தமிழ் எழுத, படிக்க டியூஷன் கற்று வருகிறாராம். விரைவில் சொந்தக் குரலில் பேசினாலும் ஆச்சர்ய மில்லை.

(அழகிய தமிழ்மகள் இவள்னு ரசிகர்கள் பாடலாம்.)

'நாடோடிகள்' படத்தில் சிறிய வேடத்தில் வந்து மனசைக் கொள்ளையடிச்ச கதாநாயகி அபிநயாவுக்கு வாய்ப்புகள் வரிசையாக வந்துட்டிருக்காம்.

(பேசிப் பேசியே காணாம போனவங்க மத்தியில் பேசாம சாதிக்க வாழ்த்துகள்)

நியூஸ் பாய்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagal.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : **ரூ.500/-**
வெளிநாடு : **ரூ.3,800/-**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

● ஜே.வி.ஜே.கண்ணன், திருச்சி

? மேற்கு வங்கத்தில் பழங்குடி இன மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதற்கும் மாவோயிஸ்ட், நக்ஸல்கள் வளர்ச்சியடைந்ததற்கும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்தான் காரணம் என்று இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் பரதன் சாடியுள்ளாரே?

! மாவோயிஸ்டுகளே கம்யூனிஸத்தின் ஓர் அங்கம்தான். அவ்வாறிருக்கையில், மும்முனைகளில் உள்ளோர் ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டிருப்பது அபத்தமானது. மையத்துக்கு வந்து கலந்து பேசி, வன்முறையைத் தவிர்த்து, மக்கள் நலன் பேணுவது கம்யூனிஸத்துக்கு நல்லது. இல்லையெனில் அந்த சித்தாந்தமே சிதைந்து போகும்.

● கு.கணேசன், மறைமலைநகர்

? ''பொறியியல் படிப்புக்கான கிராக்கி குறைந்து வருவதால், தனியார் பொறியியல் கல்லூரிகளில் கட்டணமும் குறையும். மாணவர்களும் பெற்றோர்களும் பொறுமையாக இருக்க வேண்டும்'' என்கிறாரே அமைச்சர் பொன்முடி?

! நல்லவேளை... உணவு அமைச்சராக இல்லாமல் போனார்... ''எதிர்காலத்தில் விளைச்சல், தேவைக்கு அதிகமாகும். அப்போது அரிசி விலை குறையும். அதுவரை பொறுமை தேவை'' என்று சொல்லியிருப்பார்!

● எம்.ஏழுமலை, அக்ரஹாரம்

? 'சுடிதார், சல்வார் போன்ற ஆடைகளை கல்லூரி மாணவிகள் அணியத் தடையில்லை' என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பு, சமுதாயச் சீர்கேட்டுக்குத் துணை போகிறதா?

! இல்லை. ஸ்கூட்டர், பஸ், மெட்ரோ பயணங்களுக்கு வசதியான ஆடை அணிவது அவசியம். அதற்காக நம் பெண்மணிகள் புடவை நெசவாளர்களை ஆதரிக்காமல் இருந்துவிடமாட்டார்கள். சமுதாயச் சீர்குலைவு, ஆடையால் ஏற்படுவது அல்ல; அணிபவர், பார்ப்பவர் உள்ளம் உணர்த்தும் ஜாடையால் உருவாவதுதான்.



✱ அமைச்சர் அபத்தம்



✱ அதிரடி அஸ்திரம்




✱ சிதையும் சித்தாந்தம்

ராஜா பதவி விலக வேண்டுமோ?


நீங்கள் கேட்டவை - தராசு



* பிழைத்தது உணவுத்துறை!



* இரட்டை அபாயம்



* போலியைத் தேடி...!

● **பி.ஜெயபிரகாஷ், சர்கார்பதி**

? **''நக்சலைட் தடையை, கண்மூடித்தனமாக அப்படியே அமல்படுத்த மாட்டோம்'' என்கிறாரே மேற்கு வங்க முதல்வர்?**

! மீனுக்குத் தலையாகவும் பாம்புக்கு வாலாகவும் இருக்க முயற்சி செய்தால் இரட்டை அபாயம்!

● **அ.அப்துல் காதர், சென்னை - 45**

? **லிபரான் கமிஷன் அறிக்கை வெளிவந்துவிட்டதே; இனிமேலாவது அதன் அடிப்படையில் நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படுமா?**

! ஓர் அரசியல் சூறாவளி உருவாவதை மத்திய அரசு விரும்பாது. பதினாறு வருஷங்களுக்குப் பிறகு அறிக்கை வந்துள்ளது. படித்துப் பார்க்க பதினாறு மாதங்களாவது ஆகாதா? அப்புறம் நடவடிக்கை எடுப்பதை இன்னும் ஒரு பதினாறு மாதங்களுக்கு ஒத்திப்போட்டால், எல்லோருக்கும் விஷயம் மறந்துவிடும். அறிக்கை, தூசுப் போர்வையில் நிம்மதியாக உறங்கும்.

● **ஜி.இந்திரா, பெங்களூரு** ❐

? **ஆந்திராவில் வங்கி மேலாளரை அறைந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர், தமது அநாகரிகச் செயலுக்கு வருத்தம் தெரிவிக்க மறுத்தது பற்றி?**

! முதலில் மறுத்தவர் பின்னர் மன்னிப்புக் கேட்டது வருத்தத்தால் என்பதைக் காட்டிலும் வற்புறுத்தலால் தான். அநேகம் அரசியல்வாதிகள், அத்துமீறல்களைத் தங்கள் உரிமையாகவே கருத ஆரம்பித்துவிட்டார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் நமது நாட்டில் நடப்பது ஜனநாயக ஃபாஸிஸம்.

● **பஞ்சவர்ணம், கருப்பம்புலம்**

? **6.61 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் ரேஷன் கார்டுகள் சொல்லும் கணக்கின்படி 8.14 ஜனத்தொகை காட்டப்படுகிறதாமே? இதனால் போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்கப் புறப்பட்டுவிட்டாராமே பொது விநியோகத் துறை அமைச்சர் வேலு?**

! அடையாள அட்டை என்று வந்துவிட்டாலே போலிகளும் உருவாகும். ஆதாயம் இருப்பதால் அத்தொழில் செழிக்கும். பிரச்னை தீர ஒரே வழி, ரேஷன் கார்டே தேவையில்லை என்கிற அளவுக்கு உணவுப் பண்டங்கள் விலை குறைய உற்பத்தியைப் பெருக்குவதுதான்.

● **ஆர்.ராஜலட்சுமி, ஹூப்ளி** ★

? **இன்றைய குழந்தைகள் குழந்தைத்**

தன்மையை இழந்ததற்குக் காரணம் பெற்றோரா? பள்ளி ஆசிரியர்களா?

! பெற்றோரும் ஆசிரியர்களுமாகச் சேர்ந்து கலை நிகழ்ச்சி என்கிற பெயரில் பள்ளியில் நடத்துகிற சினிமா சார்ந்த கூத்தை நிறுத்தினாலே போதும். பாதிக்கு மேல் குழந்தைத் தன்மையை மீட்டுவிட லாம்.

● லெ.நா.சிவகுமார், சென்னை-33

? ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாயாவதியின் சிலைகளை புல்டோசர் வைத்து இடிப்போம்'' என்கிறாரே முலாயம் சிங் யாதவ்?

! அப்பப்பா! உடனே உ.பி. கபிட்சத்தின் உச்சத்துக்குச் செல்லும் பாருங்கள்! மாயாவதி தனக்குத் தானே சிலை வைத்துக் கொள்வதற்கும், அதைக் கங்கணம் கட்டிக் கொண்டு, அடுத்து வருபவர் அழிப்பதற் கும் அதிக வித்தியாசமில்லை!

● உமரி.பொ.கணேசன், மும்பை-37

? விடுதலைப் புலிகளை முற்றிலும் அழித்துவிட்டதாகச் சொல்லும் இலங்கை அரசு, தமிழர்களை ஏன் இன்னமும் முகாம்களில் அடைத்து வைத்துள்ளது?

! ''அவர்கள் வாழ்ந்த பகுதிகளில் அடிப்படை வசதிகளை மீண்டும் ஏற் படுத்த அவகாசம் வேண்டும்'' என்று ராஜ பட்சய காரணம் சொல்கிறார். இது தவிர, அரசியல் தீர்வு ஒன்று அவர் உள்ளத்தில் இருக்கிறதாம். ஆனால் அது மக்களிட மிருந்து வர காத்திருக்கிறாராம்! இந்திய அரசு ராஜபட்சயவை நம்பி ஏமாந்தால் தமிழ்கூறு நல்லுலகையே பகைத்துக் கொண்டதாக முடியும்.

● அ.சுகுமார், காட்பாடி

? ராஜா அமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்கிறாரே ஜெ?

! மத்திய அமைச்சர் யாரும் ஃபோனில் நீதிபதியிடம் பேசவில்லையாம்! வழக்கறிஞர்தான் அமைச்சர் பெயரைப் பயன் படுத்தியதுடன், அவருடன் பேசுமாறு செல்ஃபோன் கனெக்ஷன் பெற்று, நீதிபதியிடம் நீட்டினாராம்! நீதிபதி பேச மறுத்துவிட்டாராம்! இது உச்சநீதிமன்றமே அளித்துள்ள விளக்கம்! முதலில் வந்த செய்தியைக் காட்டிலும் பின்னது அதிக மோசமானது. அமைச்சர் (யாராயிருப் பினும்) உடனே பதவி நீக்கம் செய்யப் படவேண்டும். வழக்கறிஞர் மீதும் உடனடி நடவடிக்கை தேவை.



✱ புல்டோசர் அரசியல்!



✱ உள்ளத்தில் கள்ளம்..?



✱ சப்பை விளக்கம்!

❐ ரூ.150/- பரிசு பெறுபவர் : ஜி.இந்திரா, பெங்களூரு

★ ரூ.75/- பரிசு பெறுபவர் : ஆர்.ராஜலட்சுமி, ஹூப்ளி

பாடலுக்காக தேசிய விருது பெற்ற வித்தகக் கவிஞர் பா.விஜய், கதாநாயகனாக கோலிவுட்டில் களம் கண்டிருக்கும் நேரத்தில் அவருடனான ஒரு கவிதை சந்திப்பு...

நடிப்பு முடிவு முன்பே இருந்ததா? திடீர்ப் பிரவேசமா?

''நடுவிலே பிறந்த ஒரு தாகம்தான். எனக்குத் தெரிய தமிழர்கள் அனைவருக்குள்ளேயும் அதீதமான கலையுணர்வு மரபுரீதியாகவே உதிரத்தில் கலந்திருக்கிறது. ஆகவே, அவர்களால் எந்தக் கலைத் துறையில் வேண்டுமானாலும் பயணிக்க முடியும். கலைத்துறையையே சுவாசித்துக் கொண்டிருக்கிற எனக்கு, நடிப்பு என்பது மிகப் பெரிய சவாலாக இல்லை.''

இதெல்லாம் தேவைதானா?

''என்னுடைய 'ஞாபகங்கள்' திரைப் படத்திலே ஒரு வசனம் எழுதியிருக்கிறேன். எல்லாத்துக்கும் எதுக்கும் இவங்க ஒரு விமர்சனத்தை வச்சுக்கிட்டேதான் இருப்பாங்க. ஜெயிக்கணும்னு போராட வந்தவனைப் பார்த்து 'தம்பி! இதெல்லாம் பத்தாது புதுசா ஒரு ஃபயர் வேணும்' பாங்க... புதுசா ஒரு நெருப்போடு போராடினா, 'போராடுன எல்லாரும் ஜெயிச்சிடுவாங்களா' என்று அந்தப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவாங்க. அதுமாதிரி நான் நடிப்பதெல்லாம் தேவை தானா என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டவர்களுக்குப் பதிலை காலம் சொல்லும்.''

கலைஞர்கள் அரசியல் சாயம் பூசிக் கொள்கிறார்களே...?

''கலைத்துறை என்பதும் அரசியல் துறை என்பதும் தண்டவாளம் மாதிரிதான். இரண்டும் ஒன்றையொன்று பின்னிக் கொள்ள முடியாவிட்டாலும் சரிசமமான பயணம் தமிழக வரலாற்றில் இருந்திருக்கிறது. அந்த வகையில் ஏதோவொரு நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ... ஒரு நிழல் தேவைப்படுவதன் காரணமாகவோ சில கலைஞர்கள் அரசியல் சாயத்தைப் பூசிக் கொள்கிறார்கள். ஆனால் அரசியல் சாயம் இல்லாமலும் மிகப் பெரிய திரையுலகச் சாதனைகள் செய்யலாம் என்பதற்கு கலைஞானி கமல்ஹாசன் போன்றோர் மிகப் பெரிய உதாரணம்.''


ஒரு பார்வையாளனாக நடிப்பும் தயாரிப்புச் சுமையும் எளிதாக இருந்திருக்கும்... இப்போது?

அரசியல்



சாயம் ஏன்?

- பா. விஜய்



''சினிமாவுக்கு வெளியே நின்று பார்க்கும்போது நடிப்பு, தயாரிப்பு இரண்டிலுமே பெரிய வலி இருப்பதாக நான் உணரவில்லை. நடிப்பைப் பொறுத்தவரைக்கும் அதுவொரு பாதுகாப்பான வளையம். அதற்குள் ஒருவனது திறமை, புகழ் அளவுக்கதிகமாகவே வெளிப்படுகிறது. தயாரிப்பு பாதுகாப்பற்று அந்தரத்தில் சவாரி செய்கின்ற அதிசயம். இந்த இரண்டையும் ஒருசேரச் சுமந்து செல்லும்போது மிகப் பெரிய சோதனைகளும் சோகங்களும் என்னைச் சூழ்ந்தன. அத்தருணங்களில் எல்லாம் என்னுடைய தூய்மையான கடவுள் நம்பிக்கை எனக்குக் கைகொடுத்து ஒவ்வொரு கட்டத்திலும் என்னை வழி நடத்தியது.''

பாடலாசிரியன், நடிகன் - ஒருசேர நடத்திக்கொண்டு போக முடியுமா?

''பாடலாசிரியனுக்குள்தான் நடிகன் ஓரத்தில் ஒரு மூலையில் தேடிப் பார்க்கின்ற தொலைவில் ஒளிந்து கிடக்கிறான். அதனால் பா.விஜய் என்ற கவிஞனை ஒருகாலும் பா.விஜய் என்ற நடிகனால் விழுங்க முடியாது. கவிஞனே என்றும் இந்த நடிகனை வழிநடத்திச் செல்வான்.''

- ப்ளாக்

பொதுவாக அன்புமணி, பத்திரிகைகளுக்குத் தனிப் பேட்டி கொடுப்பதைத் தவிர்க்கப் பார்ப்பார். காரணம், தந்தை டாக்டர் ராமதாஸ் அவ்வப்போது கருத்துகளை அழுத்தமாக வெளிப்படுத்தி வருவதுதான். தேர்தல் தோல்விக்குப் பிறகு முதன்முறையாக மனம் திறக்கிறார் அன்புமணி.

ஏழு தொகுதிகளில் தோல்வி. பெரிய அதிர்ச்சி?

''வெற்றி பெற்றதும் துள்ளி ஆடுவதும் தோல்வியடைந்தால் துவண்டு படுப்பதும் எங்கள் வழக்கமல்ல. மே மாதம் ஒன்பதாம் தேதி வரை நாங்கள் போட்டியிட்ட ஏழு தொகுதிகளிலும் வெற்றி தேவதை எங்களுக்குச் சாதகமாகவே இருந்தாள். ஒன்பதாம் தேதிக்கும், பதின்மூன்றாம் தேதிக்கும் (தேர்தல் நாள்) இடையில் நடந்த தி.மு.க.வின் தில்லுமுல்லுகளின் காரணமாகவே நாங்கள் தோற்றோம். ஏழு தொகுதிகளிலும் வாக்குச் சாவடி அதிகாரிகளாக தி.மு.க. அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். தேர்தல் இயந்திரத்தில் திருட்டுத்தனம் செய்யப்பட்டது. பல கோடிகள் அள்ளி விடப்பட்டன. தி.மு.க. தேர்தல் அதிகாரிகள் ஒவ்வொரு பூத்திலும் நூறு முதல் இரு நூறு வோட்டுக்கள் வரை ஆளும் கட்சிக்கு ஆதரவாகப் போட்டார்கள். இதன் காரணமாகவே நாங்கள் போட்டியிட்ட தொகுதிகளில் எண்பது சதவிகிதம் வாக்குப் பதிவு கூட நடந்தது. சில பூத்துகளில் நூறு சதவிகிதம் கூட பதிவாகியிருக்கிறது! எந்த தேர்தலிலாவது இதுபோல நடந்திருக்கிறதா?''

உங்கள் ஏஜெண்டுகள் என்ன ஆனார்கள்?

''சில இடங்களில் அவர்களும் உடன்பட்டு இருக்கலாம். அதுபோன்ற கறுப்பு ஆடுகள் களையெடுக்கப்படுகின்றன. பெரும்பாலும் எங்கள் ஆட்கள் காவல் துறை மற்றும் ஆளும் கட்சிக்காரர்களால் விரட்டி அடிக்கப்பட்டனர்.''

முறைகேடுகள் என்றால் நாற்பதிலும்



"உங்கள் தந்தை(ராமதாஸ்) தேர்தலுக்குப்பின் ஜெயலலிதாவைச் சந்திக்கவில்லையே... ஏன்?"

தோழமை தொடர்கிறதா..?

- மனம் திறக்கும் அன்புமணி




ஆளும் கூட்டணி வெற்றிபெற வேண்டுமே?

''தில்லுமுல்லுகள், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து எல்லா தொகுதிகளிலும் வெற்றி பெற்றால் மோசடி அம்பலமாகி மாட்டிக் கொண்டு விடுவார்கள் என்பதால், சில குறிப்பிட்ட தொகுதிகளில் மட்டும் செய்து, 'எல்லாம் முறையாக' நடந்ததைப் போன்ற தோற்றத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் தொகுதிகள் தவிர, மணிசங்கர் அய்யர், தங்கபாலு, இளங்கோவன், பிரபு ஆகியோர் தொகுதிகளிலும் ஆளும்கட்சி தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறது. சராசரி வோட்டு சதவிகிதம் என்பது அறுபதுதான். அதிலிருந்து இரண்டு சதவிகிதம் அதிகம் பதிவானாலே ஆளும் கட்சிக்கு எதிராகத்தான் முடிவு இருக்கும் என்பது கடந்த தேர்தல்களில் வரலாறு. இப்போது எழுபத்திரண்டு சதவிகிதம் பதிவானபின் ஆளும்கட்சி வெற்றி பெற்றது எப்படி? அள்ளி விட்ட பணம், அராஜகம், அதிகாரத் துஷ்பிரயோகம்தான் காரணம். வாக்கு இயந்திரத்தில் கோல்மால் செய்ய முடியும் என்பதை ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கூட சமீபத்தில் நிரூபித்திருக்கிறார்.''

நீங்கள் மாறி, மாறி கூட்டணி வைத்ததும், விஜயகாந்த் வோட்டைப் பிரித்ததும் கூட காரணமாக இருக்குமே?

''விஜயகாந்த் வோட்டைப் பிரித்தது ஒன்றும் பெரிய பாதிப்பல்ல. தேர்தல் பிரசாரத்தில் மக்கள் எங்களுக்கு ஆதரவாகத் திரள்வதைப் பார்த்தவன் நான். நாங்கள் மாறி மாறிக் கூட்டணி வைப்பது ஒன்றும் மக்களிடையே எந்த எதிர்ப்பையும் கிளப்பவில்லை. ஏனென்றால் வேறு பல கட்சிகளும் மாறி, மாறித்தானே கூட்டணி அமைக்கின்றன. மற்றொன்று, 'நாற்பது தொகுதிகளில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த விஜயகாந்த் அதிக வோட்டுக்கள் பெற்றார்; அவரது வாக்கு வங்கி உயர்ந்திருக்கிறது' என்று கூறுவது சரியல்ல. குறைந்த அளவு தொகுதிகளில் போட்டியிட்ட கட்சிகளோடு அவர் பெற்ற வாக்கு





களை ஒப்பிடக் கூடாது.''

சோர்ந்த உங்கள் தொண்டர்கள் 'சுறுசுறு' ஆவார்களா?

''எங்கள் தொண்டர்கள் அதிர்ச்சியடைந்தது உண்மை. மிக விரைவிலேயே அதிலிருந்து மீண்டார்கள். இப்போது எங்கள் உட்கட்சித் தேர்தல் நடைபெறுகிறது. தென்தமிழகம் உட்பட, தமிழகம் முழுவதும் பரவலாக நூறு தொகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து வருகிறேன். கிராமப்புறங்களுக்குச் சென்று வருகிறேன். 2011ல் புதிய எழுச்சியோடு அதிரவைப்போம்.''

“தேர்தலில் தில்லுமுல்லு செய்து எங்களைத் தோற்கடித்த தி.மு.க.விடம் எப்படி நாங்கள் நெருங்க முடியும்?”

தேர்தலுக்கு முன், நீங்கள் தி.மு.க. கூட்டணியோடு செல்ல விரும்பியதாகச் சொல்லப்பட்டதே?

''எல்லாம் வாரப் பத்திரிகைகள் கிளப்பி விட்ட வதந்திகள். பா.ம.க.வைப் பற்றி ஏதாவது எழுதுவது மீடியாவுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது. 'எங்கள் அணியில் இருங்கள்' என்று காங்கிரஸ் எங்களை அழைத்தது. 'தி.மு.க. உங்களோடு இருக்கும்போது நாங்கள் எப்படி அங்கே வர முடியும்?' என்று சொல்லிவிட்டோம். துணை முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றதும் வாழ்த்து சொன்னது அரசியல் நாகரிகம் கருதித்தானேயொழிய தி.மு.கவை நெருங்குவதற்காக அல்ல.''



உங்கள் தந்தை தேர்தலுக்குப் பின்னர் ஜெ.வைச் சந்திக்கவில்லையே?

''எங்கள் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றதால் அந்தத் தலைவர்கள் வென்ற வேட்பாளர்களுடன் ஜெயலலிதாவைச் சந்தித்தார்கள். ஆனால் நாங்கள் வெற்றி பெறவில்லையே. ஆனாலும் எங்கள் ஐயா தேர்தலுக்குப் பின் ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டார். எங்கள் தோழமை உறுதியாகத் தொடர்கிறது. சட்டமன்றத்தில் அ.இ.அ.தி.மு.க.வுடன் இணைந்துதானே செயல்படுகிறோம்.''

- ப்ரியன்

ஹாலிவுட் ஸ்டைலில் ஒரு தமிழ்ப் படம் என்று பரவலாகப் பாராட்டுப் பெற்ற 'குளிர் 100°' ஒளிப்பதிவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு எடுக்கப்பட்ட படம். ஒளிப்பதிவு செய்தவர் எல்.கே.விஜய். இவர் ஒளிப்பதிவாளர் அரவிந்த்கிருஷ்ணாவிடம் பல படங்களில் பணியாற்றியவர். அவரிடம் ஒரு மினி பேட்டி...

'குளிர் 100°' அனுபவம்...?

''ஊட்டியில் இது வரை பல படங்களின் படப்பிடிப்பு நடைபெற்று இருந்தாலும் அந்த இடங்களைத் தவிர்த்து விட்டு, புதுப்புது லொகேஷன்களைத் தேடி அலைந்தோம். டிராலி, கிரேன் போன்ற காமெரா உபகரணங்களை ரிஸ்க்கான மலைப்பாதையில் கொண்டு வந்து படப்பிடிப்பு நடத்தினோம். நிறைய காட்சிகளை 'டே ஃபார் நைட்' முறையில் படமாக்கினோம். ஒரு காட்சியைப் பகலில் எடுத்த பிறகு அந்தக் காட்சியை இரவு நேரத்துக்கு இயல்பானதாக மாற்றுவதுதான் 'டே ஃபார் நைட்'. 'குளிர் 100°' படத்தில் ஹீரோ, ஹீரோயின் சந்திக்கும் ஏரி, பசங்க மோதிக்கொள்ளும் இடம்... என நிறைய காட்சிகளை 'டே ஃபார் நைட்டில்' எடுத்தோம். இது ஒளிப்பதிவுக்குச் சவால் என்பதால், ஹோம்வொர்க் செய்து பணியாற்றினேன்.''

ஒளிப்பதிவுக்குச் சவால்!

இயக்குநர் அனிதா உதீப்?

''புதுமையா எந்தவொரு விஷயத்தைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்வார். முதல் படத்திலேயே சூப்பர் 35 அகேலா கிரேன், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என படத்துக்குத் தேவையான அளவு செலவு செய்தார். இந்தப் படத்துக்காக நூற்றுக்கணக்கான ஒளிப்பதிவாளர்களிடம் நேர்முகத் தேர்வு நடத்தினார். அதில் நான் தேர்வு செய்யப்பட்டேன்.''

'டி.ஐ.' ப்ளஸ்ஸா; மைனஸ்ஸா?

''எல்லா விஷயத்தையும் 'டி.ஐ.'ல் சரிசெய்ய முடியாது. படப்பிடிப்பின் போதே திட்டமிட்டுப் படமெடுத்தால்தான் 'டி.ஐ.' கைகொடுக்கும். இந்தப் படத்தில் படப்பிடிப்பின் போது பேக்ரவுண்டுக்குரிய கலருக்கேற்ப லைட்டிங் செய்து படப்பிடிப்பு நடத்தினோம். அதனால் 'டி.ஐ.' செய்யும்போது ரியல் கலர் கொண்டுவர முடிந்தது.''

அடுத்து?

''மதுமிதா இயக்கும் 'கொலகொலையா முந்திரிக்கா'. நானும் மதுமிதாவும் 'பச்சைக்கிளி முத்துச்சரம்' படத்தில் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினோம். காமெடிக்கு முக்கியத்துவம் உள்ள இந்தப் படத்தை, சூப்பர் 16 முறையில் படமாக்குகிறோம்!''

- விஜயன்




– எல்.கே.விஜய்



● குளிர் 100°



கல்கி



2009 ஜூலை 19
விரோதி ஆடி 3
மலர் : 67
இதழ் : 51


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


ஜனநாயகத்துக்கு வேட்டு வைக்கும் பட்ஜெட்!

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் உந்துதல் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார் பிரணாப் முகர்ஜி! கிராமப்புறத் திட்டங்களுக்கு ஏராளமான தொகை ஒதுக்கி, அதன் மூலமாகப் பெறும் வளர்ச்சியைக் கொண்டு பட்ஜெட் பற்றாக்குறையைப் பெருமளவுக்கு ஈடுகட்டி விடுவார்களாம்! ''இது திட்டமிட்ட 'ரிஸ்க்' '' என்கிறார் நிதியமைச்சர். ஆனால், பட்ஜெட்டில் 'ரிஸ்க்' இருக்கும் அளவுக்குத் திட்டமிடல் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை!

கிராமப்புற முன்னேற்றத்துக்கு ஒதுக்கிய தொகையில் கணிசமான அளவு, ஏற்கெனவே அமுலில் உள்ள கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கே சரியாகிவிடும். இந்த ஒதுக்கீடு 144 சதவிகிதம் அதிகரிக்கப்படவிருக்கிறது! இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு நிரந்தர வேலை வாய்ப்புகூட உருவாகப் போவதில்லை; எல்லாமே தினக்கூலி வினியோகமாகச் சிதறிப்போய்விடப்போகிறது. அவ்வாறிருக்க, வளர்ச்சி எங்கேயிருந்து வரும்? அரசுக்கு வருவாய் எவ்வாறு பெருகும்!?

உணவு பதனிடும் தொழில்களுக்கு ஊக்கம் தரப்படும், கிராமப்புற அடிப்படை வசதிகள் பெருக்கப்படும், மானியங்கள் நேரடியாக உழவர்கள் கைகளுக்குச் சென்றடைய திட்டங்கள் உருவாக்கப்படும் என்றெல்லாம் பட்ஜெட் 2009 உறுதி அளித்தாலும், இவையெல்லாம் நிகழ்ந்து, விளைச்சல் பெருகி, விவசாயிகள் பயனடைந்து, அதன் பின் பொருளாதாரம் முன்னேறுவதற்கு மிக நீண்ட காலம் ஆகும்.





ஆனால், இந்த பட்ஜெட்டின் பற்றாக்குறையோ, மொத்த உற்பத்தியில் 6.8 சதவிகிதம்! கடந்த ஆண்டு இது 2.7 சதவிகிதம்தான் இருந்தது என்றாலும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அவ்வாறிருக்க, இவ்வாண்டு விழப்போகும் பலத்த அடி குறித்து கற்பனை செய்யவே அச்சமாக இருக்கிறது! அதிலும், உலகப் பொருளாதார உருக்கம் காரணமாக, நமது ஏற்றுமதிகளும் வெகுவாகக் குறைந்திருக்கும் நிலையில், நமது பொருளாதாரம் அடியை அல்ல; இடியையே தாங்க வேண்டியிருக்கும்.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பெறக்கூடிய தொகையை பட்ஜெட் பற்றாக்குறையை பகுதியளவில் ஈடுகட்டுவதற்கு, இந்த அரசு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அதிகம். அவ்வாறு நிகழ்ந்தால், அது வடிகட்டிய அநீதி. பொதுத்துறை நிறுவனங்கள் மக்களின் சொத்து. அவற்றை விற்றுப் பெறும் தொகையை மக்கள் பயனடையும் வகையில் முதலீடு செய்வதே நியாயம். மேலும், தனியார்மயமாக்கலுக்கு அரசியல் ரீதியாகவும் தொழிற்சங்க ரீதியாகவும் கடும் எதிர்ப்பு எழும்.

எல்லாவற்றையும் விடக் கொடுமை, தொழில்-வர்த்தக நிறுவனங்களால் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் நன்கொடைக்கு, நூறு சதவிகிதம் வருமான வரிவிலக்கு அளித்திருப்பதுதான்! இச்சலுகை எதற்கு? அரசியல் கட்சிகளென்ன அறநிலையங்களா அல்லது பொதுநலச் சேவை செய்யும் அறக்கட்டளைகளா? அவை பணப் பெருச்சாளிகளின் புகலிடமாகத் தானே ஏற்கெனவே இயங்கி வருகின்றன! வரிவிலக்கு அறிவிப்பு மூலம், இந்த கொழுத்த பெருச்சாளிகளுக்குக் கூடுதல் தீனி போட்டு, ஜனநாயகத்துக்கு வேட்டு வைத்திருக்கிறது பட்ஜெட். இதன் மூலம், பணத்துக்காக வோட்டு என்பது பகிரங்க நடைமுறையாகிவிடும். ஜனநாயகத்தைப் பணநாயகமாக்க வல்ல இந்த அறிவிப்பை எதிர்த்து, உடனடியாக உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு செய்து, நீதி கேட்பதே நல்லது. யாரும் மனு செய்யாத பட்சத்தில், உச்சநீதிமன்றமே தன்முனைப்பாக (suo moto) இப்பணியை மேற்கொள்ளலாம். ●

பத்தே நிமிஷம்!



ஆஃபீஸிலிருந்து களைப்பாகத் திரும்பி வந்த கண்ணனுக்கு ஒரே பசி. ஆஃபீஸ் டென்ஷன் அவனுக்குப் பசியைத் தூண்டிவிடும். அப்படி ஒரு வியாதி அவனுக்கு.

''மீனா சீக்கிரமா ஏதாவது பண்ணேன். டீ.வி.யிலே பார்த்த எதையாவது ட்ரை பண்ணாதே. நேரமாயிடும்.''

''சும்மா இருங்க. இதோ ஆரம்பிச்சிட்டேன்.''

கண்ணன் பேப்பர் படிக்க ஆரம்பித்தான். ''ஏங்க? வாசனை வருதா?'' என்று ஆவலோடு கேட்டாள் மீனா.

''வாசனையா இது? ஏதோ கரிக்கிறதே!'' என்று முணுமுணுத்து மூக்கைச் சுளித்தான்.

கண்ணன் புத்தி சட்டென மாறியது. ''மீனா, அவசரப்படாதே. மெதுவாக சமைச்சு வை. நான் க்விக்கா ஹோட்டலுக்குப் போய், லைட்டா ஏதாவது சாப்பிட்டுட்டு வரேன்..''

''கிளம்பாதீங்க. பத்தே நிமிஷம் வெயிட் பண்ணுங்க'' என்று சிணுங்கினாள் மீனா.

'பத்து நிமிஷத்தில் ரெடியாமே!' கண்ணனுக்கு மாட்டிக்கொண்டோமே என்று வருத்தம்.

சாய்ந்து உட்கார்ந்து பேப்பரால் முகத்தை மூடிக் கொண்டான்.

சரியாகப் பத்தாவது நிமிஷம். ''பேப்பரைக் கீழே இறக்குங்க...''

''அதுக்குள்ளேயா முடிச்சுட்டே!'' என்றபடி பேப்பரை இறக்கிப் பார்த்தவனுக்கு அதிர்ச்சி.

மீனா எதிரே நின்றாள். உடை மாற்றிக் கொண்டு தயாராக...

''வாங்க ஹோட்டலுக்கே போகலாம். அடுப்பை அணைச்சுட்டேன்'' என்று கணவனையும் ஆசையாக அணைத்தாள்.

பாலா விஸ்வநாதன்

வீட்டுக்கு வந்த விட்டலன்!

பிறப்பால் குலத்தில் மாறுபட்டிருந்தாலும் அந்தண ஒழுக்க விதிமுறைகளையே பின்பற்றினார் சோக்கா மேளர் பிறப்பின் காரணமாக தமக்கு இழைக்கப்பட்ட அவமரியாதைகளையும் இன்முகத்துடனேயே ஏற்றுக் கொண்டார்!

''சமைக்கும் இடத்தில் நாய் நிற்பது போல பெரும் மந்திரங்களால் சூழப்பட்ட உன் ஆலயத்துக்கு வெளியே நான் இருக்கிறேன்'' என்றார். எனினும் விட்டலனின் கருணைப் பார்வை நிச்சயம் தம் மீது படிந்திருக்கும் என்பதில் அவருக்கு ஐயமே இல்லை. ''சூரியன் வெகு தொலைவிலிருந்தே தாமரையை மலரச் செய்வதில்லையா, அதுபோலவே பாண்டுரங்கன் எங்கு இருந்தாலும் தன் அருட்பார்வையினால் என்னை மனம் குளிரச் செய்கிறான்'' என்று ஓர் அபங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

''எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான்'' என்று அவர் கூறியதை உயர்குலம் என்று கருதப்பட்டவர்களில் சிலரால் ஏற்க முடியவில்லை. சோக்காமேளரை வாய்விட்டு ஏசினர்.

இதன் காரணமாக ஒருநாள் வருத்தத்துடன் வீடு திரும்பினார். விட்டலன் அவரது வீட்டுக்கு வந்தான்.

பண்டரிபுர மகாத்மியத்தில் இது ஒரு சிறப்பு. தம் பரம பக்தர்களை நேரில் சந்திப்பதை விட்டலன் வாடிக்கையாகவே கொண்டிருந்தான். அவர்களும் இதன் காரணமாக ஆனந்தம் அடைந்தார்களே தவிர எதிர்பாராத அதிர்ச்சியில் திக்கு முக்காடியதாகத் தெரியவில்லை. எப்படியும் நேரில் வருவான் என்ற பரிபூரண நம்பிக்கை இருந்ததாலோ என்னவோ விட்டலனைக் கண்டவுடன் பக்தியும் ஆனந்தமும் கொண்டாலும் மற்றபடி இயல்பாகவே நடந்து கொண்டுள்ளனர்.

தம் வீட்டுக்கு வந்த விட்டலனின் காலடியில் விழுந்து வணங்கினார் சோக்கா மேளர்.

''சோக்காமேளா, ஏன் உன் முகம் வாடியிருக்கிறது?'' என்று பாண்டுரங்கன் கேட்க, ''பின் என்ன, உன் கோயில் வாசலில் நின்று தத்துவங்களைப் பாடினால்கூட எதிர்ப்பு வருகிறதே, வருத்தம் தோன்றாதா?'' என்று மீண்டும் வருந்தினார் சோக்காமேளர்.

''கவலைப்படாதே. இனி நீ கோயில் வாசலுக்கு வர வேண்டாம். நானே இங்கு வருகிறேன்'' என்றான் விட்டலன்.

என்றாலும் சோக்காமேளர் இதில் முழு ஆனந்தம் அடைந்துவிடவில்லை. ''மிகவும் நன்றி விட்டலா! ஆனால் ஆலயத்துக்குள் உன்னைத் தரிசிக்கும் பாக்கியம் அலாதியாயிற்றே. அந்தப் பேறு எனக்குக் கிடைக்கவில்லையே'' என்று கண்ணீர் வழியக் கூறினார் சோக்காமேளர்.



அருண் சரண்யா

நாமதேவனுடன் சாப்பிடும்போதெல்லாம் நான் உன்னையும் தவறாமல் நினைத்துக் கொள்வேன்'' என்று விட்டலன் கூற, ''நான் பெரும் அதிர்ஷ்டசாலி'' என்று தழுதழுத்தார் சோக்காமேளர்.

அதே சமயம் கருவறைக்குள் எழுந்த பேச்சொலி சாலையில் சென்று கொண்டிருந்த சிலரை வியக்கவைத்தது. இந்த நேரத்தில், அதுவும் வெளிக் கதவுகள் பூட்டியிருக்கையில், யார் கோயிலுக்குள் பேசுவது?

பூட்டைத் திறந்து உள்ளே போனவர்கள் கருவறையில் சோக்காமேளரைக் கண்டு திடுக்கிட்டனர். கூக்குரல் இட்டனர். ''எதற்காக உள்ளே வந்தாய்? கோயில் நகைகளைத் திருடிச் செல்ல எண்ணினாயா?'' என்று குரல் கொடுத்தார்கள்.

''பாண்டுரங்கன்தான் என் கையைப்பற்றி உள்ளே அழைத்து வந்தார்'' என்றார் சோக்காமேளர்.

அங்கிருந்தவர்களில் பாதிப் பேர் இதை நம்பவில்லை. மீதிப்பேர் 'இவனுக்கா இந்தப் பேறு!' என பிரமிப்படைந்தனர். ஆனால் அனைவருக்கும் ஓர் எண்ணம் எழுந்திருந்தது. 'இதை மீண்டும் நடக்கவிடக் கூடாது.'

''நீ இனிமேல் சந்திரபாகா நதியின் எதிர்க்கரையில்தான் வசிக்கவேண்டும். அதாவது பண்டரிபுர எல்லைக்குள் நீ நுழையக்கூடாது. இதற்குச் சம்மதிக்காவிட்டால் உன் மீது திருட்டுப்பழி சுமத்துவோம்'' என்றனர்.

''ஒவ்வொரு துவாதசி காலையிலும் உன்னுடைய வீட்டில்தான் உணவு உட்கொள்வதாக இருக்கிறேன்!''

பக்தனின் குறையை உடனே போக்கத் தீர்மானித்தான் பாண்டுரங்கன். ''என் வீடு என்பதே உன்னைப் போன்றவர்களின் இதயம் தானே. இருந்தாலும் உன்னுடைய ஆலய தரிசனக் குறையை இப்போதே சரிசெய்து விடுகிறேன்'' என்றபடி சோக்காமேளரின் கையைப் பிடித்துக்கொண்டு விடுவிடுவென தம் ஆலயத்துக்குள் நுழைந்தான் விட்டலன்.

கருவறைக்குள் தரிசனம் அளித்தபிறகு அங்கேயே இருவரும் நண்பர்கள்போல் பேசிக்கொள்ளத் தொடங்கினர்.

''நீ எப்போது வேண்டுமானாலும் இங்கு வரலாம். சொல்லப்போனால்

அபங்க அமுதம்

'அனாதி நிர்மள வேதா சே ஜே மூள
பரப் ரஹ்ம ஸோஜ்வள விடேவரீ
கர தோன்ஹீ கட ராஹிலாஸே உபா
நீளவர்ண ப்ரபா பாங்கதஸே
ஆனந்தா சா கந்த பாவூலே ஸாஹிரீ
சோகா ம்ஹணே ஹரீ பண்டரீயே'

- பக்த சோக்காமேளர்

'தொடக்கம் என்பதே இல்லாத, வேதங்களின் மூலமான பரபிரம்மம், விட்டலனாக செங்கல்மீது ஜொலிக்கிறது. கைகளை இடுப்பில் ஊன்றி நிற்கிறது. அதன் தேகத்தில் ஜோதி பிரகாசிக்கிறது. பண்டரிபுரத்திலுள்ள இந்த ஆனந்த ஊற்றை அடைய உங்களை அருகதை உடையவர்களாக ஆக்கிக்கொள்ளுங்கள்.'



* பண்டரிபுர வீதியில்...

சோக்காமேளர் நதியின் மறுகரையில் வசிக்கத் தொடங்கினார். அபங்கங்களை இயற்றிப் பாடுவதை மட்டும் அவர் குறைத்துக் கொள்ளவே இல்லை.

அடுத்த சில நாட்களில் ஏகாதசி வந்தது. அன்று முழுவதும் உணவைத் துறந்தார் சோக்காமேளர். இரவு முழுவதும் பாண்டுரங்கனின் நாமாவளியில் பஜனை செய்தார். மறுநாள் விடியற்காலையில் சந்திரபாகா நதியில் நீராடினார். பிறகு தம் வீட்டை அடைந்தார்.

''நானும் உன்னுடன் துவாதசி பாரணை செய்யலாமா? சொல்லப்போனால் ஒவ்வொரு துவாதசி காலையிலும் உன்னுடைய வீட்டில்தான் உணவு உட்கொள்வதாக இருக்கிறேன்'' என்று ஒரு குரல் வாசற்புறமாகக் கேட்டது.

அங்கு பார்வையைத் திருப்பிய சோக்காமேளருக்குத் தீராத மகிழ்ச்சி. அங்கு விட்டலன் நின்றுகொண்டிருந்தான்.

ஒவ்வொரு துவாதசியிலும் கண்ணன்

"சோக்காமேளா... என் வீடு என்பதே உன்னைப் போன்றவர்களின் இதயம்தானே!"

தம் குடிசைக்கு வரப் போகிறானா? மகிழ்ச்சியின் எல்லையில் மூழ்கினார் சோக்காமேளர். விட்டலன் வாக்குத் தவறவில்லை. சொன்னபடியே ஒவ்வொரு துவாதசி அன்றும் காலையில் சோக்காமேளருடன் உணவருந்தினான்.

ஆனால் இதன் தொடர்பாகவும் சில சோதனைகள் நேர்ந்தன.




வண்ணப்படம் :
வேதா

படம்: ஸ்ரீஹரி

ரா.நாகப்பன்

அது



ஒரு பின்மாலைப் பொழுதில்
சாளரம் திறந்து
உள்நுழைந்தது அது!

நெரிசல் சாலையில்
பயணித்த அதன் விலா எலும்புகள்
போக்குவரத்துக் காவலர்களின்
சிநேகப் புன்னகைபோல்
நிலை குத்திப்போய்...

தன் திசைகளின் கதவுகளை
யாரோ பூட்டிச் சென்றதாய்
வியர்த்துப்போய்
சொல்லிக்கொண்டது!

கள்ளச்சாவி உபயத்தால்
திறக்க எத்தனித்த
என் இயலாமையின் இடைவெளியில்
அது துள்ளிக்குதிக்க
கைக்குட்டை நீட்டிய என்னைப்
பரிதாபமாய்ப் பார்த்தது!

முழுபலத்தையும் சேர்த்து அழுத்த
என் வீட்டு
மீன் தொட்டிக்குள் நுழைந்து
தண்ணீர் குடித்துக் கரையேறியது...

கடைசியாய்
என்னை மீனாக மாற்றிப்போனதைச்
சொல்லிப்போயிருக்கலாம்!

வலைப்பதிவர்கள் கதை, கவிதை, கட்டுரை, அனுபவம், சிந்தனை எனப் பல வகையான எழுத்துக்களைப் பதிவிடுகின்றனர். எழுத்து ஊடகங்களில் சீரிய கவனத்தைத் தற்போது பெறத்துவங்கியிருக்கும் இவர்களின் எழுத்துப் பதிவுகள், காலத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றன. கவனம் ஈர்க்கும் சில பதிவர்களைப் பற்றிய அறிமுகம் இதோ உங்களுக்காக.



ப்ளாக்ஸ்பாட்.காம்



நர்சிம் - http://www.narsim.in

இலக்கியத்துக் கம்பரை மேற்கோளாக்கி எழுதுவது முதல் காதல், பெண்கள், அரசியல், நையாண்டி என சகலத்தையும் கலந்து பதிவிடும் இவரது எழுத்துக்கள் தனி வகையானவை. எள்ளல் கலந்த நடை, தடையற்ற வாசிப்பை அளிக்கும் சரளமான நடை என எழுதும் நர்சிம்மின் சமீபத்திய சிறந்த பதிவு 'மிஷேல் ஃபூக்கோ' பற்றிய அறிமுகப் பதிவு.

ஷீ-நிசி - http://nisiyas.blogspot.com

வித்தியாசமான பார்வையில் இவரது கவிதை ஆக்கங்கள் நறுக்குத் தெறித்தாற்போல் சிந்தனைச் சொல்லாடல்களாக விளங்குகின்றன. படங்களும் கவிதையுமாக இவரது பக்கங்கள் வசீகரிப்பவையாக உள்ளன.

ஆதவா - http://aadav.blogspot.com

வித்தியாசமான சிந்தனைகள், கவிதையில் நவீனச் சிந்தனைகள் என இந்த இளையவரின் பதிவுகளும், 'குழந்தை ஓவியம்' என்ற இவரது வலைத்தள வடிவமைப்பும் மிக அழகாக உள்ளன. கூரிய கவித்துவப் பார்வையுடன் வாழ்வனுபவங்களை கவிதையாக, கதையாக, கட்டுரையாகப் பதிவாக்குவதில் சிறந்து விளங்குகிறார்.





கார்த்திகைப்பாண்டியன் - http://ponniyinselvan-mkp.blogspot.com

பதிவு வகைகளில் வித்தியாசமான உத்தி இவருடையது. நேரடிப் பேச்சு நடை இவரது பதிவுகளைப் படிக்கும்போது நண்பர் ஒருவருடன் உரையாடும் உணர்வு ஏற்படுகிறது. சினிமா விமர்சனம், சமூகச் சிந்தனைகள், நகைச்சுவை, அனுபவம் என்று எழுதுகின்ற இவரது எழுத்துக்கள் ரசிப்புத்தன்மை கூடியவை. சிநேகத்துடன் எழுத்தினைக் கொணரும் படைப்புகள் இவருடையவை.

ச.முத்துவேல் - http://thooralkavithai.blogspot.com

வாழ்வனுபவங்களைக் கவிதையாக்கும் இவரது எழுத்துக்கள், காண்கின்ற காட்சிகளை கவிதைகளாக நம்முன் விரிக்கின்றன. ஆரம்ப எழுத்துகளிலிருந்து மாறுபட்டு கூர்மையான சிந்தனையுடன் பாசாங்கற்று இருக்கின்றன இவரது கவிதைகள்.

கவிஞர் இரா. இரவி - www.kavimalar.com

மதுரை சுற்றுலாத்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவர் கவிதைச் சாரல், ஹைக்கூ கவிதைகள், விழிகளில் ஹைக்கூ, உள்ளத்தில் ஹைக்கூ, என்னவள், நெஞ்சத்தில் ஹைக்கூ, இதயத்தில் ஹைக்கூ, கவிதை அல்ல விதை என எட்டு நூல்கள் எழுதி உள்ளார். எட்டு நூல்களிலுள்ள கவிதைகளையும், கவியரங்கக் கவிதைகளையும், புகைப்படங்களுக்கான ஹைக்கூ கவிதைகளையும், நகைச்சுவைத் துணுக்குகளையும், இணையதளத்தில் பதிப்பித்து உள்ளார்.

- சயூரா

"கோயில் நிலத்தை விற்கலாமா?"

"கோயில் நிலங்களை அரசின் மற்ற துறைகளுக்கு, சந்தை விலையில் பொதுப் பயன்பாட்டுக்கு விற்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது'' என்று அறநிலையத் துறையின் அமைச்சர் பெரியகருப்பன் சட்டமன்றத்தில் அறிவித்தது இந்து இயக்கங்களிடையே கடும் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது.

"நமது கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலங்கள் 'ஏனோ தானோ'வென்று கொடுக்கப்பட வில்லை. அந்த நிலங்களிலிருந்து வரும் வருமானம் தினசரி பூஜைகளுக்காகவும் உற்சவங்களை நடத்து வதற்கும் வருமானத்தை ஈட்டுவதற்காகவும் கொடுக்கப் பட்டது. அதை யாருக்கு விற்கவும் அரசுக்கு உரிமை யில்லை'' என்று சீறுகிறார் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத்.

"காலியாக, உபயோகப்படாத, உபயோகத்தில் இல்லாத நிலங்களைத்தானே விற்கப் போகிறோம். அதிலும் அரசுத் துறைக்குத்தானே என்ற சொத்தை வாதம் எடுபடாது. பயன்பாட்டில் இல்லையென்றால் கோயில் வருமானத்துக்கு ஏற்றபடி மாற்றுவது அரசின் பொறுப்பு. தவிர 'சந்தை விலை' என்று சொல்வதே தவறு. இன்றிருக்கும் சந்தை விலை, நாளை உயரும். எனவே, கோயில் கைவசமே அந்த நிலம் இருந்தால், கோயில் சொத்துக்களின் மதிப்பு உயரும். அப்படியே விற்றால், வாங்கும் அந்த அரசுத் துறை சிறிது காலம் கழித்து பல காரணங்களுக்காக மீண்டும் வேறு யாருக் காவது விற்க முயலும். அப்போது அதை வாங்கு பவர்கள் கடவுள் மற்றும் ஆன்மிகத்துக்கு எதிரான கோஷ்டிகளாக இருந்தால் என்ன ஆகும்?'' அப்படி யென்றால் மக்கள் பயன்பாட் டுக்கு கோயில் நிலங்களை - குறிப்பாக, மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள் - கட்ட எடுக்கக்கூடாதா என்றால், "கோயில் நிலங்கள் அப்படிப் பொதுப் பயன்பாட்டுக்குத் தேவையென் றால் குத்தகைக்கோ அல்லது வாட கைக்கோ எடுத்துக்கொள்ளட்டும். அப்போது ஒரு தொடர் வருமானம் கோயிலுக்கு வந்து கொண் டிருக்கும்.

அரசுத் துறைக்கென்ன, வேறு யாருக்கும் கோயில் நிலங்களைக் கிரயமாகக் கொடுக்கவே கூடாது. மற் றொன்று நமது கோயில் களுக்குச் சொந்தமான நிலங் களில் உள்ள குத்தகைதாரர்கள் சட்ட சந்துகளில் புகுந்து கொண்டு குத்தகைப் பணம் கொடுக்காமல் ஏமாற்றி வரு கிறார்கள். ஆயிரக்கணக்கான கோடி நிலுவையில் இருக் கிறது. இதை அரசு முதலில் வசூல் செய்யட்டும். அதற்கு



வழிசெய்யும் விதத்தில் குத்தகைச் சட்டத்திலிருந்து கோயில் நிலங்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும். அதே போல் கோயில் நிலங்கள் 40 சதவிகிதம் ஆக்ரமிப்பில் இருக்கிறது. வழக்குகளை விரைந்து நடத்தி அந்த நிலங்களை மீட்கட்டும்'' என்கிறார்.

அவரது கேள்விகளை அறநிலையத் துறை அமைச்சர் பெரியகருப்பன் முன் வைத்தோம்.

''கோயில் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில், ஆன்மிகவாதிகளை விட முதல்வருக்கு நிறைய அக்கறை இருக்கிறது. எங்களை இந்த வகையில் அவ்வப்போது எச்சரித்து சரியான வழியைக் காட்டுகிறார். இந்த நிலங்கள் தனியாருக்கு விற்கப்படாமல் அரசின் மற்றொரு துறைக்கேதான் விற்கப்படவிருக்கின்றன. சந்தை விலை ப்ளஸ் அதில் 50 சதவிகிதம் கூடுதலாகத்தான் விற்கப் போகிறோம். பொதுப் பயன்



✱ பெரியகருப்பன்



✱ அர்ஜுன் சம்பத்



பாட்டுக்குப் பெரிய அளவில் நிலம் தேவைப்படாது. மின் வாரிய சப்-ஸ்டேஷன், மினி மருத்துவமனை போன்றவற்றுக்கு சென்ட் கணக்கில் இடம் தேவைப்படும். அப்படி விற்றுக் கிடைக்கும் பணம் கோயில் கணக்கில் வரவு வைக்கப்படும். உதாரணமாகச் சொல்வதென்றால் மயிலை கபாலீஸ்வரர் கோயில் நிலம் சென்னை பறக்கும் ரயில் திட்டத்துக்காக விற்கப்பட்டது. 17 கோடி வருமானம். அது கோயில் கணக்கில் போடப்பட்டு, கோயிலுக்காகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் எந்தக் காரணம் கொண்டும் ஆன்மிகத்துக்கு விரோதமான காரியங்களுக்கோ அல்லது நாத்திகக் குழுக்களுக்கோ அந்த இடம் விற்கப்படமாட்டாது. இதுகுறித்து அரசு மிகவும் விழிப்புடன் இருக்கும். கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பில் இருக்கும்போது மட்டுமே, அறநிலையப் பணிகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன. ஒரு அரசுத் துறையின் நிலம் மற்றொரு அரசுத் துறைக்கு பொதுப் பயன்பாட்டுக்குத் தேவையென்றால் 'லாப நஷ்டம்' இல்லாமல் எடுத்துக் கொள்ள முடியும். இருந்தும் 'கோயில் சொத்துக்கள் கோயிலுக்கே' என்ற அடிப்படையில்தான் முடிவு எடுக்கப்படுகிறது. 'கோயில் நிலம் மக்கள் நிலம், அதை விற்க அரசுக்கு உரிமை இல்லை' என்ற வாதம் சரியல்ல. காரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் மக்களுக்காக நடத்தப்படும் ஜனநாயக ஆட்சி இது. அப்படிப்பட்ட ஆட்சியில் பொது நன்மைக்காக சில காரியங்களைச் செய்ய முனைவது எப்படி தவறாகும்?''

- ஸ்ரீநி

சற்றே பெரிய குறும்படம்

மனசுல இருக்கு ப்ரேக்!

மெயின் ஸ்ட்ரீம் ஃபிலிம் என்கிற வெகுஜன படத்துக்கும் பேரலல் ஃபிலிம் என்கிற மாற்று சினிமாவுக்குமான இடைவெளி குறைந்து திரை இலக்கியம் கொஞ்சம் போஷாக்குடன் வளரத் துவங்கியுள்ள காலகட்டம் இது. எழுத்திலிருந்து திரைக்கும் திரையிலிருந்து எழுத்துக்குமான பண்டமாற்றம் சரியான விகிதத்தில் நடந்தேறும் சூழலின் நல்ல உதாரணம் 'விசாரணைக் கமிஷன்' என்கிற குறும்படம். சாகித்ய அகாடமி பரிசு பெற்ற எழுத்தாளர் சா.கந்தசாமியின் 'விசாரணைக் கமிஷன்' என்கிற நாவலை சினிமா இயக்குநர் வஸந்த் (சற்றே பெரிய) குறும்படமாக்கியுள்ளார்.

வெகுஜன சினிமாவைக் கூட நாவலின் தன்மைக்கு மாற்ற முயலும் தனித்துவமான திரைமொழி கொண்ட வஸந்த், நாவலின் ஆத்மாவை மட்டும் உருவி எடுத்து காட்சிப்படுத்தியிருந்த 'விசாரணைக் கமிஷன்' குறும்படத்தை ஃபிலிம் சேம்பரில் சமீபத்தில் வெளியிட்டார்கள். ஓர் ஆச்சரியம்...! இப்படத்தை தூர்தர்ஷன் தயாரித்துள்ளது.

கோலிவுட்காரர்களும் இலக்கியவாதிகளும் சங்கமித்திருந்த இந்நிகழ்ச்சியில்...

''இந்தப் படத்தைப் பார்த்த பிறகு எனக்கு உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. மனசே சரியில்லை. இதையே நீங்க விமர்சனமா வெச்சுக்கலாம். வன்முறை போன்ற எல்லாவற்றையும் கலையில வெளிப்படுத்த அவசியமில்லை. என்னோட சிறுகதையை குழந்தைகிட்ட கொடுத்துக்கூட தைரியமா படிக்கச் சொல்லலாம்'' என்ற விமர்சனத்தை ஒரு குழந்தையின் சுத்த மனசோடு வெளிப்படுத்தினார் அசோகமித்ரன்.

இந்தக் குறும்படம் 67 நிமிடம் ஓடிய நெடும் படம். குறும்பட இலக்கணத்தைத் திட்டமிட்டு மீறியிருந்தாலும் கத்தரிக் கோலுக்கு நிறைய வாய்ப்பிருந்தது. கதைச் சுருக்கம் இதுதான்.

* விசாரணைக் கமிஷன் குறும்படத்தில்...





* வஸந்த்

கதாநாயகன் பஸ் கண்டக்டர். நாயகி ஆசிரியை. வீட்டில் செல்லப் பிராணியாய் ஒரு நாய். இந்தக் குடும்பம் தான் கதைக்களன்.

ஆணாதிக்கத் திமிர் வெளிப்படும் குடும்பச் சண்டைக் காட்சிகள், வீணை நரம்புகள் வேறு வேறா இருந்தாலும் கூடலில் மீட்டும்போது ஒன்றிணைந்து ஒருமித்த காதல் இசையை எழுப்புவது போல (உதாரணம் உபயம் - கலீல் கிப்ரான்) குடும்ப அந்நியோன்யக் காட்சி

கள் என விரிகிறது. இதனூடாக சாதியம், பெண்ணியம், சமூகம் போன்ற மதிப்பீடுகள் குறியீடாக வந்து போகின்றன.

ஒரு ஊர்வலம். நகரமே பரபரப்பாகிறது. கதாநாயகன் நடத்துநராகப் பணிபுரியும் பேருந்து, ஊர்வலம் வரப்போகும் பாதையில் பழுதாகி நிற்க, டிரைவருக்கும் போலீஸ் அதிகாரிக்கும் தகராறாய் மாறுகிறது. சமரசம் செய்ய வந்த கதாநாயகனை போலீஸ் இழுத்துச் செல்கிறது. போக்குவரத்து ஊழியர்களுக்கும் போலீஸுக்குமான யுத்தமாக அது மாறுகிறது. காவல் நிலையத்தில் போலீஸாரால் கதாநாயகன்



கொல்லப்படுகிறான். நடந்த ஊர்வலத்தில் சிக்கி மாண்டதாக போலீஸ் கூற, உண்மையைக் கண்டறிய ஒரு நபர் விசாரணைக் கமிஷனை அரசு நியமிக்கிறது.

இக்கதை நாவலாக வந்தபோது, 'இது கோவலனை ஞாபகப்படுத்துகிறது. கோவலனுக்கு அந்தக் கதி ஏன் நேர்ந்தது என்பதுதான் நமக்குள் எழும் கேள்வி' என அப்போது விமர்சித்தார் மறைந்த ஓவியர் ஆதிமூலம். கதாசிரியர் சா.கந்தசாமி, ''இது நாவலாக வந்தபோது அரசு, நூலகத்துக்கு வாங்க மறுத்தது. இது பஸ் கண்டக்டர் கதையோ, டீச்சர் கதையோ போலீஸ் கதையோ, அரசியல் கதையோ அல்ல; இது நம்மோட கதை'' என்றார்.

அருமையான நடிகர் நடிகைகள் வஸந்துக்குக் கிடைத்தது வரம். தனிமையில் காகத்தைக் கரைய வைத்து, நோயின்போது நாயைக் குரைக்க வைத்து, மனஉளைச்சலின் போது ரயிலை ஓடவிட்டு, வசனமற்ற இடத்தில் வயலினை மீட்டி... என பத்மா ஷங்கர் இசை ரம்யம்.

''ஆக்ஸிடெண்ட் இல்லாம உன்னால எப்படி வண்டி ஓட்ட முடியுது?''

''பஸ்ஸோட ப்ரேக் என் மனசுல இருக்கு.''

''நாம கடவுள்கிட்ட எதையும் கேட்கக் கூடாது. அவரு கொடுக்கிறதை வாங்கத் தான் நமக்கு ரெண்டு கை ''

''அட, நான் இவ்வளவு நாள் உழைக்கத்தான் ரெண்டு கையின்னு நினைச்சுக்கிட்டு இருந்தேனே'' போன்ற வசன விழுதுகள் இயக்குநர் வஸந்துக்கு உபரி வேர்களாய் பலம்சேர்க்கின்றன.

கலைஞர்கள் தமக்கான சுதந்திர ருசியை இப்படியான ஊடக முயற்சிகள் மூலம் அனுபவித்து விட வேண்டும்.

- அமிர்தா

பிரபுதேவா என்னும் நடனப் புயல் ஏற்கெனவே திரை உலகைக் கலக்கி, கதற அடித்துக்கொண்டிருக்க, இளசுகளும், பெரிசுகளும், சிறிசுகளும் சேர்ந்து 'அடுத்த பிரபுதேவா'வாக கோவை ஷெரீப்பைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். விஜய் டீ.வி.யின் மூலம் தேர்வான அவரோடு ஒரு கலந்துரையாடல்.

இன்வால்வ்மென்ட்?

''கோவையில் டவுன்ஹால் சி.எஸ்.ஐ. பள்ளி மாணவன் நான். என்னால் ஒரு நொடிகூட சும்மாவே இருக்க முடியாது. நடக்கும் போது கூட ஆடிக் கொண்டேதான் நடப்பேன். மிக மிகத் துறுதுறுப்பான குறும்புக்காரனாக இருந்தேன். இசையை எப்படிக் கேட்டாலும் எந்த இடமாக இருந்தாலும் ஆட வேண்டும் என்று கால்கள் பரபரக்கும்.

பள்ளிகளிலும் சரி, வெளியே நடக்கும் போட்டிகளிலும் சரி நடனமாடி நிறையப் பரிசுகள் வாங்குவேன். ஒரு கட்டத்தில் என்னை டாலரேட் பண்ண முடியாமல், 'இனி பள்ளிக்கே வர வேண்டாம். நின்று விடு' என்று கடுமையாகச் சொன்னார்கள்.



சேனல்

நான் சரியாகப் படிக்கவில்லையே என பெற்றோர்கள் ஆதங்கப்பட்டாலும், என் விருப்பத்தைப் புரிந்துகொண்டு என் வளர்ச்சிக்கு நல்ல ஊக்கம் கொடுத்தார்கள். இன்று அதே சி.எஸ்.ஐ. பள்ளியில் என்னை அழைத்து மேடை ஏற்றி, பள்ளியின் பழைய மாணவன் என்று பாராட்டியது மிகவும் பெருமையாக இருந்தது.

எனது டாப் ட்யூன் நடனப் பள்ளியில் குழந்தைகளில் இருந்து, பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் வரை நடனப் பயிற்சி கொடுத்து நிறையப் போட்டிகளில் பங்கெடுக்க வைத்திருக்கிறேன். அவர்களை ஆட வைக்கும் போது நானும் ஆடி அதிலிருந்து நிறைய கற்றுக் கொள்கிறேன்.''

போட்டியின்போது!

''நிறைய பதற்றம், கொஞ்சம் பயம், அதிகமான எதிர்பார்ப்பு. ஒவ்வொரு சுற்றுகளாக முடிய முடிய, எனக்குள் சின்னதாக நம்பிக் கைக் கீற்று. 'சரி இனி நமது அதிகபட்சத் திறனை மிக மிகச் சிறப்பாக வெளிப் படுத்துவோம். முடிவு இறைவன் கையில்' எனத்



தொடர்ந்து ஆட ஆரம்பித்தேன். அதற்கப்புறம் நான் நிதானமாகவும் தெளிவாகவும் ஆகிவிட்டேன்.''

வெற்றியின் நடனம்...

''எனக்கா? இது எனக்கேதானா? நடப்பது நிஜமா? கனவா?' என்று ஆயிரம் முறை எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். என்னுடைய மகிழ்ச்சியில் என் மனம் அத்தனை ஆட்டங்களையும் சில நொடிகளில் ஆடி முடித்து விட்டது.

என் ஆதர்ச நாயகன் பிரபுதேவா கையால் பிரமாண்டமான பரிசுத் தொகை. அதைவிட என்னைப் பாராட்டி அவர் அணிந்



வெற்றியின் நடனம்!

திருந்த வெள்ளை கோட்டை எடுத்து என் மீது போட்டபோது, 'இதைவிட உயர்ந்த பரிசு இனி என்ன?' என்று தோன்றியது.''

பயிற்சிகள்...

''இருபது நாட்கள் விடாமல் பயிற்சி செய்தேன். தொடர்ந்து பல மணி நேரங்கள் சளைக்காமல் ஆடுவேன். இரவு ஒரு மணிக்குக் கூட வீட்டுக்குப் போவேன்.

என் அம்மாவும் சரி, என் மனைவியும் சரி (திருமணமாகி ஒரு வருடம்தான் ஆகிறது.) எனக்காகக் காத்திருந்து உணவு பரிமாறி என்னை ரிலாக்ஸ் செய்வார்கள்...''

ரசிகர்கள்...?

''பலதரப்பட்ட ரசிகர்கள், ரசிகைகள். எனது வெற்றிக்கு முக்கியக் காரணமே இவர்கள்தான். போட்டி நடந்து கொண்டிருக்கும்போது வெற்றியடைய ஊக்குவிப்புகள். ஜாதிமதபேதமில்லாமல் எனக்காகப் பிரார்த்தனைகள், அர்ச்சனைகள், பிரசாதங்கள் என வெற்றிக்காக இறைவனை வேண்டியவர்கள்.''

அடுத்த மூவ்...

''இந்தப் பரிசுத் தொகையில் பெரும் பகுதியை வைத்து ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்க வேண்டும். திறமையுள்ள, வசதி குறைவான இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து ஒரு டான்ஸ் டீமை உருவாக்க வேண்டும்.''

மைக்கேல் ஜாக்சன்?

''அவர் ஒரு சரித்திரம். கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை ஈர்த்தவர். அவர் போடும் மூன் வாக் ஸ்டெப் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆண்மையும், பெண்மையும் கலந்த அவரது இனிய குரல், அவரது தனிப்பட்ட முத்திரை. அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.'' **- ஆர்.பாலா**



ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!



புதிதாக ஒரு வேலையில் சேருபவர்கள், நல்ல பெயர் எடுக்கவும், தங்களது திறமையைக் காட்டவும் ஏதாவது செய்யப் போய், ஏடாகூடமாக முடிப்பார்கள். அப்போது கிடைக்கும் பட்டம்: 'ஆர்வக் கோளாறு'.

நான் பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளனாக சேர்ந்த புதிதில் இந்த ஆர்வக்கோளாறில் பி.எச்டி பட்டமே வாங்கிவிட்டேன்.

நான் புதியவன் என்பதால் எனக்கென்று எந்த வேலையும் தரப்படவில்லை. என்னால் சும்மா இருக்கமுடியுமா? என்ன நடக்கிறது என்பதைக் கவனித்துக் கொண்டே இருப்பேன். பி.சி. ஸார் வாயைத் திறந்து ஏதாவது வேலை சொல்லி விட்டால் போதும்; அவ்வளவு கூட வேண்டாம். சைகை காட்டினாலே போதும். அதை எனக்குத் தரப்பட்ட வேலையாக நினைத்து பாய்ந்து ஓடுவேன். ஒரு நாள் ஷூட்டிங்கில் பி.சி.ஸார் கையை நீட்டி, ''அதை ஆஃப் பண்ணுங்க'' என்று சொன்னார். அவர் கை காட்டிய திசையில், தூரத்தில் ஷூட்டிங்குக்குத் தேவையான மின்சாரத்தை சப்ளை செய்யும் ஜெனரேட்டர் இருந்தது.

''கேமராமேன் பி.சி.ஸார் பவரை ஆஃப் பண்ணச் சொன்னார். நான் அவரோட அசிஸ்டென்ட்'' என்றேன். ''என்ன ஆச்சு? யாருக்காவது ஷாக் அடிச்சிடுச்சா? இல்லை ஷார்ட் சர்க்யூட் ஆயிடுச்சா?'' என்று கேள்விகளை அடுக்கியபடியே ஜெனரேட்டரை நிறுத்திவிட்டனர். நான் பெருமிதத்துடன் திரும்பி நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று என் சீனியர்கள் ஜீவா, திரு, பாலமுருகன், எம்.எஸ். பிரபு... எல்லோரும் சூறாவளியாக என்னைக் கடந்து ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.



"நீ ரெண்டு வாரத்துக்கு ஒரு வேலையும் செய்ய வேண்டாம் ஷூட்டிங் ஸ்பாட்டில் என்ன நடக்குதுன்னு மட்டும் கவனி."

அடுத்த ஐந்தாவது நிமிடம் நான் திட்டு மழையில் நனைந்துகொண்டிருந்தேன். பி.சி. ஸார் அங்கே இருந்த டியூப் லைட்டைத்தான் ஆஃப் செய்யச் சொல்லி

கே.வி.ஆனந்த்

கையில் ஒரு நோட்புக்கை வைச்சுக்க. இங்கே என்னென்ன எக்யூப்மென்ட்ஸ் இருக்கு? அதுக்கெல்லாம் என்ன பெயர்? எதுக்கு யூஸ் பண்றோம்னு கேட்டுத் தெரிஞ்சுக்க. ரெண்டு வாரம் கழிச்சுத்தான்



வேலையில் சேர்ந்ததுமே விடுப்பு!

இருக்கிறார்.

படப்பிடிப்பின்போது பயன்படுத்தும் சில பிரத்யேக லைட்டிங் சாதனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் பல்ப்கள் ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ளவை. அவற்றை பட்டென்று அணைக்கக் கூடாது. நான் செய்த காரியம் எவ்வளவு முட்டாள்தன மானது என்று புரிந்தது.

இன்னொரு சமயம், பி.சி.ஸார், ''லூப் போர்டை எடு'' என்றார். அது ப்ளு போர்டு என்று என் காதில் விழ, நான் ஒரு நீல கலர் போர்டை எடுத்து வந்து அவரிடம் நீட்டினேன். ''என்ன இது? எதற்காக என்னி டம் கொடுக்கிறாய்?'' என்று குழம்பிப் போனார்.

அப்புறமென்ன? நாலைந்து நாட் களுக்கு யூனிட்டே என்னைத் துரத்தித் துரத் திக் கிண்டலடித்தது.

நான் பண்ணின குழப்படி வேலை களால் பி.சி. ஸார் என்னைக் கூப்பிட்டு, ''நீ ரெண்டு வாரத்துக்கு ஒரு வேலையும் செய்ய வேணாம்! ஷூட்டிங் ஸ்பாட்டில் என்ன நடக்குதுன்னு மட்டும் கவனி! உனக்கு இங்கே வேலை'' என்று சொல்லி விட்டார்.

மறுநாள் ஷூட்டிங்குக்கு வந்தவுடன், ''உன்னுடைய நோட் புக்கில், ஒவ்வொரு ஷாட்டிலும் யார் ஆர்டிஸ்ட்; அது லாங்க் ஷாட்டா, குளோஸ் அப்பா; வைடு ஷாட்டா, மிட் ஷாட்டா; அந்த ஷாட்டுக்கு எங்கேயிருந்து, எப்படி லைட்டிங் செய் கிறார்கள்; கேமராவில் எவ்வளவு அப்பெர் சர் வைக்கிறேன் என்று கவனித்து அதை யும் எழுதி வைத்துக்கொள்! திடீர்னு உன் நோட் புக்கை வாங்கி, நீ என்ன எழுதி இருக்கேன்னு நான் பார்ப்பேன்'' என்றார். சொன்னது மாதிரியே, அவ்வப்போது என் நோட்டை வாங்கிப் பார்த்து, கேள்விகள் கேட்பார்.

திரை உலகத்தில் ஒருசில சீனியர் கேமராமேன்கள் படம்பிடிக்கும்போது என்ன அபெர்சர் வைக்கிறார்கள் என்பதை படுரகசியமாக வைத்திருப்பார்கள். காட் சியை எடுத்து முடித்த மறுவினாடி, கேமரா வின் அப்பெர்சரை மாற்றிவிடுவார்கள். தன் உதவியாளர்களுக்குக்கூட அது தெரியக் கூடாதாம்! எல்லா விவரங்களையும் நோட்

டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று பி.சி. ஸார் சொன்னது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அந்த முதல் ஷெட்யூல் ஷூட்டிங்கின் போது என்னை ஆச்சரியப்படுத்திய இன்னொரு விஷயம், பி.சி.யின் ஸீனியர்



ராஜீவ் காந்தி மீட்டிங்குக்குத்தான் நான் ஜகதீசனுடன் போவதாக இருந்தேன்!

அஸிஸ்டெண்ட் ஜீவா, ஜூனியர் மோஸ்டான என்னிடம் பந்தா இல்லாமல் பழகியது. 'சாப்பிட்டியா?' என்று அக்கறையோடு விசாரிப்பதில் ஆரம்பித்து, இரவு நேரங்களில் மற்ற அஸிஸ்டெண்ட்களுடன் கூட என்னையும் தன் அறையில் உட்கார வைத்து அரட்டை அடித்தது.

இதைக் கவனித்துவிட்டு, டைரக்டர் பிரியதர்ஷன்கூட ஒரு நாள் ஆச்சரியப்பட்டு பி.சி.ஸாரிடம், ''உங்க அஸிஸ்டெண்ட்ஸ் எல்லாரும் ரொம்ப நெருங்கின ஃப்ரெண்ட்ஸ் மாதிரி இருக்காங்க! யார் ஸீனியர், யார் ஜூனியர் என்றே தெரியவில்லையே!'' என்று சந்தோஷப்பட்டார்.

பி.சி.யிடம் சேர்ந்த பிறகு கூட அவரது பர்மிஷனுடன், அவ்வப்போது நான் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்து புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தேன். அப்படி ஒரு நாள் எல்.ஆர்.ஜகதீசன் என்ற பத்திரிகையாளருடன் 'அசைட்' ஆங்கிலப் பத்திரிகைக்காக ஒரு தேர்தல் பிரசாரக் கூட்ட கவரேஜுக்குச் செல்ல வேண்டி இருந்தது.

ஆனால், அன்று காலையிலிருந்தே நான் மிகவும் சோர்வாக இருந்தேன். டைரக்டர் ராஜேஷ்வர் இயக்கிய 'அமரன்' படத்துக்காக டிஸ்கோ சாந்தி ஆடிய 'சந்தை பஜாரு' என்ற பாட்டு ஷூட்டிங். டிஸ்கோ சாந்தி அவசரமாக ஹைதராபாத் செல்ல வேண்டியிருந்ததால், 24 மணி நேரம் தொடர்ந்து கால்ஷீட் வாங்கி, ஷூட்டிங்கை முடித்தார்கள். காலை எட்டு மணிக்குத்தான் நான் வீட்டுக்குத் திரும்பினேன். ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு மீட்டிங்குக்குப் புறப்படலாம் என்று படுத்தேன்.

எழுந்து பார்த்தால் இரவு மணி எட்டு. ''அசைடிலிருந்து ஜகதீசன் ஃபோன் பண்ணினார்! நீ அசந்து தூங்கிக்கிட்டிருக்கிறதா சொன்னேன்!'' என்று அம்மா சொன்னபோது, குற்ற உணர்வு குத்தினாலும், ''இனி மீட்டிங்குக்குப் போவது சாத்தியமில்லை'' என்று மறுபடியும் தூக்கத்தைத் தொடர்ந்தேன்.

அதிகாலை அம்மா என்னைப் பரபரப்பாக எழுப்பி, ''டேய்! ராஜீவ் காந்தி செத்துட்டார்!'' என்று ஒரு ஆர்.டி.எக்ஸ். குண்டைப் போட்டார்!

ராஜீவ் காந்தி மீட்டிங்குக்குத்தான் நான் ஜகதீசனுடன் போவதாக இருந்தேன்!

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்தாக்கம் :

எஸ்.சந்திரமௌலி

சாஸ்வத சக்தி

அருள்வாக்கு

அசையாத சிவனும் அம்பாளால்தான் அசைந்து காரியத்தில் ஈடுபடுகிறார் என்று வருவதை, சயன்ஸ்படி கொஞ்சம் விளக்கிப் பார்த்தால்: 'மாட்டர்' என்று பதார்த்தத்தைச் சொல்கிறார்கள். அதன் ஸ்வபாவம் 'இனர்ஷியா' என்கிறார்கள். அதாவது சலனமில்லாமல் போட்டது போட்டபடிக் கிடப்பதுதான் என்கிறார்கள். அதனால் 'இனர்ட் மாட்டர்' என்றே சேர்த்துச் சொல்வதாக இருக்கிறது. ஆனாலும் அப்படிப்பட்ட இனர்ட் மாட்டர் பல தினுஸில் சலனப்பட்டு, பல தினுஸில் ஒன்று சேர்ந்துதான் ப்ரபஞ்சம் உண்டாகியிருக்கிறதென்று நன்றாகத் தெரிகிறது. அப்படியானால் ஏதோ ஒரு பவர், சக்திதானே சலனமில்லாத மாட்டரைச் சலிக்கும்படியாகப் பண்ணியிருப்பதாக ஆகிறது? அந்தச் சலனமில்லாத மாட்டரைத்தான் சிவன் என்றும் அதைச் சலிக்க வைக்கும் சக்தியைப் பராசக்தி, அம்பாள் என்றும் சொல்லியிருக்கிறது.

நிச்சலனமான சிவனும், க்ரஹ நக்ஷத்ரங்களில் ஆரம்பித்து அணுவுக்குள் உள்ள பரமாணுவரை எல்லாம் ஸதா சலித்துக் கொண்டேயிருப்பதற்குக் காரணமான சக்தியும், பிரிக்க முடியாமல் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்பதை அவர் 'மாட்டர்', அவள் 'எனெர்ஜி' என்று சயன்ஸ் அடிப்படையில் விளக்கிச் சொல்லலாம். இணைபிரியாத இரண்டு பேர் என்றாலும் அவர்கள் அடிப்படையில் இரண்டுகூட இல்லை, ஒன்றேதான் என்பதையும் அடாமிக் சயன்ஸில் 'மாட்ட'ரே 'எனெர்ஜி'யாவதாகச் சொல்லியிருப்பதைக் காட்டி உறுதிப்படுத்தலாம்.

ஆனால், ஒரு வித்தியாசம், பெரிய வித்தியாசம் என்னவென்றால், அங்கே ஒரு மாட்டரை எனெர்ஜி ரூபமாக்கிய அப்புறம் மாட்டர் இல்லாமல் போய்விடும். இங்கேயோ சிவனும் சக்தியும் எப்போதுமே சாச்வத ஸத்யமாக இருக்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



''மாறா...''

பொன்னாச்சியின் குரல் கேட்டு நப்பின்னை, மாறன்* இருவருமே ஓடி வந்தார்கள்.


''நாம் தயாராக இருக்க வேண்டும். நம் ஸ்வாமி* இன்று திருவரங்கம் திரும்புகிறார். அப்பா இப்போது வந்துவிடுவார்.''

பொன்னாச்சியின் குரல் இனிமை. மாறன் சொன்னான்.

''அம்மா நீங்களும் அழகு... உங்கள் குரலும் அழகு.''

நப்பின்னை சொன்

ப்ளாக் அண்ட் வொயிட் கதைகள்-13



அரங்கன்

னாள். ''நானும் அம்மாவைப் போலவே அழகு.''

''பேசாதே... அம்மாவின் அழகுக்காகவே அப்பா, அம்மாவைக் கல்யாணம் செய்துகொண்டார் தெரியுமா?''

அந்தக் கதை இருவருக்குமே தெரியும். இருந்தாலும் கேட்கக் கேட்க அலுப்பதில்லை இருவருக்கும்.

''என் கண்கள் அழகு என்று அப்பா சொல்வார். என் பின்னேயே வருவார் எப்போதும்... நான் கோயிலுக்குப் போனாலும் விடுவதில்லை. மணல்வெளியில் நான் நடக்கும்போது நடைபாவாடை விரித்து எனக்குக் குடை பிடித்து அழைத்துப் போவார்..''

பொன்னாச்சியின் கண்களுக்குள் நினைவுகளின் ஊர்வலம்.

''அப்புறம் அம்மா...'' நப்பின்னை அவசரப்படுத்தினாள்.

''நம் ஸ்வாமி ஒருநாள் இதைப் பார்த்து விட்டார். யார் இவர்... ஒரு பெண்ணின் பின்னே இப்படி லஜ்ஜை இல்லாமல் செல்கிறார் என்று விசாரித்து இருக்கிறார். அப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் தம்மிடம் அழைத்து வரச் சொல்லியிருக்கிறார். அந்தப் பெண்ணிடம் எதைக் கண்டு இப்படி மையல் கொண்டீர் என்று கேட்

* உறங்காவில்லிதாசனின் பிள்ளைகள்

* ஸ்வாமி என்பது ஸ்ரீமத் இராமானுஜரைக் குறிக்கிறது.



திருமுற்றம்

ரிஷபன்

டாராம். என் கண்ணழகைப் பற்றிச் சொன்னதும், அதை விட அழகான கண்களைக் காட்டிக் கொடுத்தால் உம் மனசு மாறுமா என்றாராம். அப்பா என் மீதான பிரியத்தில் அலட்சியமாய்ச் சொன்னாராம். 'பொன்னாச்சியின் கண்களை விட அழகு இவ்வுலகில் இல்லவே இல்லை. அப்படி நீர் காட்டினால் நான் உமக்கு அடிமை!'

ஸ்வாமி அப்பாவை அரங்கன் மூலஸ்தானத்துக்கு அழைத்துப் போனார். பட்டர் ஸ்வாமியிடம் தீபம் காட்டச் சொன்னார். அதோ பாரும்... உம் துணைவியின் கண்களை விட அழகான கண்களை... என்றாராம்.''

''அப்பா பார்த்தாராம்மா?''

''ம்ம். நம் அப்பா அரங்கனின் தாமரைக் கண்களைப் பார்த்துவிட்டார். இந்தப் பொன்னாச்சியின் கண்களை விட அழகாய்... இந்தப் பொன்னாச்சிக்கே அழகைக் கொடுத்த அமுதனின் கண்களை...''

''அப்புறம்தான் நீங்கள் ஸ்வாமிக்கே உரிமையாகி விட்டீர்களாம்மா?''

''நாம் எல்லோருமே ஸ்வாமிக்கு உரிமைதான் மாறா!''

நப்பின்னை சொன்னாள் - ''அம்மா... நம் ஸ்வாமியை நான் எப்படிக் கண்டுகொண்டேன் தெரியுமா?''

மாறன் கேலியாகச் சிரித்தான்.

''மாறா...''

''இல்லையம்மா... இவர்கள் செய்த கூத்து தான் தெரியுமே...''

''சொல்லட்டுமே... நம் ஸ்வாமியின் பெருமை தானே.'' மாறன் பாதி விளையாட்டாய் வாய் பொத்தி நின்றான்.

''நாங்கள் தெருவில் மணலால் கோயில் கட்டி விளையாடிக் கொண்டிருந்தோம் அம்மா... அரங்கனை எழுந்தருளப் பண்ணி, ஆலவட்டம் ஸமர்ப்பித்து, தூப தீபம் காட்டி, அமுது படைத்தோம்...''

''என்ன பிரசாதம் நப்பின்னை?'' மாறனின் கேலிக் குரல்.

''மணலில்தானே



"இந்தக் கிராமத்துலே பன்றிக் காய்ச்சல் இருக்கா?"
"இது ரொம்பப் பின்தங்கிய கிராமம் சாமி! இப்பத் தான் பறவைக் காய்ச்சலே வந்திருக்கு...!"
- தஞ்சை தாமு

விளையாடுகிறோம். கொஞ்சம் மண்ணையே எடுத்து அமுதாகப் படைத்தோம் அம்மா...'' - நப்பின்னையின் குரலில் ஆழ்ந்த நம்பிக்கை.

''அப்போது நம் ஸ்வாமி உஞ்சவிருத்தி வந்து கொண்டிருந்தார்... அரங்கனின் முன் அழைக்கும் பாவனையில் ஜீயா என்றழைத்து விட்டேன் அம்மா...''- சொல்லும் போதே நப்பின்னையின் குரல் நடுங்கியது. மாறனிடமும் அமைதி. பொன்னாச்சி உணர்ச்சியில் கண்கலங்கி விட்டாள்.

''நம் ஸ்வாமி என் எதிரில் குனிந்து மண் பிரசாதம் ஏற்றுக் கொண்டார்.''

மூவரும் அழுதே விட்டார்கள், எதிரில் உறங்காவில்லிதாசன் வந்து நின்றது தெரியாமல். மாறன் கவனித்து விட்டான்.

''அப்பா வந்து விட்டார் அம்மா.''

''என்ன செல்லங்களா... அம்மாவை ஏன் கலங்க வைத்து விட்டீர்கள்?''

''அப்பா, ஸ்வாமி உங்கள் கரம் பற்றித் தானே திருக்காவிரி ஸ்நானம் செய்துவிட்டு வருவார்?'' - தகப்பன் பெருமை குரலில் வழிந்தோடியது இருவருக்கும்.

''ம்ஹூம்... அபசாரம்...''

''அம்மா... நாங்கள் சொன்னது சரி தானே?''

பொன்னாச்சி கணவனைப் பார்த்தாள். அவனிடம் இன்னும் பதற்றம் தணியவில்லை. கர்வம் அற்று இருந்தவனுக்குக் கிட்டிய பரிசு அது. எப்படி அதைப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வது? இராமானுஜர் காவிரிக்கு நீராடச் செல்லும்போது முதலியாண்டானையும், நீராடிய பிறகு வில்லிதாசனையும் பற்றி நடப்பது வழக்கம்.

அப்பாவின் சங்கடம் தீர்க்க நப்பின்னை மாறனைக் கேலி செய்ய முனைந்தாள்.

''நம் மாறன்தானே பிரசாதத்தைத் துப்பியது?''

மாறனின் முகத்தில் கூச்சம் அப்பிக் கொண்டது. அரங்கனின் பிரசாதம் என்று அப்பா கொடுத்ததை வாயிலிட்டுக் கொண்ட மறு வினாடி தன்னையும் மீறி உமிழ்ந்து விட்டான். அப்பாவின் அடி விழுந்ததும் என்ன செய்கிறோம் என்று அறியாமல், உடையவர் திருமாளிகைக்குள் ஓடிப் போனான். பின்னாலேயே தனுர்தாசனும், பொன்னாச்சியும்.

''ஸ்வாமி... அப்பா அடித்து விட்டார்...''- உடையவர் முன்னிருந்தவர்கள் பதறிப் போனார்கள். ஏற்கெனவே வில்லிதாசனுக்கு உடையவரிடம் இருக்கும் அபிமானம் பொறாமையைத் தூண்டியிருந்தது. 'என்ன வளர்த்திருக்கிறான்... பிள்ளையை... சீச்சீ...'

உடையவரிடம் நிதானம்.

''சொல்லப்பா... யார் அடித்தார்கள்

உன்னை?''

''நான் மாறன்...''

திருவாய்மொழிக்கு அடிமையான உடையவரின் நெஞ்சுன் கசிவு. மாறன் சடகோபனுக்கு அடியா? த்ரிதண்டம் ஏந்தி எழுந்து நின்றே விட்டார்.

''யார் அடித்தது இந்தப் பிள்ளையை?''

வில்லிதாசனும் பொன்னாச்சியும் அப்படியே அவர்முன் நிலத்தில் வீழ்ந்தார்கள்.

''என்ன குற்றம் செய்தான்?''

''அரங்கன் பிரசாதம். துப்பி விட்டான்'' வில்லிதாசன் குரலில் நடுக்கம். சொல்லவே கூசியது.

''ஏனப்பா அப்படிச் செய்தாய்?''

''நீங்களே சாப்பிட்டுப் பாருங்கள். உங்களுக்கே தெரியும். பாவம் அரங்கன். எப்படித்தான் இப்படி அமுது செய்கிறாரோ? எங்கள் அம்மா இதைவிடவும் நன்றாக அமுது படைப்பார்.''

இளங்கன்று பயமறிந்திருக்கவில்லை.

உடையவர் ஏற்கெனவே கிலேசப்பட்டிருந்ததுதான். அரங்கனுக்கு திருமடப் பள்ளியிலிருந்து வரும் பிரசாதங்கள் சரியாக இல்லை. பரிசாரகர்களிடம் நிலவிய அலட்சியம். சுத்தமின்மை. 'ப்ரபோ... ஒரு குழந்தைக்குக் கூட உன் சன்னிதி பற்றித் தெரிந்திருக்கிறது. நிர்வாகக் குறை புரிந்திருக்கிறது. கோயிலொழுகு செய்ய வேண்டிய கடமை புரிகிறது. அடியேன் ஏன் வாளாவிருந்து விட்டேன்?'



பிறகு இராமானுஜர் திருமடப்பள்ளி சீர்திருத்தம் செய்ய முனைந்ததும், பிடிக்காதவர்கள் அவருக்கு விஷமிட்டு பிக்ஷை அளிக்க முயன்றதும், மனம் வருந்தி திருவெள்ளரைக்கு உடையவர் சென்றதும் பழைய நிகழ்ச்சிகள்.

இன்று மீண்டும் உடையவர் திரும்பி வருகிறார். அதுவும் அரங்கனின் கட்டளையால்.

பட்டர் ஸ்வாமி அரங்கனின் கட்டளையைச் சொன்னபோது அரையருக்குத் தயக்கம்.

''வருவாரா நான் அழைத்தால்?''

''திருவாய்மொழி சாதியும் (சொல்லும்) வருவார் என்று அரங்கன் சொன்னார்.''

''திருவாய்மொழியா? தெருவிலா?''

வழக்கத்தை எப்படி மீறுவது என்கிற பதற்றம் இப்போது அரையருக்கு. நாலாயிரத்தில் திருவாய்மொழி மட்டும் வீதியில் சேவிப்பதில்லை (சொல்வதில்லை).

''உடையவருக்காக விதிகளை மீறலாம் என்றே அரங்கன் அருள்வாக்கு.''

பொன்னாச்சி கணவனைப் பார்த்தாள். அவனிடம் இன்னும் பதற்றம் தணியவில்லை...

அப்புறம் என்ன? கிளம்பிப் போனார்கள். திருவெள்ளரையில் உடையவர் முன் அரங்கன் பிரசாதம் தந்துவிட்டுச் சட்டென அரையர் திருவாய்மொழி சேவித்தபடி பின்நோக்கியே நடந்து வர... பாசுரத்தில் கட்டுண்டு இராமானுஜர் அவரைப் பார்த்தபடி தொடர்ந்து வர... முழு தூரமும் அரையர் பின்புறமாகவே நடந்து வந்தது வரலாற்றுச் செய்தி.

அரங்கன் முன் பரிசனங்கள் கூடி விட்டார்கள். வில்லிதாசனும் பொன்னாச்சியும்



விக்ரம் வரிசையில்...

இப்போது ஹீரோக்கள், தாங்கள் நடிக்கும் படங்களில் பாடுவதுதான் கோடம்பாக்கத்தில் ஃபேஷன். விக்ரம், 'கந்தசாமி'யில் ஐந்து பாடல்களில் நான்கு பாடல்கள் பாடினார். அவரைப் போல, பரத், தாம் நடிக்கும் 'தம்பிக்கு எந்த ஊரு' படத்தில் இரண்டு பாடல்கள் பாடியிருக்கிறாராம். இதெல்லாம் விளம்பர உத்திக்கு வேண்டுமானால், ஒத்து வரும். மற்றபடி, ஸ்ருதி சுத்தமாகப் பாடும் பாடகர்களுக்கு ஈடாகாது என்று சூடாக ஸ்டேட்மெண்ட் விடுகிறார் ஒரு மீன் பாடல் இசையமைப்பாளர்!

- 'ஸ்பீக்கர்' செல்லமணி

நப்பின்னையும் மாறனும் உடையவரின் தரிசனம் திரும்பப் பெறப் போகும் மகிழ்வில் உணர்ச்சிப்பெருக்கில் இருந்தார்கள்.

அரங்கன் சன்னிதானம் முன்பு வரும் போது மிகச் சரியாக 'இன்னுயிர்ச் சேவல்..' பாசுரம்.

'இன்னுயிர்ச் சேவலும் நீரும் கூவிக் கொண்டு இங்கு எத்தனை
என்னுயிர் நோவ மிழற்றேன்மின் குயில்பேடைகாள்
என்னுயிர்க் கண்ணபிரானை நீர் வரக்கூவுகிலீர்
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுமோ?'

திருமணத் தூணைப் பற்றிக் கொண்டு உபய விபூதியையும் அரங்கன் அருளால் பெற்ற உடையவர், கண்ணீர் மல்க நின்ற போது, அத்தனை பேரும் அரங்கனையும் இராமானுஜரையும் தனியே விட்டு வெளியே வந்து விட்டார்கள்.

'பெருமானே... நின் சன்னிதி கைங்கர்யம் சரிவர நடைபெறத்தானே அடியேன் அத்தனை ஒழுங்குகளையும் செய்ய முனைந்தேன். தேவரீர் இப்படி பரிசாரகர் பக்கம் பட்சமாய் என்னடியார் அது செய்யார், செய்தாகிலும் நன்றே செய்தார் என்றிருப்பது தகுமோ... அதனாலன்றோ அடியேன் தங்கள் கடாட்சம் விட்டு அப்புறம் போக வேண்டியதாயிற்று?'

உடையவர் மனசுக்குள் அரங்கன் பேசினான்.

'கலங்காதே இராமானுஜா... நான் ராஜா... என் குடிமக்கள் என் பாதுகாப்பில் இருப்பவர்கள். என்னால் அவர்கள் மனம் நோக எதுவும் செய்ய இயலாது என்பதால் தான் உம்மை நியமித்தேன். இராமனாய் அவதாரம் எடுத்தபோது சபரி கையால் உணவருந்தவும், குகன், சுக்ரீவன், விபீஷணாதிகளுடன் தோழமை கொள்ளவும் எம்மால் முடிந்தது. அர்ச்சையில் இருக்கும்போது யாம் பட்டர், பரிசாரகர், ஸ்ரீபாதந்தாங்கிகள் இன்ன பிறருக்குக் கட்டுப்பட்டே இருப்பேன் என் சௌலப்யத்தால். உச்சநீதிமன்றமாய் அதற்குத்தான் உம்மை நியமித்தேன். நீர் வரையறுக்கிற கோயிலொழுகு இனி எம்மையுமே கட்டுப்படுத்தும். உம்மை இனி எந்தக் காலத்திலும் பிரியேன்... நீர் பரமபதித்தாலும்!'

அரங்கன் சன்னிதி கிளிகள் 'ரெங்கா... ரெங்கா' என்று மிழற்ற, கோயில் மணி தானாகவே ஒலி எழுப்பத் தொடங்கியது, ஒரு புதிய சகாப்தத்தின் வரவைச் சொல்ல. ●

ஜானகி... ஜானகி...

''ஜானகிதான் எனக்குச் சாப்பாடு குடுக்கணும்! போங்க நீங்கள்லாம் இங்கேருந்து...!''

படுக்கையில் எலும்பும் தோலுமாய் இருந்த என் அப்பா, என் மனைவியும், அண்ணியும் சேர்ந்து கொண்டுவந்த சாப்பாட்டுத் தட்டை விசிறி அடித்தார்.

தரையிலும், படுக்கையை ஒட்டிய சுவரிலும் எங்கும் சாதமும், சாம்பாரும், கறியுமாய் சிதறி விழுந்தது.

என்னவென்று சொல்வது? கடந்த ஒன்றரை வருடங்களாக, கண் பார்வை முழுவதும் இல்லாது போக, ஒரு பக்கம் கைகாலும் இழுத்துவிட, படுக்கையிலேயே முடங்கிக் கிடந்ததில், மனநிலையும் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுக் கிடந்தார் அப்பா. வயது எண்பதை நெருங்கிவிட்டது.

அவரை ஒரு குழந்தையைக் கவனித்துக்கொள்வது போல இவ்வளவு நாட்களும் பொறுமையாக பார்த்துக் கொண்டிருந்தது அம்மாதான்.

காலையில் பல் தேய்த்து விடுவதிலிருந்து, முகம் கழுவுவது, உடம்பு துடைப்பது என்று ஒன்று விடாமல். பக்கத்தில் வேறு யாரையும் அனுமதிக்க மாட்டார். மனநிலை பாதிப்பு ஏற்படத் தொடங்கி ஒருவித மூர்க்கத்தனம் எட்டிவிட்டது.

நேற்று காலையிலிருந்து, அம்மா அவர் பக்கம் வருவதையே நிறுத்திவிட்டாள் என்பதை புரிந்துகொண்டார். எங்களுக்கெல்லாம் பதைபதைப்பு அதிகமானது. முதலில் தட்டையும் கையையும் மட்டுமே தட்டிவிட்டுக் கொண்டிருந்தவர் இப்போது இப்படி தூக்கியே எறிகிறாரே... என்ன செய்வேன் நான்?



''அப்பா, ஏன் இப்படிப் பண்றீங்க? அம்மா வெளியில போயிருக்காங்க, இதோ வந்துடுவாங்க!''

எதையும் கேட்பதாக இல்லை அவர்.

''போடா ராஸ்கல்... மொதல்ல அவளைக் கூட்டிக்கிட்டு வாடா! அவ இல்லாம ஒரு பருக்கைகூட எறங்காது எனக்கு!''

விக்கித்து நின்றேன் நான். என் பிரியத்துக்குரிய அம்மா, அவருடைய அருமை மனைவி ஜானகி, நேற்று காலை ஹார்ட் அட்டாக் வந்து திடீரென்று இறந்து போனதை எப்படிச் சொல்வேன் அவரிடம்...? ○

ஜி.பி.சதுர்புஜன்

அமரர் கல்கி

ஜலகன்னிகை

சாலையில் ஓரத்தில் இருந்த நீர் ஓடையில் விழுந்து காலையும் கையையும் அடித்துக் கொண்டு, ''அம்மா! நான் முழுகப் போகிறேன்!'' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம் பெண்ணின் மீது அவனுடைய கண்களும் கவனமும் சென்றன. இரண்டே எட்டில் ஓடைக் கரைக்கு ஓடிச் சென்றான். நீரில் மூழ்கிக் கொண்டிருந்த பெண்ணைக் கரையேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடேதான். ஓடையில் விழுந்து மேற்கண்டவாறு கூச்சலிட்டுக்கொண்டே காலினாலும் கையினாலும் தண்ணீரை அடித்து அலைகளை உண்டாக்கிக் கொண்டிருந்த இளம் பெண், ஓடைக் கரையில் வந்து வியர்க்க விறுவிறுக்க நின்ற வாலிபனைப் பார்த்தாள். உடனே கூச்சலிடுவதையும் தண்ணீரைக் காலாலும் கையாலும் அடிப்பதையும் நிறுத்தினாள். ஏதோ, ஓர் அபூர்வமான அதிசயக் காட்சியைப் பார்ப்பது போல் சூரியாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அப்படிப் பார்த்த வண்ணம் கலகலவென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பின் ஒலி செவியில் விழுந்தபொழுது அமுதமுண்ட குயிலின் கீதம் ஆயிரம் பதினாயிரம் வர்ண மலர்களாக மாறி மேலே விழுவது போன்ற உணர்ச்சி சூரியாவுக்கு உண்டாயிற்று.


சிரிப்பின் ஒலியைக் கேட்டதினால் அடைந்த திகைப்பு நீங்கியதும் சூரியா தன்னுடைய தவறை உணர்ந்தான். ஓடையில் விழுந்திருந்த பெண்ணை, தான் கரைசேர்க்க எண்ணியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதை அறிந்தான். அவள், ''முழுகப் போகிறேன்'' என்று கத்தியது வெறும் விளையாட்டுத்தான் என்பதும் தெளிவாயிற்று. ஓடையில் முழங்கால் அளவு தண்ணீருக்குமேல் இல்லையாகையால் அந்தப் பெண்ணுக்கு அபாயம் ஒன்றும் ஏற்படக் காரணம் கிடையாது. சாலைக்கு மண் போடுவதற்காகச் சாலையின் ஓரத்தில் மண் எடுத்து எடுத்துப் பள்ளமாயிருந்தது. நாளடைவில் அப்பள்ளத்தில் தண்ணீர் தேங்கி, சாலைக்கும் நன்செய் நிலத்துக்கும் இடையே நீண்ட ஓடையாக மாறியிருந்தது. நீர் ஓடையின் அகலம் சுமார் பதினைந்து அடிதான். ஆழமோ எந்த இடத்திலும் மூன்று அடிக்குமேல் இராது. மழைக் காலத்தில் பெய்யும் மழையும் வயல்களிலிருந்து வடிந்த தண்ணீருமாகச் சேர்ந்து



நீரோடையில் வருஷத்தில் பத்து மாதத்துக் குக் குறையாமல் தண்ணீர் நிற்கும். நீண்ட காலம் இப்படித் தண்ணீர் நின்ற காரணத் தினால் அல்லிக் கொடிகளும் செங்கழுநீர்க் கொடிகளும் மண்டிப்படர்ந்து கொழு கொழுவென்னும் இலைகளோடும் அழ கிய மலர்களோடும் விளங்கின.

ஓடையின் மேலாகச் சாலை ஓரத்து ஆலமரக் கிளைகள் தழைத்திருந்தன. அஸ் தமனச் சூரியனின் பொற்கிரணங்கள் அந்தப் பசுங்கிளைகளின் வழியாக நுழைந்து வந்து, நீலநிற ஓடை நீரில் லீலை புரிந்தன. சற்று தூரத்தில் பொன்னிற நெற் கதிர்களைத் தாங்கமுடியாமல் வயலில் சாய்ந்திருந்த நெற்பயிர்களும் இன்னும் அப் பால் மரகதப் பசுமை வாய்ந்த அடர்ந்த தென்னந்தோப்புகளும் காணப்பட்டன. அவ்வளவு இயற்கை எழில்களும் அந்த நீல நிற ஓடையில் விழுந்த ஜலகன்னிகை யின் முகத்தின் அழகைச் சிறப்பித்துக் காட்டுவதற்காக ஏற்பட்ட செயற்கைச் சித்திரங்களாகச் சூரியாவுக்குத் தோன்றின. தன்னுடைய வாழ்நாள் உள்ளளவும், தன் உடம்பில் உயிர் இருக்குமளவும், தன் மனத்துக்கு நினைக்கும் சக்தி இருக்கு மளவும், இந்த நிமிஷத்திலேதான் பார்க் கும் காட்சியைத் தன்னால் மறக்க முடியாது என்று சூரியாவின் உள் மனத்தில் ஒரு பகுதி எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

('அலை ஓசை' புதினத்திலிருந்து...)





''இளவரசர் கல்யாணத்துல என்ன கலாட்டா?''

''போரும் புறமுதுகும்போல பல்லாண்டு வாழ்க-னு ஒருத்தர் வாழ்த்திட்டாராம்.''

- அ.பேச்சியப்பன்

ரீமிக்ஸ்

''இந்த வருஷம் என் பிறந்த நாளை புதுமையான முறையில் கொண்டாடலாம்னு இருக்கேன்... என்ன செய்யலாம்?''

''சொந்தச் செலவுல கொண் டாடுங்க தலைவா!''

- வீ.விஷ்ணுகுமார்





''அந்தப் பாகவதர் ஒரே ஒரு பாட்டுக்குத்தான் நல்லா வாயைத் திறப்பார்!''

''எந்தப் பாட்டுக்கு?''

''சாப்பாட்டுக்கு!''

- அ.பேச்சியப்பன்

''ஊழலை ஒழிப்பது எப்படிங்கிற தலைப்புல தலைவர் புத்தகம் எழுதப்போறாராம்!''

''தெளிவா சொல்லு... 'ஊழலை ஒழிப்பது எப்படி'ங்கிற தலைப்புலயா? 'ஊழலை ஒளிப்பது எப்படி'ங்கிற தலைப்புலயா?''

- வீ.விஷ்ணுகுமார்



காப்பி!



''உன்னைப் பார்த்து இவன் காப்பியடிச்சு எழுதினாங்கறயே, ஆனா வேற மாதிரி எழுதியிருக்கானே?''

''எழுதும்போது கொஞ்சம் 'ரீமிக்ஸ்' பண்ணியிருப்பான் ஸார்!''

- வெ.சீதாராமன்

''உங்கப்பாவை டிஸ்சார்ஜ் பண்ணலாம், இப்ப அவரோட ஹார்ட் எதையும் தாங்கற அளவுக்கு ஸ்ட்ராங்கா இருக்குது!''

''நிஜம்தான் டாக்டர், உங்க ஆஸ்பத்திரி பில்லைப் பார்த்தும் கூட, நெஞ்சை பிடிச்சுக்காம இருக்கறாரே!''

- வெ.சீதாராமன்





நடக்குமென்பார்

தஞ்சை பரத்வாஜ்

மேஷம் : மனதைரியமும் தன்னம்பிக்கையும் மிகுந்து காணப்படுவீர்கள். பண வசதி பரவாயில்லை. கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். பூர்விக வழியில் ஆதாயம் கிட்டும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். நீண்ட காலம் முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்கு வெற்றி பெறும்.

ரிஷபம் : பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. பணியில் உயர்வு ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். நல்லவர்கள் உதவி தேடி வரும். நீண்ட காலம் வராத பாக்கிகள் வசூலாகும். திருமணம் கைகூடும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.

மிதுனம் : இன்னும் மூன்று மாதங்கள் பொறுமை காக்கவும். எதிலும் தடைகள் விலகி நன்மைகள் நடக்க ஆரம்பிக்கும். உடல் ஆரோக்கியம் படிப்படியாக சீராகும். யாருடனும் வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்ப வாழ்

வில் அனுசரணை தேவை.

கடகம் : மனக்குழப்பம் தீரும். வாக்கு வன்மை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். நண்பர், உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். பணவசதி பெருகும்.

சிம்மம் : இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மறைமுக எதிரிகளால் தொல்லை இருக்கும். சற்று காலம் பொறுமையுடன் இருக்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிட்டும்.

கன்னி: தேவையில்லாத செலவுகள் தேடி வரும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிப் போவார்கள். பூர்விகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். சத்ரு தொல்லை நீங்கும். கல்வி வளம் மேலோங்கும். திருமண முயற்சி நிறைவேறும்.

துலாம் : திருமணக் காரியம் கைகூடும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும். வேலையில் இடமாற்றம் உண்டாகும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். வீட்டில் சுபச்செலவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. கடன் பிரச்னை தீரும். வழக்கு வெற்றி பெறும்.

விருச்சிகம் : பணவருவாய் பெருகும். ஆடைஆபரணப் பொருட்கள் சேரும். கூட்டாளிகள் ஆதாயம் கிட்டும். விருந்துகளில் பங்கேற்க நேரிடும். பாராட்டும் பரிசும் கிட்டும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும்.

தனுசு: வாக்குவாதம் தவிர்க்கவும். கைப் பொருள் மீது கவனம் தேவை. வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கை. கொடுக்கல் வாங்கலில் உஷார். கல்வியில் அக்கறை எடுக்கவும். பணப்பிரச்னை தீரும். வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரம் சற்று மந்தமாகும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். வழக்கு தாமதமாகும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். கூட்டாளிகள் விலகிப் போகலாம்.

மகரம்: உடல்நிலையில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் இருக்கவும். வாகனங்களில் பார்த்துச் செல்லவும். வரவேண்டிய பாக்கிகள் கால தாமதமாக வந்து சேரும். மனக்குழப்பம் தீரும். சுபகாரியப் பேச்சு வார்த்தை பலன் அளிக்கும்.

கும்பம்: மனசந்தோஷம் அதிகரிக்கும் வாரம். வாகன சௌக்கியம் ஏற்படும். விருதுகள் கிடைக்கும் சூழ்நிலை உள்ளது. பண விஷயத்தில் பிரச்னை இல்லை. அநாவசியமான செலவுகள் தவிர்க்கப் படும். உடன்பிறப்புகளால் அனுகூலம் கிட்டும். மனைவி மூலம் ஆதாயம் உண்டு.

மீனம் : உற்றார் உறவினர் மூலம் அனுகூலம் ஏற்படும். வீட்டில் சுபகாரிய நிகழ்ச்சி கைகூடும். பணவசதி பரவாயில்லை. திடீர் பிரபல்யம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடன் சுமை நீங்கும். சத்ரு தொல்லை ஒழியும். ஆரோக்கியம் உண்டாகும். வாக்கு வன்மை மேலோங்கும். புதிய நிலம் வாங்க நல்ல நேரம்.

நடக்கும்!

12.07.09 முதல் 18.07.09 வரை



விடாக்கண்டன்

2009-ம் ஆண்டுக்கான நடந்த விம்பிள்டன் இறுதி ஆட்டத்தைப் பார்த்தவர்கள் இன்னமும் அது ஏற்படுத்திய பீதியிலிருந்து அகலாமல் இருக்கிறார்கள். அதுவும் 50 ஏஸ்களை எதிர்கொண்டு, கடைசி செட்டில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் போராடி வென்ற ஃபெடரருக்கு நிகர் இனி யாரும் இல்லை என்று டென்னிஸ் உலகம் எக்காளமிடுகிறது. அதுதானே, 15 கிராண்ட்ஸ்லாம் கோப்பைகள் வென்றபிறகும் என்ன கேள்வி?

ஃபெடரரின் கடந்த ஒரு வருட கிராஃப்ஷீட்டைப் பார்க்கும்போது இதுவொரு மிகப்





பெரிய சாதனை என்று எண்ணத் தோன்று கிறது. சென்ற வருட விம்பிள்டன் இறுதி ஆட்டத்தில் நடாலிடம் தோற்ற நாள் முதல் நிறைய பேரிடம் உதை வாங்கிவிட்டார் ஃபெடரர். சூரியனுக்கு அஸ்தமன காலம் என்று நேருக்குநேராகவே அவர் விமர்சிக் கப்பட்டார். தொடர்ந்து நடால், ஆண்டி முரே, ஜோகோவிக் ஆகிய மூவரும் இந்த வருட காலத்துக்குள் ஃபெடரருக்கு நிறைய தொல்லைகள் கொடுத்தனர். பீஜிங் ஒலிம் பிக்கிலும் அவரால் கால் இறுதி வரை மட்டுமே முன்னேற முடிந்தது. ஒரு போட்டியின் நடுவே கோபப்பட்டு ராக் கெட்டைத் தூக்கி எறிந்தார். 237 வாரங்கள் நெ. 1 வீரராக இருந்த ஃபெடரர், துலாபார நிலைக்குத் தள்ளப்பட்டது பெரிய சோகம். சென்ற ஆண்டு இறுதியில் யு.எஸ் ஒபன் கிராண்ட்ஸ்லாமை வென்ற ஃபெடரர், 2009 ப்ரெஞ்ச் ஓப்பன் போட்டிக்கு முன்பு நடந்த ஒரு ஏ.டி.பி போட்டியில் நடாலைத் தோற்கடித்தார் களிமண் தரையில்.

அதுதான் திருப்பம். இந்த ஒரு மாத இடைவெளிக்குள் ப்ரெஞ்ச், விம்பிள்டன் என்று இரண்டு கோப்பைகள் அவர் வசம். பரிசுத்தொகை 240 கோடிக்கு வந்து நிற் கிறது. விம்பிள்டன் டென்னிஸுக்கு இருக் கும் வரலாறு போலவே, அதன் ஆட்டங் களும் சரித்திரத்தில் இடம் பிடிக்கின்றன. இந்த விம்பிள்டனில் ஆண்டி ரோடிக்கைத் தோற்கடிக்க ஐந்து மணி நேரங்கள் ஆயின. விடாக்கண்டனுக்கும் கொடாக்கண்டனுக் கும் நடந்த உக்கிரமான ஆட்டமாக அது வர்ணிக்கப்படுகிறது.

டென்னிஸை விடவும் உடல் உழைப் பைக் கோருகிற விளையாட்டு எதுவும் இல்லை. அப்படியொரு விளையாட்டில் கடந்த பத்து வருடங்களாக சலிக்காமல் சாதித்துக்கொண்டிருக்கிறார் ஃபெடரர்.

ச.ந.கண்ணன்

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் பாண்டிக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்பு களுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- பாண்டிச்சேரி வட்டாரத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 25.7.09

கலக்க வருதுப்பா கல்கி
பாண்டிச்சேரி

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



காற்றின் நிறம் சிவப்பு!

''இதோ பார் மிருதுளா... நீ யாருக்காகவும், எதுக்காகவும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. நீயும் நானும் மனப்பூர்வமா ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம். என்னோட அப்பாவும் சரி... அம்மாவும் சரி... என்னைக்குமே என்னோட இஷ்டத்துக்கு மாறாய் நடந்துக்கிட்டதில்லை'' இளங்கோ தன் தட்டில் இருந்த கட்லெட்டை முள் கரண்டியால் துண்டாடி

டொமேட்டோ சாஸில் நனைத்துக் கொண்டே எதிரில் உட்கார்ந்திருந்த அந்த அழகான மிருதுளாவைப் பார்த்துச் சொன்னான்.

ஒரு ஹிந்திப்பட ஹீரோவின் சாயலில் இருந்த இருபத்தொன்பது வயது இளங்கோவுக்கு இந்த உலகத்திலேயே பிடித்த விஷயங்கள் மூன்று. 1. மிருதுளா, 2. மிருதுளா, 3. மிருதுளா.

மிருதுளா மௌனமாயிருந்தாள்!

''என்ன பேச்சையே காணோம்?''

''எனக்குக் கொஞ்சம் பயமாயிருக்கு. உங்க வீட்ல அப்ஜெக்ட் பண்ணுவாங்களோன்னு...''

''எதுக்கு அப்ஜெக்ட் பண்றாங்க...?''

''என்ன இளங்கோ! எதுவும் தெரியாத மாதிரி பேசறீங்க? நான் ஏற்கெனவே கல்யாணமாகி டைவோர்ஸ் ஆனவள். உங்க பேரண்ட்ஸ் அப்ஜெக்ட் பண்ண இந்தத் தகுதி போதாதா?''

இளங்கோ அவளைக் கோபமாகப் பார்த்தான்.

''என்ன பார்க்கறீங்க?''

''இதோ பார் மிருதுளா...! மூணு வருஷத்துக்கு முன்னாடி உன்னோட கல்யாணம் நடந்த அன்னிக்கே உனக்குத் தாலி கட்டின அந்த ராஜாராமனை அவன் பண்ணின ஒரு பணக் கையாடல் குற்றத்துக்காக போலீஸ் அரஸ்ட் செஞ்சு கொண்டு போயிட்டாங்க. ஒரு வருஷ ஜெயில் தண்டனைக்குப் பிறகு வெளியே வந்த அவனோடு நீ குடும்பம் நடத்த விரும்பாமே விவாகரத்து கேட்டு கோர்ட்டுக்குப் போனே. கோர்ட்ல உனக்கு விவாகரத்தும்

2
க்ரைம்.காம்



ராஜேஷ்குமார்



''உங்க பையன் அட்மிஷன்ல ஏதோ தப்பு நடந்திருக்கு...?''

''என்ன சொல்றீங்க?''

''பைசா செலவு இல்லாமல் அட்மிஷன் வாங்கினதாகச் சொன்னீங்களே..!''

- சுஹைல் ரஹ்மான்

கொடுத்துட்டாங்க. ஒருநாள் கூட உன்னோட குடும்பம் நடத்தாத அந்த ராஜாராமன் சமூகரீதியாகவும் சரி; சட்டரீதியாகவும் சரி கணவன் கிடையாது. அதை நினைச்சு நீ மனசைப் போட்டுக் குழப்பிக்க வேண்டியதில்லை.''

''அப்படீன்னா ஒரு நல்ல நாள் பார்த்து உங்க அப்பா அம்மாகிட்டே பேசிட்டு என்னோட வீட்டுக்கு வாங்க. நானும் என்னோட அண்ணன்கிட்டே பக்குவமாய் விஷயத்தைச் சொல்லி வைக்கறேன்.''

''வர்ற புதன்கிழமை நல்ல நாள். அன்னிக்கே பேச்சை ஆரம்பிச்சுடறேன். முடிஞ்சா அன்னிக்கே என்னோட அப்பாவையும் அம்மாவையும் உன் வீட்டுக்குக் கூட்டிட்டு வர்றேன். ஓகே!''

''டபுள் ஓகே!'' - இருவரும் ரெஸ்டாரெண்ட்டை விட்டு வெளியே வந்தார்கள். கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தார்கள்.

''மிருதுளா...''

''ம்...''

''மழை வரும் போல் இருக்கு. நான் வேணும்னா உன்னை வீடு வரைக்கும் கொண்டு வந்து ட்ராப் பண்ணட்டுமா?''

''வேண்டாம் இளங்கோ! ரெஸ்டா ரெண்ட்டுக்கு எதிர்லதான் பஸ் ஸ்டாப். நிமிஷத்துக்கு ஒரு பஸ் வரும்.''

மிருதுளா பஸ் ஸ்டாப்பை நோக்கிப் போக, இளங்கோ காரைக் கிளப்பினான்.

அதே விநாடி -

ரெஸ்டாரெண்டின் உட்புறம் இருந்து சவரம் செய்யாத மோவாயோடும், பரட்டைத் தலையோடும் அந்த இளைஞன் வெளிப்பட்டான். கையிலிருந்த செல்ஃபோனை காதுக்கு ஒற்றிக் கிசுகிசுப்பான குரலில் பேச ஆரம்பித்தான்.

''டேனியல்...! நான் ராஜாராமன்.''

மறுமுனை கரகரத்தது.

''சொல்லு...''

''என் மாஜி மனைவியோட காதலன் இளங்கோ ரெஸ்டாரெண்டி லிருந்து புறப்பட்டுட்டான்.''



சாதுர்யா சக்ஸஸ் - 1

சாதுர்யா பேசறேன்.

தமயந்தி தற்கொலை செஞ்சுக் கலைன்னு சொன்னேன். அதுக்கு ஆதாரமா நான் பர்வதவர்த்தினியிடம் காட்டிய அந்தத் தடயம்.. மனோகரியின் நெயில் பாலீஷ் பூசப்பட்ட நகத் துண்டு. தமயந்தியின் தலைமுடிக்குள் சிக்கியிருந்த அது என் கண்களிலிருந்து தப்பவில்லை. மனோகரியிடம் விசாரணை செய்யும் போது அவளது விரலைக் கவனித்தேன். ஆட்காட்டி விரல் நகம் உடைந்திருந்தது. செய்தித்தாளில் 'தமயந்தி தற்கொலை' என்று கொடுத்துவிட்டு, மனோகரியை விசாரணைக்கு அழைக்க, அவளும்

''மாருதி ஸ்விஃப்ட்... ஒயிட் கலர்தானே?''

''ஆமா...! லாரியை நீ எங்கே நிறுத்தியிருக்கே?''

''நான் முன்னமே சொன்னபடி ஈ.சி.ஆர். ரோட்டில் இருக்கிற 'கோல்ட் நீடில்' சவுக்குத் தோப்புக்குப் பக்கத்துல பார்க்கிங் லைட்லைப் போட்டுக்கிட்டு வெயிட் பண்ணிட்டிருக்கேன்.''

''பசங்களா... சொன்ன பேச்சை யார் கேட்கறீங்களோ, அவங்களுக்கு 10 ரூபாய் பரிசு!''

''போங்கம்மா, அப்பா தான் ஜெயிப்பார்.''

- தென்றல் சண்முகசுந்தரம்



''சொன்னபடி தூக்கிடு!''

''நீ எதுக்கும் கவலைப்படாதே ராஜாராமா. நான் பண்ணப் போறது ஹண்ட்ரட் பர்ஸன்ட் ரோடு ஆக்ஸிடெண்ட். எனக்கு லைசென்ஸ் போகும். அவனுக்கு லைஃப் போகும். ஆக்ஸிடெண்ட்டைப் பண்ணிட்டு நானே போலீஸுக்கு ஃபோன் பண்ணிடுவேன்.''

ராஜாராமன் மெல்லச் சிரித்தான். ''நீ எதையுமே பெர்ஃபெக்டா பண்ணக்கூடிய ஆளுன்னு எனக்குத் தெரியும். அதனால்தான் பொறுப்பை தைரியமாய் உன்கிட்டே கொடுத்தேன்... என்னைக் குப்பைக் காகிதமாய் நினைச்சு ஒதுக்கித் தள்ளின மிருதுளாவோட கழுத்துல எவனும் தாலி கட்டக்கூடாது. கடைசிவரைக்கும் அவ என்னோட மாஜி மனைவியாத்தான் இருக்கணும்...'' - சொல்லிவிட்டு செல்ஃபோனை அணைத்தான் ராஜாராமன்.

நீலாங்கரையில் இருக்கும் தன் தோழி ஒருத்தியைப் பார்த்துவிட்டு ஆக்டிவா ஸ்கூட்டரில் சென்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள் சாதுர்யா. ஸ்கூட்டரின் ஹெட்லைட் வெளிச்சம் ஈ.ஸி.ஆர். சாலையின் இருட்டைத் துடைத்துக் காட்ட, வேகத்தைக் கூட்டினாள்.

மணிக்கட்டில் இருந்த ரேடியம் வாட்ச் நேரம் 9:10ஐக் காட்டியது. எப்படியும் வீடு போய்ச் சேர பத்து மணியாகிவிடும். 'வீட்டில் காத்திருக்கும் அம்மாவுக்கு ஃபோன் செய்து, வந்து கொண்டிருப்பதாகச் சொல்லி விடலாமா?' என்று யோசித்த விநாடி, தொலைவில் ரோட்டின் மையத்தில் ஒரு சின்னக் கும்பலும் ரோட்டோரமாய் போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருப்பதும் தெரிந்தது.

தைரியமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாள். அங்கே போலீஸ் பாணியில் கவனித்ததும் உண்மையை ஒப்புக்கொண்டாள். சரி கொலை ஏன்? தமயந்தி ஆபீஸ் பணத்தில் கையாடல் செய்திருந்தாள். இது மனோகரிக்குத் தெரிந்து, அவளும் பங்கு கேட்டதால் தகராறு ஏற்பட்டது. ரிகார்ட் ஸ்டோர் ரூமில் நடந்த இந்தத் தகராறில் எதிர்பாராதவிதமாக தமயந்தியின் தலை சுவரில் மோதி இறப்பு ஏற்பட்டது. பயந்து போன மனோகரி தற்கொலை போல் ஜோடனை செய்து விட்டாள். போன வாரம் கொடுத்த க்ளூவை வைத்து 'நகத் துண்டு' எனச் சரியாக எழுதி அசத்திய வாசகர்களுக்கு சபாஷ். அவர்களில் பரிசு பெற்றவர்கள் விவரம் 87-ஆம் பக்கம்.



சாதுர்யா ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்தாள்.

ஸ்தலத்தை நெருங்கும்போதுதான் புரிந்தது. அது ஒரு விபத்து! ஒரு லாரி கார் ஒன்றை மூர்க்கமாய் முத்தமிட்டுக் கொண்டிருந்தது.

தன்னுடைய ஸ்கூட்டரை ஓரமாய் நிறுத்திவிட்டு கும்பலின் மையத்தில் தெரிந்த இன்ஸ்பெக்டரை நோக்கிப் போனாள். தன் யூனிஃபார்மின் சட்டையில் 'தினேஷ்குமார்' என்ற 'நேம் பேட்ஜ்' அணிந்திருந்த அந்த இன்ஸ்பெக்டர், சாதுர்யாவைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொண்டவராய்ப் புன்னகைத்தார்.

''மிஸ் சாதுர்யா...! நீங்க எங்கே இந்தப் பக்கம்?''

''நீலாங்கரையில் இருக்கிற ஒரு ஃப்ரண்ட்டைப் பார்த்துட்டு வர்றேன். பை...த...பை ஏதோ ஆக்ஸிடெண்ட் போலிருக்கே? ஏதாவது உயிர்ச்சேதம்...?''

''நல்லவேளையாய் இல்லை. காரை ஓட்டி வந்தவர் விபத்து நடக்கப் போறதை ரியலைஸ் பண்ணி காரோட வேகத்தைக் குறைச்சுக் கீழே குதிச்சுட்டார். கையிலேயும் காலிலேயும் அடி. பத்து நிமிஷம் மயக்கத்தில் இருந்தவர் கண் முழிச்சிட்டார்.''

''எங்கே அவர்?''

''அதோ அந்த மரத்துக்குக் கீழே உட்கார்ந்து 'ஃபர்ஸ்ட் எய்ட்' எடுத்துட்டிருக்கார். நவ் ஹி ஈஸ் ஆல்ரைட்...''

''லாரி டிரைவர்?''

''இதோ... இந்த ஆள்தான். பேர் டேனியல்...''

சற்றுத் தள்ளி அலட்சியமாய் நின்றிருந்த லாரி டிரைவர் டேனியல் முன்னால் வந்தான்.

''மேடம்...! என் பேர்ல எந்தத் தப்பும் கிடையாது. காரை ஓட்டி வந்தவர் ஹெட்லைட் போடாமல் வந்தார். அதுவுமில்லாமல் தாறுமாறாய் ஓட்டிக்கிட்டு வந்தார். பக்கத்துல வந்ததும்தான் அது கார்னு எனக்குத் தெரிஞ்சுது. பிரேக்கை அழுத்தறதுக்குள்ளே காரைக் கொண்டு வந்து மோதிட்டார். இந்த விபத்துக்குக் காரணம் அவர்தான்...!''

''அந்த ஆள் பொய் சொல்றார் மேடம்...'' தனக்குப் பின்னால் குரல் கேட்டு சாதுர்யா திரும்பிப் பார்த்தாள்.

வலது காலை இலேசாய் விந்தியபடி நெற்றியில் போட்ட பிளாஸ்டரோடு இளங்கோ வந்து கொண்டிருந்தான்.

''நான் ஹெட்லைட் போட்டுட்டுத்தான் வந்தேன். லாரி டிரைவர்தான் தாறுமாறான வேகத்தில் வந்தார். எனக்கென்னவோ இது திட்டமிட்ட செயல் மாதிரி தோணுது...''

டிரைவர் டேனியல் குறுக்கிட்டுக் கத்தினான்.

''மேடம்! அவர் சொல்றது அப்பட்டமான பொய். அவர் காரோட ரெண்டு

ஹெட்லைட்டுமே எரியலை. அவர் லைட்டைப் போட்டுக்கிட்டு வந்திருந்தா கண்டிப்பாய் இந்த விபத்து நடந்திருக்காது. அவர் யாரோ... நான் யாரோ? நான் எதுக்காக லாரியைக் கொண்டு போய் அவர் மேலே மோதணும்?''

சாதுர்யா இரண்டு பேரின் பேச்சையும் கேட்டுவிட்டு இன்ஸ்பெக்டர் தினேஷ் குமாரை ஏறிட்டாள்.

''இதுல யார் சொல்றது உண்மைன்னு தெரியலையே? இந்த ஆக்ஸிடெண்ட்டை நேர்ல பார்த்த சாட்சி யாராவது இருக் காங்களா?''

''யாரும் இல்லை மிஸ் சாதுர்யா... நான் ஸ்பாட்டுக்கு வந்ததுமே விசாரிச்சுப் பார்த் துட்டேன். ஆக்ஸிடெண்ட்டான காரோட ஹெட்லைட்களும் சரி... லாரியோட ஹெட்லைட்களும் சரி, இப்ப உடைஞ்ச நிலையில் இருக்கு. காரோட ஹெட் லைட் விளக்குகள் ஆக்ஸி டெண்ட் நடந்தபோது எரிஞ்சுட் டிருந்ததா இல்லையான்னு நிரூபிக்கிறது ரொம்பவும் கஷ்டம். அது சாத்தியமில் லாத ஒண்ணு.''

சாதுர்யா இன்ஸ்பெக்ட ருக்கு மட்டும் கேட்கும்படி யாய்க் குரலைத் தாழ்த்தினாள்.

''நோ... இன்ஸ்பெக்டர்! அது சாத்தியமானதுதான். உங்க கிட்டே டார்ச் லைட் இருக்கா..?''

''இருக்கு...''

''வாங்க போலாம்.'' சொன்ன சாதுர்யா சாலையின் ஓரத்தில் ஆக்ரோஷமாய் முத்தமிட்டபடி நொறுங்கிக் கிடந்த லாரியையும் காரையும் நோக்கிப் போனாள். இன்ஸ் பெக்டரின் கையில் இருந்த டார்ச்சை வாங் கிக் கொண்டு காரை நெருங்கினாள். சில்லு சில்லாய் உடைந்து கிடந்த காரின் ஹெட் லைட் விளக்குகளின் மேல் டார்ச் வெளிச் சத்தை அடித்துப் பார்த்தாள்.

பத்தே விநாடிகள்தான்!

இன்ஸ்பெக்டரிடம் நிமிர்ந்தாள் சாதுர்யா. ''அந்த லாரி டிரைவர் சொல்றது பொய். கார் ஓட்டியவர், ஹெட்லைட் களைப் போட்டுக்கிட்டுதான் ஓட்டியிருக் கார். லாரி டிரைவர் ஏன் பொய் சொல் லணும்னு தெரியலை. விபத்து நடந்திருக் கிற விதத்தைப் பார்க்கும் போது இது ஒரு கொலை முயற்சியாகவும் இருக்கலாம். டிரைவரை ராத்திரி முழுவதும் லாக்கப் பில் வெச்சு விசாரிச்சா எல்லா உண்மை களும் வெளியே வந்துடும்.''

இன்ஸ்பெக்டர் தினேஷ்குமார் அவளை வியப்பாய்ப் பார்த்தார்.

''மிஸ் சாதுர்யா...! உடைஞ்ச ஹெட் லைட்டுகளைப் பத்து விநாடி நேரம்தான் பார்த்தீங்க... ஆக்ஸிடெண்ட் நடந்தபோது ஹெட்லைட் விளக்குகள் எரிஞ்சுட்டுதான் இருந்திருக்கணும்னு சொல்லிட்டீங்க. எந்த அடிப்படையில் சொன்னீங்க?''

சாதுர்யா இன்ஸ்பெக்டர் காதுக் குள் சொல்ல, அவர் முகம் வெளிச்சமானது.



துப்பறியும் போட்டி-2

அப்படி என்ன சொன்னாள் சாதுர்யா? வாசகர்களே, நீங்க கண்டுபிடிக்க உதவியாய் 2 க்ளுக்கள்.

1. காற்றில் உள்ள ஒரு வாயு
2. உலோக இழை

போஸ்ட் கார்டு எடுங்க. அந்தத் தடயத் தின் பெயரை எழுதி அனுப்புங்க.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசி தேதி: 15.07.09

சினேகா ஸ்டில் உதவி: 'பவானி' திரைப்படம்

மேற்கு வங்கப் பக்கம்

மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தம் தொகுதிக்கு அவசர விஸிட் அடித்துவிட்டு, டெல்லி போவதற்காக நேரே கொல்கத்தா ஏர்போர்ட்டுக்கு வர, மே.வங்க முதல்வர் புத்ததேவ் ஏர்போர்ட்டுக்கே வந்து பிரணாப்பைச் சந்தித்திருக்கிறார். மம்தா Vs மார்க்ஸிஸ்ட் மோதல் உச்சகட்டத்தில் இருக்கும் வேளையில், சுமார் முக்கால் மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்பின் பின்னணி என்னவாக இருக்கும் என்று மே.வங்க மீடியா மண்டையைப் பிய்த்துக் கொள்கிறது. ***(சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிக்கு ஃபோன் போட்டு மிரட்டிய மத்திய அமைச்சர் யார் என்று டிஸ்கஸ் பண்ணி இருப்பார்களோ?)***

மே.வங்கத்தில் அண்மையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல்களில் மறுபடியும் காங்கிரஸ் - திரிணாமுல் காங்கிரஸ் கூட்டணி அபார வெற்றி பெற்றுள்ளது. ''லோக் சபா தேர்தலில் நாங்கள் தோற்ற இடங்களில் கூட, இப்போது நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். மக்கள் இடதுசாரி கூட்டணி ஆட்சியை நிராகரித்துவிட்டார்கள். உடனடியாக புத்ததேவ் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்'' என்று உரக்கக் குரல் கொடுத்திருக்கிறார் மம்தா. ***('பதவி விலகு' பல்லவிக்கு அடுத்து, 'ஆட்சியை டிஸ்மிஸ் செய்' சரணம்தானே மேடம்?)***

கொல்கத்தா நகரத்தில் ஓடும் 32 ஆயிரம் ஆட்டோ ரிக்‌ஷாக்களில் நாலாயிரம் மட்டுமே எல்.பி.ஜி.யில் ஓடுவதற்கு ஏற்றபடி மாற்றப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலைப் பாதிக்கும் ஆட்டோக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி கொல்கத்தா உயர்நீதி மன்றம் உத்தரவிட்டது. இதற்கான கெடு ஜூலை 31ஆம் தேதி முடிவடைகிறது. ஆட்டோக்காரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா, ஆட்டோக்கள் சார்பில் கோர்ட்டில் கெடுவை நீட்டிக்க வாய்தா வாங்குமா என ஆட்டோக்காரர்கள் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ***(பேசாம பெட்ரோல் விலையை லிட்டர் 200 ரூபா ஆக்கிடுங்க! ஒருத்தரும் ஆட்டோ ஏற மாட்டாங்க!)***

அரசியல் ரீதியாகத் தொய்வு கண்டு



வரும் இடதுசாரிகளுக்கு லால்கர் மாவோயிஸ்ட் பிரச்னை புதிய தலைவலி. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்கி, பெயரைக் காப்பாற்றிக் கொள்ள தலைகீழாக நின்று தண்ணீர் குடிக்கிறது மார்க்சிஸ்ட் கூட்டணி. நிவாரணப் பணிகளைக் கவனித்துக் கொள்ள மாநிலத்தில் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆறுபேரை லால்கருக்கு பேக் பண்ணி அனுப்பியுள்ளது மே.வங்க அரசு. *(ஆளும்கட்சி அனுதாபி ஆபீஸர்களாகப் பார்த்து அனுப்புங்க! இல்லாட்டி டேஞ்சர்!)*

மே.வங்காளத்தின் சுந்தரவனக் காடுகள் உள்ளிட்ட பல பகுதிகளைத் துவம்சம் செய்துவிட்டது அண்மையில் தாக்கிய புயல். அமெரிக்க ஸ்டைலில், அந்தப் புயலுக்குப் பெயரும் சூட்டி விட்டார்கள் வங்காளிகள். பெயர்: ஐலா! *(அடுத்த புயலுக்கு 'அஞ்சா நெஞ்சன்'னு வைக்கலாமே!)*

- பரத் ராம்





ஐலா புயல்... ஆடும் அரசு...

வாவ் வாசகர்



பரிசு நாயகன்

''**நா**ன் ஸ்கூல்ல படிச்சுட்டு இருந்தப்ப அப்பா 'பைண்ட்' பண்ணி வெச்சிருந்த கல்கி தொடர்களைப் படிக்க ஆரம்பிச்சேன். அதுதான் என்னோட முதல் வாசிப்பு அனுபவம். நாளடைவில் என்னுடைய நண்பனாகவே கல்கி மாறிடுச்சு. காலேஜ் படிக்கிறப்ப வட்டமேஜை பகுதியில் முதல் கடிதம் வந்தது. 1975ல் ஆரம்பிச்ச நட்பு இப்ப வரைக்கும் தொடருது. ஆரம்ப காலத்துல வட்டமேஜை பகுதியில் சிறந்த கடிதத்துக்குப் பரிசு தருவாங்க. அதைப் பலமுறை வாங்கியிருக்கேன்'' என்கிறார் அண்ணா அன்பழகன்.

இவரது சொந்த ஊர் நாகை மாவட்டத்தின் அந்தணப்பேட்டை. இப்போது மகளின் பெயரில் [யாழினி பர்வதம்] எழுதி வருகிறார். இப்போது சென்னையில் வசிக்கும் இவர், பல பத்திரிகைகளில் பகுதி நேர நிருபராகவும் பணியாற்றியுள்ளார். தொலைக்காட்சித் தொடர் ஒன்றின் திரைக்கதை உதவியாளராக உள்ளார்.

''ஆனாலும் கல்கி வாசகன் என்று சொல்லிக்கொள்வதில் நிறைய பெருமைப்படுகிறேன். கல்கியில் எந்தப் போட்டி வைத்தாலும் தவறாமல் பங்கேற்பேன். புத்தகம், மிக்ஸி, கைக் கடிகாரம் என பல பரிசுகளை வென்றுள்ளேன்'' என்கிறார் இந்தப் பரிசு நாயகன்.

இவரது மனைவி மல்லிகா. ''என்னைவிட என் அம்மாவைப் பத்திச் சொல்லணும். அவங்க கல்யாணமாகி புகுந்த இடம் ரொம்பக் கட்டுப்பாடான கிராமம். என் அம்மாவுக்கோ கல்கியின் சரித்திர நாவல்களைப் படிக்கிறதுல ரொம்ப ஆர்வம். பக்கத்து வீட்ல இருந்த ஒருத்தர் புத்தகங்களைக் கொடுப்பார். இது தெரிஞ்சு அப்பா ஊரை நினைச்சுப் பயப்பட்டார். 'அவரை என் அண்ணன் ஸ்தானத்துல வெச்சருக்கேன். மத்தவங்க பேசறது பத்தி ஏன் கவலைப்படணும்?'னு சொன்னாங்க. கல்கி தொடர்களை எடுத்து வெச்சு, நாங்க படிக்கக் கொடுத்தாங்க. அவங்க கடைசிக் காலத்துல உடம்பு சரியில்லாம இருந்தப்ப அந்தப் பக்கத்து வீட்டுக்காரரும் பார்க்க வந்தார். அப்ப கல்கி ஸார் கதைகளைப் பற்றிப் பேசினார். அம்மாவுக்கு உயிர்ப்பால் கொடுத்தார். அப்புறம்தான் என் அம்மாவோட உயிர் பிரிந்தது'' என்று நெகிழ்ச்சியுடன் சொல்கிறார் மல்லிகா அன்பழகன்.

- ராஜ்

காதைக் கொடுங்க



அம்மா மனசு இறங்குமா?

ஏதாவது பிரச்னையைக் காரணம் காட்டி தினசரி பதினொரு மணிக்கே சட்டசபையிலிருந்து வெளியே வந்துவிடுகிறார்கள். அ.இ. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள். அவர்களில் ஒருவரை ஓரம் கட்டிப் பேசினோம். ''ஓய்வெடுக்க வேண்டிய வயதில் சட்டமன்றத்துக்கு தினமும் வந்து உற்சாகமாகப் பணியாற்றுகிறார் கருணாநிதி. ஆனால் ஓடியாடி உழைக்க வேண்டிய எங்கள் அம்மா சாவகாசமாக உதகையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தினசரி அம்மா பங்கெடுத்துக் கொண்டால்தான் எங்களுக்கும் உற்சாகமாக இருக்கும்; ஆளும்கட்சிக்கும் சவாலாக இருக்கும். பிரச்னைகளை எழுப்பி, மக்கள் மனத்தில் எங்களைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியும். தேர்தலுக்குத் தேர்தல் மக்களைச் சந்தித்தால் இனி வேலைக்கு ஆகாது'' என்று புலம்பினார் அவர். சீனியர் பிரமுகர்கள் ஜெ.விடம் ''காவல் துறை மான்யத்திலாவது நீங்கள் பேச வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார்களாம். அம்மா மனசு இறங்குமா?

அதிரடியாகச் சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்புகொண்டு தம்மைச் சந்திக்க வருபவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பது ஆகட்டும்; சர்ச்சைக்குரிய நபர்களைத் தற்காலிகமாக விலக்கி வைப்பதிலாகட்டும்; நூறு நாள் அஜண்டாவை வெளியிட்ட விதத்திலாகட்டும்; முதல் மாதச் சம்பளத்தைப் பொதுநல நிதிக்குக் கொடுத்த தாராள மனத்திலாகட்டும் - அழகிரி எல்லோரையும் அசத்தி வருகிறார். மீடியாவில் இமேஜ் பூஸ்ட் செய்ய ஒரு டீம் வேலை செய்கிறது. பத்து மாவட்டங்களில், கழக விவகாரங்கள் எது என்றாலும் மதுரைதான் தீர்வுக்கான இடம். ஆனால் இப்போது கூடுதலாக, தெற்கத்திப் பக்கம் மாவட்ட ஆட்சியாளர்கள், காவல் துறை உயர் அதிகாரிகள் போஸ்டிங் போடுவதற்கு முன்பாக, அழகிரியிடம் தெரிவிக்கிறார்களாம். ஆட்சேபணை ஏதும் இல்லாவிடில் ஓ.கே. சொல்லி விடுவாராம். ''அண்ணன் போகிற வேகத்தைப் பார்த்தால் சென்னை கோட்டையைத் தொட்டு விடுவாரோ என்று கூடத் தோன்றுகிறது'' என பிரமித்துச் சொல்கிறார் ஒரு சீனியர் மதுரை உடன்பிறப்பு.

டி.ஆர். பாலு மீது ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் உடன்பிறப்புகள் கோபமாக இருக்கிறார்கள். ''பின்ன என்ன ஸார்... ஏதோ காரணத்துக்காக தலைவர் அவருக்குப் பதவி கொடுக்கலை. எத்தனை நாளைக்குக் கோபத்தைக் காண்பிப்பாரு. முக்கியமான நான்கு பால வேலைகள் நிலுவையில் இருக்கு. இப்பவும் அவர் எம்.பி.தானே. அவர் சொந்தத் தொழிலைக் கவனிக்கப் போனா என்ன அர்த்தம்?'' என்று கேட்டார் ஒரு கழகப் பிரமுகர். - ஸ்ரீநி

உடையழகு... நடையழகு...

செல் செல்லம்!

ரயிலில், ஆஃபீஸில், மொட்டை மாடியில், ரோடு கிராஸ் பண்ணுகையில்... என செல்லின் கொடுங்கோல் ஆட்சிதான்...

உடையணிவதற்கு மாத்திரம் கோட்பாடுகள் என்றில்லை, செல்லில் பேசுவதற்கும் சில கோட்பாடுகள் உண்டு. செல்ஃபோன் மானர்ஸ் டிப்ஸ் என்னவென்று பார்ப்போமா?

★ நீங்கள் எங்கு போனாலும் செல்ஃபோனும் கூட வரணும் என்ற அவசியமில்லை. பொது இடங்களில் கத்திக் கத்திப் பேசுவது அல்லது பர்ஸனல் விஷயங்களை அலசுவது போன்றவை கூடவே கூடாது.

★ சர்ச், கோயில் (போவதுண்டா...) களுக்குச் செல்லும்போது செல் வேண்டாம் ஸ்வாமி! அதேபோல இரங்கல் கூட்டங்களுக்குச் செல்லும்போதும் தவிர்க்கலாம். இயலாது என்றால் வைப்ரேட் அல்லது சைலன்ட் மோடில் போடவும்.

★ முக்கியமான ஃபோன் வருவதற்கு இருக்கும் பட்சத்தில், செல் அடித்தவுடன் எக்ஸ்க்யூஸ் மீ எனச் சொல்லிவிட்டு செல்லைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடவும்.

★ கார் டிரைவ் பண்ணும்போது, பைக்கில் போகும்போது என ரோடில் இருக்கும்போது ரிஸ்க் எடுத்துப் பேசாதீர்கள். உங்கள் உயிர், உங்களைச் சார்ந்திருக்கும் உயிர்கள், சாலையில் அந்த சமயம் உலவிக் கொண்டிருக்கும் உயிர்கள்... விலைமதிப்பற்றவை.

★ செல்லில் பேசும்போதும் எச்சரிக்கையுடன் இருங்கள். ரோட்டில் இருக்கும் குழிகள், திறந்திருக்கும் மேன்ஹோல்கள், எதிரே வரும் அபாய லாரிகள்... என ஆபத்துக்கள் ஏராளம்.

★ செல்லில் பேசும்போது மெல்லப் பேசுங்கள். லவுட்ஸ்பீக்கர் ரேஞ்சுக்கு அலறாதீர்கள். பொது இடங்களில் வேண்டுமென்றே சிலர் கத்திக் கத்திப் பேசுவார்கள். பிறரின் நிம்மதியைக் கெடுக்காதீர்கள்.

★ ரிங்டோன் புதுமையாக இருக்க வேண்டியதுதான். அதற்காக அலறல், கொஞ்சல், அழுகை... என ரிங்டோன் வேண்டாமே! யுனிக்காக இருக்க வேண்டியதுதான். வித்தியாசமாக இருக்கலாம்; விபரீதமாக வேண்டாம்.

★ ஆஃபீஸில், செல்லை ஜாக்கிரதையாகக் கையாளவும். வீட்டில் பாதியில் விட்ட சண்டையை ஆஃபீஸில் தொடராதீர்கள்.

★ அதேபோல ஆஃபீஸை விட்ட பிறகு, மானேஜருடன், மற்றவர்களுடன் ஃபோனில் வாக்குவாதம் வேண்டாம். ஏதேனும் குழப்பம், தகராறு என்றால் நேரில் பேசவும். ட்ரைவிங்கின்போதோ, பஸ்ஸில் செல்லும் போதோ ஆர்க்யூமென்ட் வேண்டாம். உங்களுக்கு யாருடன் என்ன மனஸ்தாபம் என்று உலகுக்குத் தெரிய வேண்டுமா?

★ ஆஸ்பத்திரிக்குப் போகும்போது கவனத்துடன் செயல்படவும். ஆபரேஷன் ஆன நோயாளிகள், குழந்தைகள்... வலிகளுடன் இருக்குமிடம். நோ செல் ஃபோன்ஸ் ப்ளீஸ்...

★ க்ளையன்ட் மீட்டிங், அவசிய வேலை என்று இருக்கும்போது ஷார்ட் அண்ட் ஸ்வீட்டாகப் பேசி ஃபோனை

துண்டித்து விடுங்கள். நேரம் பொன் னானது... வீணாக்காதீர்கள்.

★ குடும்பத்தினருடன் ஜாலியாக ஷாப்பிங், சினிமா என்று போகும்போதும் செல் அடித்தால் உடனே கரண்ட் அடித்தாற்போல் ரியாக்ட் செய்து பேச ஆரம் பித்து விடாதீர்கள். உங்கள் ஃபேமிலிக் கென்று சிலமணி நேரங்களை ஒதுக்கவும்.

★ விமானத்தில் போகும்போது டேக் ஆஃப் ஆகும் நொடி வரை சிலர் பேசிக் கொண்டேயிருப்பார்கள். பலமுறை ஏர் ஹோஸ்டஸ் வந்து பரிதாபமாக 'ப்ளீஸ் ஸ்விட்ச் ஆஃப்' என்றாலும் பிடிவாதமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

★ நேர்முகத் தேர்வு, போர்டு ரூம் மீட்டிங் போன்ற சந்தர்ப்பங்களில் ஞாபக மாக செல்லை ஸ்விட்ச் ஆஃப் செய்யவும்.

★ ''கல்யாணத்துக்கு வந்துட்டு அங்கு யாரிடமும் பேசாமல் செல்லில் அரட்டை யடிக்காதீர்கள். கல்யாண வீட்டில் ஜாலி யாக இருந்து அம்மாவைக் குஷிப் படுத்துங்கப்பா.

★ தேவையில்லாமல் எஸ்.எம்.எஸ். தட்டி விட்டுக் கொண்டேயிருக்காதீர்கள். மெஸேஜ் அனுப்புவது மேனியாவாகி விட்டது. 'ஐ யாம் இன் தண்ணித்துறை மார்க்கெட்', 'மீ இன் மொட்டை மாடி...' என்பதெல்லாம் ஒரு மெஸேஜா?

யோசிங்க... பேசுங்க... அளவா, அழகா!

- லதா சேகர்



நான் யார்? நான் யார்?

அன்று வகுப்பு நடந்துகொண்டிருந்த போது அறிவிப்பு ஒன்று வகுப்பறைக்கு வந்தது. அனைத்துக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் பேச்சு, கவிதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு போட்டிகள் பல்கலைக்கழக அளவில் நடைபெற இருப்பதால் கலந்துகொள்ளும் மாணவ மாணவியருடைய பெயர்ப் பட்டியலைத் தருமாறு கேட்டிருந்தார்கள். நான் அந்த அறிவிப்பை ஆர்வமாகப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு மாணவன் ''நாளையிலிருந்து லீவுதானய்யா! அந்த அறிவிப்புதானே வந்திருக்கு'' என்று ஆர்வமாய்க் கேட்டான்.

''ஸ்காலர்ஷிப்பா இருக்கும்டா'' என்று மறுத்தான் ஒரு மாணவன். நான் அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், ''உங்களுடைய திறமைகளை நீங்களே புரிந்துகொள்ளுகிற அல்லது எங்களுக்கும் உலகத்தாருக்கும் தெரிவிக்கின்ற அறிவிப்பு இது'' என்று தொடங்க,

"ஒருவன் அறிவால், தேடுதலால் பசித்திருந்தால் வெற்றி பெறுவான்!"

''போச்சு! பரீட்சைக்குப் பணம் கட்டச் சொல்றாங்க போல'' என்று முணுமுணுத்தான் ஒரு மாணவன்.

''சரி... பல்கலைக்கழக அளவுல பேச்சுப் போட்டி நடக்கப்போகுது இதுல கலந்துக்கிறவங்க பேர் கொடுங்க'' என்று நான் கேட்டவுடன், பலர் திடுக்கிட்டுத் திருதிருவென விழித்தார்கள்.

''பேசப்போற சீனிவாசன் வல்ல ஸார்'' என்று ஒரு மாணவன் பணிவாக எழுந்து சொன்னான். ''கவிதாவுக்குக் காய்ச்சலய்யா. அவ இருந்தா கட்டாயம் கலந்துக்குவா'' என்றாள் ஒரு மாணவி.

''சரி. கட்டுரைப் போட்டி?''

பதிலே இல்லை.

''கவிதைப் போட்டி?''

''அவன் டி.சி. வாங்கிட்டுப் போயிட்டான் ஸார்.''

கடைசியாக... ''நாடகம்?'' வகுப்பு முழுவதும் மயான அமைதி நிலவியது. நான் அந்த அறிவிப்பை மேஜை மேல் வைத்துவிட்டு, மாணவ மாணவியரை நோக்கி, ''அப்படியென்றால் நீங்கள் யார்?'' என்று ஒரு கேள்வி கேட்டேன்.

கு. ஞானசம்பந்தன்



நீ யார்?



சிரிப்போம் ஜெயிப்போம்!

யாரும் பேசவில்லை.

"கல்லூரியில் படிக்கிற உங்களுக்கு மேடையில் பேசத் தெரியாது; கவிதை எழுத வராது; கட்டுரை எழுதிப் பழக்கமில்லை, நாடகம் நடிப்பு கேட்கவே வேண்டாம். பிறகு என்னதான் தெரியும் உங்களுக்கு?" நான் அமைதியாகக் கேட்டேன்.

"நான் நல்லா கிரிக்கெட் விளையாடுவேன்" என்றான் ஒரு மாணவன் பயத்தோடு.

"கல்லூரி கிரிக்கெட் டீமில் இருக்கிறாயா? எத்தனை இடத்தில் போய் விளையாடி இருக்கிறாய்? சான்றிதழ் ஏதாவது இருக்கிறதா?" இத்தனை கேள்விக்கும் சேர்த்து அவன் பொதுவாக ஒரே வார்த்தையில் பதில் சொன்னான் "இல்லை ஐயா."

"நீங்கள் எல்லோரும் முதல் மதிப்பெண் எடுத்து பல்கலைக்கழக அளவில் வெற்றிபெற வேண்டும். அதுதான் நீங்கள் படிக்க வந்த நோக்கம். அதோடு உங்கள் தனித்திறமையால் மற்றவர்களிலிருந்து மேம்பட்டு நிற்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு கரும்பலகையில்,

'பசித்திரு!
தனித்திரு!
விழித்திரு!'

என்று எழுதினேன்.

"யாராவது எழுந்து சொல்லுங்கள். இந்த மூன்று சொற்களில் என்ன செய்தி இருக்கிறது?"

"ஒரு க்ளூ குடுங்க சார்" என்றாள் ஒரு மாணவி. நான் உடனே சற்று கோபமாக, "தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் தொலைபேசிகளிலும் பேசிப் பேசி, எந்தக் கேள்வி கேட்டாலும் ஒரு க்ளூ கொடுங்கள் என்ற நிலைமைக்கு வந்துவிட்டீர்கள். ஒரு அலுவலகத்தில் வேலைக்காக நேர்முகத் தேர்வுக்குப் போன ஒருவனிடம் 'உன் பேர் என்ன?' என்று அதிகாரி கேட்க, அவன் தயங்காது 'ஒரு க்ளூ குடுங்க சார்' என்றானாம். அதுபோல் இருக்கிறது. சரி, இந்தச் சொற்களில் இருக்கிற முதல் எழுத்துக்களை மட்டும் கூட்டிச் சொல்லுங்கள்" என்று நான் சொல்ல,

ப, த, வி . . . 'பதவி' எனப் பளிச்சென்று எல்லோரும் சொன்னார்கள்.

"இதில் முதல் வரியைப் படிச்ச உடனே எனக்குப் பசி வந்திருச்சய்யா" என்று கடிகாரத்தைப் பார்த்தான் ஒருவன்.


"எல்லோரும் கவனிங்க, ஒருவன் அறிவால், தேடுதலால் பசித்திருந்தால் வெற்றி பெறுவான். மற்றவருக்குத் தெரியாத ஏதோ ஒரு கலையை அவன் கற்றறிந்து தனித் தன்மை



பெற்றிருந்தால் வெற்றி பெறுவான்.

ஊரெல்லாம் உறங்கினாலும் சாதித்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு விழித்திருந்தால் வெற்றி நிச்சயம்'' என்று நான் சொல்ல, வகுப்பே ஆர்வமாகக் கேட்கத் தொடங்கியது.

''பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் மூலம் உலகையே புரட்டிப்போட்ட காரல்மார்க்ஸ், இலண்டன் நூலகங்களில் சில வறுத்த ரொட்டித் துண்டுகளை மட்டும் சாப்பிட்டுக் கொண்டே ஆயிரக்கணக்கான நூல்களைப் படித்தார். மூலதனம் என்ற ஒரு மாபெரும் நூல் பிறந்தது.



இளைஞர்கள் ஜெயிக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்களைச் செதுக்கத்தான் ஆளில்லை!

தமிழ்த் திரையுலக வரலாற்றில் 1952ஆம் ஆண்டு திறமை மிகுந்த நூற்றுக்கணக்கான நடிகர்களுக்கு மத்தியில் தன் தனித் திறமையால், அங்க அசைவுகளால், தமிழ் உச்சரிப்பால் வி.சி. கணேசன் என்கிற நடிகர் 'பராசக்தி' படத்தின் மூலம் ஈடு இணையற்ற நடிகராகத் தம்மை வெளிப்படுத்தி தமிழ்த் திரையுலகின் முன்னோடியானார். அவர்தான் செவாலியே சிவாஜிகணேசன்.

நோபல் பரிசு பெற்ற தமிழக விஞ்ஞானி சர்.சி.வி.இராமன் கல்கத்தாவில் ஒரு சாதாரண அலுவலகத்தில் பணிபுரியும் போது அயல்நாட்டிலே சென்று படிப்பதற்கான பண உதவியைப் பெற்று, தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை விழிப்போடு பயன்படுத்தினார். நோபல் பரிசால் இந்தியாவுக்கே பெருமை சேர்த்தார்.

வரலாற்றில் இடம்பெறுபவர்கள் பலர். வரலாற்றை உருவாக்குகிறவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் ஒருவர் கூட இந்த வகுப்பில் இல்லையா?'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டேன்.

''வகுப்பு முடியப்போகிறது, உங்களிடத்தில் ஒரே ஒரு கேள்வி? போட்டியில் வெற்றி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்.

''உழைக்க வேண்டும்.''

''வகுப்புக்கே வரக் கூடாது!''

''வியர்வை சிந்த வேண்டும்...''

''இல்லை. முதலில் கலந்து கொள்ள வேண்டும்'' என்று நான் சொல்லி, வகுப்பிலிருந்து வெளியே வர, என்னைப் பின் தொடர்ந்த பலர், போட்டிகளில் கலந்து கொள்ளப் பெயர் கொடுக்க வந்தார்கள்.

சொன்னால் புரிந்து கொள்வார்கள் இளைஞர்கள். முறையாகச் சொல்லத்தான் ஆள் வேண்டும்.

அவர்கள் ஜெயிக்க... நான் சிரித்தேன்!

(வெற்றி தொடரும்...)

நூல் விமர்சனம்



நூறு சுரதா - அமுத பாரதி, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600 108. விலை ரூ.250.00

உவமைக் கவிஞர் சுரதா குறித்த நினைவுகளும், நிகழ்வுகளும் நூறு கவிதைகளாய் மலர்ந்துள்ளன இந்நூலில். நினைவுகளைப் பகிர்ந்தோர், நிகழ்வுகளை உரைத்தோர் பற்றிய குறிப்புகளும் உடன் இடம் பெற்றுள்ளது பயனளிக்கும். கவிதைகளும் ஓவியங்களும் நூலாசிரியரின் கைவண்ணத்தில் மிளிர்கின்றன. உயர்ந்த கவிஞருக்கு உளம்கவர் கவிதாஞ்சலி.

மனமாற்றம் - நெய்வேலி எழுத்தாளர்கள், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-600 017. விலை ரூ.40.00

நெய்வேலி வாழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. பதினேழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. கதைகளின் களங்கள் வேறு; உணர்வுகள் வேறு; மொழி நடை வேறு. நெய்வேலி புத்தகக் கண்காட்சியை முன்னிட்டு, அனைத்தையும் அருமையாய்த் தொகுத்திருக்கின்றனர். முயற்சியைப் பாராட்டலாம்.

சும்மாவா சொன்னாங்க பெரியவங்க! - பி.என்.பரசுராமன், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-600 002. விலை ரூ.50.00

பெரியவர்கள் சொல்லி வைத்த பழமொழிகள், தத்துவங்கள், சடங்குகள், வைத்திய முறைகள் போன்றவை அனுபவ அறிவின் வெளிப்பாடுகள். இதனைச் சில கட்டுரைகளின் வாயிலாக விளக்குகிறது இந்நூல். கட்டுரைகள் என்றாலும், சுவாரஸ்யமான பாத்திரங்களை உலவ விட்டு, கதை சொல்லும் பாணியில் தந்திருக்கும் பாங்கு ரசிக்க வைக்கிறது. பேரன், பேத்திகளின் குறுக்கு விசாரணைகளும், அவற்றுக்குத் தாத்தாவின் விளக்கங்களும் அழகு. எதையும் ஏன் எனக் கேள்வி எழுப்பும் இளையதலைமுறை படிக்க ஒரு நூல்.

- நேயமுகில்

எக்ஸாம் முடிந்து ஏப்ரல், மே-யில் கூட்டுப் புழுவா அடங்கிக் கிடந்த யூத்ஸ் ஜூன், ஜூலையில் பட்டாம் பூச்சிகளாகப் படபடக்க கறுப்பு தார்சாலை கூட வான வில்லிடம் கொஞ்சம் கலர்ஃபுல் அரிதாரத்தை இரவல் கேட்கத் தொடங்கி விட்டிருந்த நேரம்... ஜாலி எலெக்ஷன் டீமோடு, பெஸ்ட் லுக்கைச் செதுக்கும் சென்னை, கிண்டியிலுள்ள அப்பேரல் ட்ரெய்னிங் அண்ட் டிசைன் சென்டருக்கு என்ட்ரி கொடுத்தோம். ஆசிரியை அம்சராணி கல்கியின் யூத் விஸிட்டுக்கு பேஸ்மெண்ட் போட்டுக் கொடுத்தாங்க.

ஜாலி எலெக்ஷன்னதும் ஒரேயடியா மாணவர்கள் தரப்பிலிருந்து எட்டு பேரு இட்டு கட்டி நின்னா தாங்குமா பூமி? இவங்களோட தேர்தல் களத்துல குதித்த பெண்கள் இரண்டே இரண்டு பேர் தாங்க!



'நாங்க ஜெயிச்சுட்டா உங்களுக்கெல்லாம் டீக் கடைல பார்ட்டி

''அன்பே டோரா... காதல் உன் னரா''ன்னு கற்பனை சேர்த்து பாடிக்கிட்டிருந்தாங்க எம்.கல்பனா (AMT - H). ''டோரா கதை, காதல் கதையெல்லாம் இருக்கட்டும். அதைவிட புதுசா ஒரு கதை சொல்லுங்க'' என்றோம். அவங்க சொன்ன கதை இதுதான்:

அவங்க உயிர்த் தோழிகள் மூணு பேரு கார்ல போகும்போது ஆக்சிடெண்ட் ஆகிடுது. (உயிர்த் தோழிகள்னு சொன்னாங்களேன்னு டென்ஷன் ஆகாதீங்க. இது சும்மா கதைக்கு...) ஆக்சிடெண்ட்ல இறந்தவங்களை எமதர்மராணி (ராணியா? இது புச்சா கீதே?) விசாரணை கமிஷனுக்குக் கூட்டிட்டுப் போறாங்க. போற வழியில ஒரு கண்டிஷன். அங்கே இருக்கற ஒரு தங்கத் தட்டை மிதிக்கக் கூடாதுன்னு. கல்பனாவோட முதல் ஃப்ரெண்ட் அதை மிதிக்க ராணி கோபமாகி ''ரொம்ப 'அட்டு' பையன்தான் உன்னைக்





கியாரண்டி' என டீக்காக டீ காட்டி வோட்டு கேட்டு தூள் கட்டியது பெண்கள் க்ரூப்.

வோட்டுக்கள் எல்லாம் பரபரப்பாக எண்ணி முடித்த உடன் பார்த்தால் தேமேன்னு சாதுவா ஒரு ஓரமா நின்னுக்கிட்டு இருந்த இனிய சிவாதான் மிஸ்டர் பிரபலமாக முடிசூட்டத் தகுதியானவர் என முடிவு வந்தது. அடுத்து இரண்டாம் இடத்தில் வந்த அஜிமுதீனுக்கு வாக்களித்திருந்த அத்தனை பெண்களும் அவர் ஒரு பாசமான அண்ணா என காரணம் காட்டியிருந்தது ரொம்பவே வித்தியாசமாக இருந்தது.

முதல்வரால நம்பவே முடியல. கள்ள வோட்டு அல்லது பணம் கொடுத்து வோட்டு போட வெச்சியான்னு கிண்டலடிச்சுப் பரிசளிச்சாரு. இதுக்கிடையில நடந்த கலக்கல் கலாட்டா கொஞ்ச நஞ்சமல்ல... டேஸ்ட்டுக்கு சில பிட்ஸ்...



✱ தாம்சராணி

✱ வருங்கால (ஆடை) வடிவமைப்பாளர்கள்...



காதல் உடன் ஊரா?

கல்யாணம் பண்ணிப்பான்''னு சொல்லித் திருப்பி அனுப்பிட்டாங்களாம். இது தெரியாம தானும் திரும்பிப் போகணும்னு நினைச்சு இரண்டாவது பொண்ணும் தட்டில் ஏறிக் குதிக்க, அவளுக்கு மாட்டினது (அவ மாட்டிக்கிட்டது?!) இடி அமீன் மாதிரி ஓர் இளைஞன். மூணாவது பொண்ணு சமர்த்தா சொன்ன பேச்சைக் கேட்டு நடந்துக்கிட்டா. ராணி சந்தோஷப்பட்டு, ''உன் ஃபேவரிட் ஹீரோ யார்?''னு கேட்கவும், கதை கேட்டுக் கிட்டிருந்த மூணாவது ஃப்ரெண்ட், ''கமலஹாசன்னு சொல்லுடி'' எனப் பரபரத்தார். (அவர் ரொம்ப ஓல்டாச்சேனு கேட்டோம். அதே... அதே... பழமொழியைச் சொல்லி அசடு வழிஞ்சாங்க). அப்புறம் கதையில் கமலையே கல்யாணம் செய்து வைக்க, மற்ற தோழிகள் கமல்கிட்ட கேட்டாங்க - ''எப்படி இவளைப் போய் கட்டிக்கிட்டீங்க?'' கமல் சொன்னாராம், ''நானும் தங்கத் தட்டை மிதிச்சுட்டேன்.'' கடுப்பான தோழி ஆக்‌ஷனில் இறங்கும்முன் மற்றவர்கள் ஸ்டாப் ப்ளாக்கில் மாய மானார்கள்.



என் தோழி - தம்பிராட்டி எழுதிய கவிதை

''விதை போல் நம்மைத் தூவ,
கதிராக ஒன்று சேர்ந்தோம்
நம்மைப் பிரித்தது
அறுவடையா தோழி?''

(ஃபீல் பண்ணாதீங்க... சீக்கிரம் அடுத்த நடவு ஆரம்பிச்சிடும்)

ஸ்வாதி... "Where there are people there is affection"... என்று இங்கிலீஷில் பாட, ஸ்டாப்பு என்று தடாவை தடால்னு போட்டோம். ''உங்க பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தால்தான் பிரசுரிப்போம்'' என்றதும், சரியான தலைவலி யென்று... கண்ணாடியைக் கழற்றி விட்டு...

''மனிதர்கள் இருக்குமிடத்தில்
அன்பு இருக்கும்.
அன்பு இருக்குமிடத்தில்
காதல் துளிர்க்கும்.
காதல் துளிர்க்குமிடத்தில்
வலியும் தோன்றும்.
வலி தோன்றிய பிறகு
'அயோடெக்ஸ்' தடவு'' என்று

ஃபீலிங் பறவைகளுக்கு ஃப்ளாப் கொடுத்தார் ஸ்வாதி



''யூஸ் பண்ணிட்டுத் தூக்கிப் போடற காகிதங்களைக்கூட, கலைநயத்தோட பார்த்தா உடையாக மாற்றலாம்'' - சிக்கனத்தின் சிகரமாகி விளக்கம் கொடுக்கிறாங்க. நீங்க சொன்னா சரிதாங்க...



"கலை, அறிவியல் படிப்புகளுக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப் படையில்தான் இடம் கிடைக்கும். தொழிற் கல்வியில் விருப்பமும் ஆர்வமும்தான் முதல் தகுதி. நிஜமாகவே ஒருவருக்கு ஆடை வடிவமைப்பதில் ஆர்வமும், கார்மென்ட் தொழிற்சாலைகளில் பணியாற்ற வேண்டும் என்ற விருப்பமும் இருந்தால் மட்டுமே அவருக்கு முன்னுரிமை கொடுக்கிறோம்; அவர்கள் இல்லத்தரசியாக இருந் தாலும் கூட. இந்த சென்டர் ஆரம்பித்து பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. காலை பயிற்சி, மாலை பயிற்சி என இரு பிரிவு உண்டு. கார்மென்ட் இன்டஸ்ட்ரீ நமது நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் ஒரு துறை. அப்படிப்பட்ட ஒரு துறையில் பணியாற்ற ஒருவரைத் திறம்பட தயார்ப் படுத்துவதை மட்டுமே தாரக மந்திரமாகக் கொண்டு நாங்கள் இயங்கி வருகிறோம். மூன்று மாத கோர்ஸிலிருந்து ஒரு வருட கோர்ஸ் வரை இங்கு உண்டு. (ரூ.2500/-லிருந்து ரூ.35,000/- வரை வெவ்வேறு கட்டணப்பிரிவுகளில்.) பெரும்பாலும் பெண்கள்தான் இந்தத் துறையைத் தேர்ந் தெடுக்கிறார்கள். அவர்களுக்கு இயற்கை யாகவே அமைந்துள்ள பொறுமை, நிதானம், எதையுமே கலைக் கண்ணோடு பார்க்கக் கூடிய திறன் எல்லாமே இந்தத் துறையில் அவர்கள் மேலும் பரிமளிக்க வழிவகுக் கின்றன.

இங்கே படித்து முடித்துப் போகிறவர் களில் எண்பது சதவிகிதத்தினருக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைத்து விடுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்" என்கிறார் அப்பேரல் ட்ரெய்னிங் அண்ட் டிசைன் சென்டரின் முதல்வர் திரு. வி.நாக ராஜன்.



* கள்ள வோட்டா... நல்ல வோட்டா...?



முகத்தின் வரிகள்

சரியாகச் சொல்வ
தெனில்...
எமன் தேடி வரும்
முதுமையின் துவக்கம்
சாவின் விலாசம்.

- N.S.E. அகிலா



"எப்படி
எல்லோருக்கும்
பாசமுள்ள அண்ணனா
இருக்கீங்க!"
என்றதும், "இப்படி
உசுப்பேத்தி
உசுப்பேத்தியே
என்னை உருக வெச்சிடறாங்களே"
என்று நெகிழ்ந்தார்
அஜிமுதீன்



* இளமதி

கல்கி ராஜேந்திரன்



* அன்பு நிபந்தனை - எம்.எல்.வி.

பட்டியல்: மந்திரிப் பதவிகளுக்கு அல்ல!

அரசியல் தலைவர்கள் பலரும் தங்கள் கட்சி எம்.பி.க்களுக்கு மத்திய அமைச்சரவையில் இடம் வேண்டும் என்பதற்காக பிரதமரிடம் தர, பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்த வேளையில், வயலின் வித்வான் ஆர்.கே.ஸ்ரீராம்குமார் வேறு ஒருவிதப் பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்தார்! எம்.எஸ்.அம்மா, எத்தனை வாக்கேயக்காரர்கள், பாடலாசிரியர்களின் பாடல்களைக் கவனம் செய்து பாடியிருக்கிறார் என்பதற்கு ஒரு லிஸ்ட்! அவருடைய பட்டியலில் 104 பெயர்கள் இடம்பெறுகின்றன! பட்டியல் கிடைக்கப் பெற்ற விஜயா, அதில் இடம் பெறாத ஏழெட்டு பேர்களைக் குறிப்பிட்டாள். ''யோசித்தால் இன்னும் சில பெயர்கள் கூட நினைவுவரும்'' என்றாள்.

''முதல் உலகத் தமிழ் மகாநாட்டின் போது, அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணாவின் கோரிக்கைக்கு இணங்க திருக்குறள் முதல் அதிகாரத்தை மெட்டமைத்துப் பாடியிருக்கிறாள், அம்மா'' என்றேன்.

''சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆய்ச்சியர் குரவையை ஐ.நா. சபையில் பாடியதற்காக, ம.பொ.சி. அடைந்த ஆனந்தத்தை அளவிடவே முடியாது!'' என்றாள் விஜயா. ''மேடைக்கு மேடை சொல்லி மகிழ்ந்தார்!''

''எத்தனை பாட்டுகளுக்கும் கவிதைகளுக்கும் எத்தனை இசை அமைப்பாளர்கள் மெட்டமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் ஒரு பட்டியல் தயாரிக்கலாம்'' என்றேன்.

''எத்தனை பேரிடமிருந்து அம்மா சங்கீதத்தைக் கிரகித்துக்கொண்டு பாடி ரசிகர்களைப் பரவசப்படுத்தினாள் என்பதற்கு இன்னொரு பட்டியல் தயாரிக்கலாம்'' என்றாள் விஜயா. ''தன்னைவிட வயதிலும் அனுபவத்திலும் சிறியவர்களாயிற்றே என்ற எண்ணமே அம்மாவிடம் எப்போதும் இருந்ததில்லை. செம்மங்குடி, முசிறி, பிருந்தா போன்றவர்களிடம் பாடம் செய்த அம்மா, எம்.எல்.வி.

யிடம் கூட ஒரு பாட்டு கவனம் செய்தாள்!''

''அப்படியா!'' என்றேன் ஆச்சர்யத்துடன்.

''உங்களுக்குத் தெரியுமே, கீரவாணியில், 'கலிகியுண்டே' கிருதியை அம்மா எத்தனை மேடைகளில் பாடி பிரபலப் படுத்தியிருக்கிறாள்! அந்தப் பாட்டு, பிருந்தாவுடன் சேர்ந்து பாடி அம்மா அப்பியசித்த ஒன்று! பல பதங்களையும் பிருந்தாவிடம் அம்மா பாடம் செய்திருக்கிறாள்.''

''எம்.எல்.வி.?''

''லண்டனில் இந்தியா ஃபெஸ்டிவலுக்கு அழைக்கப்பட்டபோது, புரந்தரதாஸர் கிருதி புதிதாக ஒன்று நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டும் என்று அப்பா நினைத்தார். உடனே அம்மா, எம்.எல்.விக்கு ஃபோன் செய்ய, ''என்னைத் தேடிண்டு நீங்க வரப் படாது; நான் வரேன் அக்கா!'' என்று நிபந்தனை போட்டார் எம்.எல்.வி. எல்லோரும் ராதாவுடைய வீட்டில் சந்தித்தோம். சௌராஷ்டிரத்தில், ''சரணு சித்தி விநாயக'' பாடிக் காட்டி, 'நொடேஷ'னும் எழுதிக் கொடுத்தார் எம்.எல்.வி.



✱ 104 பிளஸ்...

அதே எம்.எல்.வி. ஒரு பரஸ்பர நண்பர் வீட்டுக் கல்யாணத்துக்கு ஊஞ்சல் நிகழ்ச்சியின்போதே வந்து கலந்து கொண்டார். அவரிடம், ''ஜோ அச்சுதானந்தா பாடுங்களேன் (அன்னமாச்சாரி பாடல்); அம்மாவுடன் சேர்ந்தே பாடலாமே'' என்று நான் ஆசைப்பட்டுக் கேட்டபோது, ''அது மட்டும் வேண்டாம் விஜயா; அது குஞ்சக்காவுக்காகவே (எம்.எஸ்.) ஏற்பட்ட பாட்டு; வேறே எதை நீ பாடச் சொல்லிக் கேட்டாலும் பாடறேன்'' என்றார்.

''ஊஞ்சலுக்குப் பொருத்தமாயிருக்குமே என்பதால் சொன்னேன்'' என்று நான் கூற, ''அது சரிதான்; ஆனால் அம்மா முத்திரை பதித்த பாட்டை நான் பாடுவது பொருத்தமாயிராதே'' என்றார் எம்.எல்.வி.!''

''இசை வல்லுனர்கள் எல்லாரிடமும் அம்மா இனிமையாகப் பழகி இசைக்காகவே வாழ்ந்தது ஒரு பக்கம் இருக்க, அப்பா, அந்தப் பண்பை அவளிடம் வளர்த்ததும் ஒரு பெரிய விஷயம்'' என்றேன்.

''நல்லது எங்கே யாரிடம் இருந்தாலும் எடுத்துக்கணும் என்கிற மனோபாவம் அப்பாவுக்கு நிறையவே உண்டு. ரா.கணபதி ஒரே ஒரு போஸ்ட் கார்டுதான் அப்பாவுக்கு எழுதினார். ''எம்.எஸ். அம்மா

''சம்போ மகாதேவா'' பாடக் கேட்டு மனம் உருகினேன். அதே ராகத்தில் (பௌளி) 'கர சரண கிருதம்வா' என்று தொடங்கும் சுலோகத்தைப் பாடிவிட்டு, தொடர்ந்து 'சம்போ மகாதேவா' பாட்டைப் பாடினால் இன்னும் சிறப்பாக இருக்குமே என்று தோன்றியது' என்பதாகக் குறிப்பிட்டு விட்டு, சுலோகத்தையும் எழுதியிருந்தார். அப்பாவும் அம்மாவும் உடனே அதை ஏற்றுக்கொண்டார்கள்.''

''அந்த யோசனையை மட்டுமா? கூடவே ரா.கணபதியையும் ஏற்றுக் கொண்டு, கல்கி காரியாலயத்தில் கௌரவமான இடம்கொடுத்து அப்பா ஆதரித்தாரே'' என்றேன்.

''அப்பா தந்த அந்த ஆதரவு ரா.கணபதியின் எத்தனை தெய்விக நூல்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது! அதற்கும் ஒரு பட்டியல் போடலாம்!''

''அம்மா எத்தனை மொழிகளில் பாடியிருக்கா என்பதற்கும் ஒரு பட்டியல் போடலாம்'' என்றாள் விஜயா.

''தாய்மொழியையே பல பாடகர்களுக்குச் சரியா உச்சரிக்க முடியறதில்லை. 'ஸுட்டும் விளி ஸுடர்தான்-கண்ணம்மா' என்று பாரதி பாடலைச் சிதைக்கிறார்கள். அம்மா பெங்காலியையும் உருதுவையும் கூட எவ்வளவு கச்சிதமாக உச்சரித்தாள்!''

''அதற்கெல்லாம் அப்பா எடுத்துக் கொண்ட முயற்சிகள்தான் காரணம். ஹிந்தி மீரா படத்தில் தரஸ்பினா பாட்டில் ''ஊஞ்சி சடி சடி'' என்று ஒரு சொற்றொடர் வரும். ஹிந்தியில்தான் பல எழுத்துக்களுக்கு நாலு வித உச்சரிப்புகள் உண்டே. 'சடி' என்பதில் முதல் 'ச'வும் நாலாவது 'ட'வும் ஒலிக்கணும். ''எப்படித்தான் கொஞ்சம் கூட பிரயாசைப்படாமல் இயல்பா அந்த இடத்தைப் பாடறியோ!'' என்று செம்மங்குடி மாமாவே ஆச்சர்யப்படுவார்.''

''அம்மாவுக்கு அமைஞ்ச மாதிரி Vocal Cords அமைப்பு மருத்துவ விஞ்ஞானத்துக்கே ஒரு பேராச்சர்யம் என்று டாக்டர் சத்யநாராயணா (ENT மருத்துவர்) சொல்வார்'' என்றேன்.



✱ பகவானை நினைக்க லயிச்சுப் பாடினால் போதும்...

''அதெல்லாம் ஆண்டவன் தந்த வரம். ஆனா உச்சரிப்பு சரியா இருக்கணும்; பொருளுணர்ந்து, லயிச்சுப் பாடணும் என்பதிலெல்லாம் அப்பா ரொம்ப கவனமாயிருப்பார். ஹிந்தியில் 'ந' என்ற ஒரு எழுத்து விட்டுப் போனால் அர்த்தமே தலைகீழாகிவிடும் என்று அப்பா எச்சரிப்பார். 'ந சோடதியா': விட்டு விடவில்லை; 'சோடதியா': விட்டாயிற்று. ''ந'வை மறக்காமல் சற்று அழுத்தம் தந்து உச்சரிக்கணும்'' என்பார். 'பொய்யான உலகில் பொருளாசை போன்றவற்றை விடவில்லையே; பகவானைத் துதிப்பதை மட்டும் விட்டு விட்டாயே' என்ற அர்த்தம் சரியாகக் கேட்பவர் மனசில் பதிய வேண்டுமே என்று கவலைப்படுவார், அப்பா ('நாம ஜபன க்யோன் சோடதியா' என்ற பாடல்).''

''பொருளுணர்ந்து லயித்துப் பாடியதால்தான் அம்மாவின் இசையில் பக்தி ரசம் பெருகி ரசிகர்களின் உள்ளங்களை உருக்கியது'' என்றேன்.

''அப்பாவுக்கு அதுதான் முக்கியம். இசையில் கணக்கு வழக்கெல்லாம் அவ

ருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. ஒரு சமயம் அகாடெமி கச்சேரிக்காக அம்மா "குருலேக" பாடி பயிற்சி செய்து கொண்டிருந்தாள். (தியாகையர் - கௌரி மனோஹரி). வி.வி.எஸ். வயலின் வாசிக்க, அம்மாவும் ராதாவும் மாறி மாறி சுவரப் பிரஸ்தாரம் செய்து, 'முத்தாய்ப்பு' வைக்க குறைப்பு செய்து கொண்டே வந்தார்கள். அந்தச் சமயம் பார்த்து அப்பா உள்ளே நுழைந்தார். "இது என்ன அவஸ்தை? உனக்கு எதுக்கு இந்த சிண்டு பிடி யுத்தமெல்லாம்?" என்று கேட்டு விட்டுப் போய் விட்டார்.

அகாடமி கச்சேரியில் அந்த இடம் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. அப்ளாஸ் பொழிந்து தள்ளினார்கள். ஆனால் அப்பாவுக்கு அப்பவும் திருப்தி யில்லை. "அப்ளாஸுக்காக நீ பாடவே வேண்டாம். பகவானை நினைச்சுண்டு பாட்டில் லயிச்சு நீ பாடிண்டிருந்தால் போதும்" என்றுதான் சொன்னார்."

"ஒருவிதத்தில் பார்த்தால் அம்மாவின் சாதனைகளை விட அப்பா சாதித்திருப்பது அதிகம்தான்" என்றேன். "ஒரு பாரத ரத்னாவை உருவாக்கினார்; விடுதலைப் போராட்ட வீரராக இருந்தார்; கல்கி நிறுவனத்தைக் கட்டித் தந்தார்; ராமனுக்கு லக்ஷ்மணன் போல ராஜாஜிக்கு எப்போதும் பக்கபலமாக இருந்து உதவினார்; இத்தனைக்கும் இடையில் மூன்று திரைப்படங்களை உருவாக்கி மூன்றும் மகத்தான வெற்றி பெறச் செய்தார்! அவர் அப்பப்ப டென்ஷனாகிக் கோபப்பட்டதில் வியப்பில்லை."

* தெய்வீக நூல்கள்: ரா.கணபதி





* பட்டியல் போட்டவர்: ஆர்.கே.ஸ்ரீராம்குமார்

"எல்லாரும் அவர் கோபத்தைத்தான் பெரிதாகச் சொல்கிறார்கள். அதே சமயம் அவர் சந்தோஷமாகப் பேசி எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டும் இருப்பார் என்பதை மறந்து விடுகிறார்கள்" என்றாள் விஜயா.

விஜயா சொன்னது உண்மைதான். சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி, இயல்பாக ஜோக் அடிப்பதில் வல்லவர் சதாசிவம். ஒரு சமயம் நண்பர் ஒருவர் தமது மகன் ஒரு நேபாளி பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டு விட்டான் என்று சதாசிவத்தினிடம் வருத்தப்பட்டுக் கொண்டார்.


"நேபாளி பெண்ணா! பேஷாப் போச்சு! மருமகளுக்கு மருமகளுமாச்சு; வீட்டுக் காவலுக்கு கூர்க்காவும் ஆச்சு! இதுக்கு சந்தோஷப் படுவதை விட்டு யாராவது வருத்தப்படுவாளோ" என்றார் சதாசிவம். நண்பர் பெரிதாகச் சிரித்து விட்டு தம் கவலையை மறந்தார்.


சதாசிவத்தின் ஜோக்குகளுக்கு தலைப்புகள் தந்து நீண்ட பட்டியலே தயாரிக்கலாம்!

(அடுத்த வாரம்:


அந்த நாளும் வந்திடாதோ!)







"ஓவியர் சில்பியின் தூரிகையால் வசீகரிக்கப்பட்ட என் மனசைப் பக்குவப் படுத்தியவர், ஓவியக் கல்லூரியின்



தூரிகை மனசு



முன்னாள் பிரின்ஸிபால் கன்னியப்பன்தான். அவரை நான் சந்தித்தது என் தூரிகைக்குக் கிடைத்த பாக்யம் என்றே சொல்ல வேண்டும்.

ஓவியத்துக்குச் சம்பந்தமில்லாத துறையில் (அசோக் லேலண்ட்) நான் வேலைக்குச் சேர்ந்திருந்தாலும், மனம் என்னவோ வண்ணங் களைச் சுற்றியும் கோடுகளிலுமே பின்னிக் கிடந்தது. நான் வரைந்து விகடனில் முத்திரை ஓவியமாக வெளிவந்த மருந்தீஸ்வரர் கோயில் ஓவியம்தான் என்மீது வெளிச்ச வண்ணம் பாய்ச்சியது. அதன்பின் ஓவிய ஜாம்பவான்கள் அன்பும் ஆதரவும் என்மீது படியத் தொடங்கின'' என்கிறார் ஜே.பி. என்று ஓவிய உலகில் அறியப்பட்ட ஜே.பிரபாகர். இவர் முறையாக ஓவியம் பயின்றவர் அல்ல. ஆனாலும் ஓவியர் சில்பியை மானசீக குருவாக ஏற்றுக் கொண்டவர்.

''எனது ஓவியங்களை எங்கள் கிராம மக்கள் பார்த்து ரசித்ததைக் கண்டு மகிழ்ந்திருக் கிறேன். அவர்களையும் பல நேரங்களில் என் தூரிகையில் கலையாக்கி இருக்கிறேன். எதுவாக ஆக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பார்கள். நான் ஓவியனாக நினைத்தேன். அதுவாகவே மாறி இருக்கிறேன்'' என்கிறார் ஜே.பி.

- மகிமைராஜன்



கிரேஸியைக் கேளுங்கள்

● **எஸ்.சத்யகாந்த், நீடாமங்கலம்**

'நான்' என்ற சொல் இல்லாதிருந்தால், என்ன ஆகியிருக்கும்?

'நான்' இல்லாவிட்டால் நமக்கு அகங்காரம் மட்டும்தான் போயிருக்கும். ஆனால் 'NON' இல்லாவிட்டால் வெள்ளைக்காரர்களுக்கு ஆகாரமே போயிருக்கும். NON இல்லாமல் வெள்ளைக்காரர்கள் எல்லோரும் வெஜிடேரியன் ஆகியிருப்பார்கள்...!

● **அ.யாழினி பார்வதம், சென்னை**

'குளோனிங்' முறையில் ஒரு குட்டி கிரேஸியை உருவாக்கினால், அதற்கும் ஹாஸ்யம் வருமா...?

இந்த கிரேஸிக்கு ஹாஸ்யம் வந்ததே, குட்டி கிரேஸியாக இருந்தபோது கல்கி, தேவன், சாவி, பாக்யம் ராமசாமி போன்ற பணக்காரர்களிடமிருந்து கடனாக இரவலில் ஹாஸ்யத்தைப் பெற்ற 'லோனிங்' முறையில்தான்...

● **எம்.ஏ.பாதுஷா, அய்யம்பேட்டை**

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்... அப்ப, கணவன் அமைவதெல்லாம்...?

இறைவனின் மனைவி இறைவி கொடுத்த வரம்...!

● **என்.சங்கரதாஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்**

மரணத்துக்குப் பயப்படாத மனிதன் ஒருத்தனைக் காட்ட முடியுமா?

நிறைய பேர் உண்டு. ஆனால் அவர்கள் எல்லோரும் ஏற்கனவே இறந்து போய் விட்டதால் காட்ட முடியாது. மரண பயம் மடியும் வரைதான். மடிந்த பிறகு ஜனன பயம்.

● **அ.ராஜா ரஹ்மான், கம்பம்**

தர்மம் செய்வது என்பது எப்படி இருக்க வேண்டும்....?

வலது கை கொடுப்பது right handடுக்கே தெரியக்கூடாது. தர்மம் செய்து விட்டு போலிஸிடம் பணம் தொலைந்து போய் விட்டதாக கம்ப்ளெய்ண்ட் செய்யும் அளவுக்கு செய்த தர்மத்தையே மறந்து போயிருக்க வேண்டும்.

● **எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்**

இப்போதும் குழந்தையைத் தொட்டிலில் போட்டுத் தாய்மார்கள் தாலாட்டுப் பாடும் சம்பிரதாயம் இருக்கிறதா?

சம்பிரதாயம் மாறவில்லை. தாலாட்டுதான் மாறிவிட்டது. நிலாம்பரியில் 'ரீ-மிக்ஸ்' செய்து 'அட்றாரா நாக்கு மூக்க நாக்கு மூக்க' பாடலை என் மருமகள் எங்களுக்கு சாமி வரும் அளவுக்குப் பாடினால்தான் என் பேரனுக்குத் தூக்கம் வரும்.

கணவன் அமைவதெல்லாம்...



● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

பிரம்மச்சாரியை ஏன் கட்டை பிரம்மச்சாரி என்கிறோம்....?

பிள்ளையாரால்! அவர்தான் முதல் கொழுக் 'கட்டை-பிரம்மச்சாரி.'



திருதிருவென முழித்தபடி வாயில் விரல் 'சூப்பர-மேனாகி' விடுவார்!

• சுகந்தி, சேலம்

நல்ல நட்புக்கு அடையாளம் எது?

Computer போல நண்பர்கள் users friendlyயாக இருக்க வேண்டும். நண்பனை யாராவது உயர்வாகச் சொன்னால் delight ; தாழ்வாகச் சொன்னால் delete.

• கே.எஸ்.கிருஷ்ணவேணி, கும்பகோணம்

பெண்கள் வெட்கப்பட்டால் ரசிக்கும்படி இருக்கும்... ஆண்கள் வெட்கப்பட்டால் எப்படி இருக்கும்?

யோகாசனம் (அஷ்டகோண லாசனம்) செய்வது போல இருக்கும்!

• அன்பழகன், சென்னை

காதலுக்கு 'களவியல்' என்று தலைப்பு கொடுத்ததேன்?

'கற்று மறந்தவளால்' என்று புலம்புகிறார் தெருக்கோடி தேவதாஸ்...!

• த.சத்தியநாராயணன், அயன்புரம்

பெண்களின் கூந்தல், ஆண்களின் தாடி ஒப்பிடுக....?

சிக்கல் சிடுக்கலான கேள்வி. தாடிக்குக் காரணம் கூந்தல். பெண்களே வேண்டாம் என்று முற்றும் துறந்த முனிவர்களும் தாடி வைத்திருப்பார்கள். பெண்களால் வேண்டாம் என்று துறக்கப்பட்டு, காதல் முற்றுப் பெற்றவர்களும் தாடி வைத்திருப்பார்கள். முதல் தாடி தவதாஸ். இரண்டாவது தாடி தேவதாஸ்.

• ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்

'சூப்பர்-மேனுக்கு' சக்தி போய் விட்டால்?

காயும் கடைமடை!

கல்லணை கால்வாயில் மட்டும்தான் சீரமைப்புப் பணிகள் நடக்கின்றன. இதனால், கடைமடைக்கு தண்ணீர் வரும் என்பதெல்லாம் கண்துடைப்புதான்!

காவிரியில் தண்ணீர் கரை புரண்டாலும் கடைமடையைச் சென்றடைவது நீண்ட காலக் கனவாகவே இருக்கிறது. தமிழகத்தில் கல்லணையிலிருந்து பிரியும் முக்கிய ஆறுகளின் கிளை வாய்க்கால்களின் பெரும்பகுதி, செடிகளும் நாணல் புதர்களும் மண்டிக் கிடப்பதால், கடைமடைக்குத் தண்ணீர் போய்ச் சேருவதில்லை. கிளை வாய்க்கால்களிலிருந்து பிரியும் பல நூறு கால்வாய்கள், ஆக்கிரமிப்பு மற்றும் காட்டாமணக்குச் செடிகளின் வளர்ச்சியினால் குறுகிப் போய் நீர் ஓட்டப் பாதைகள் அடைபட்டுள்ளன.

காட்டாமணக்குச் செடிகள் மற்றும் நாணல் புதர்கள் வேரோடு பறித்து அப்புறப்படுத்தப்படுகின்றன. தற்போது கல்லணைக் கால்வாய் மற்றும்



அதன் 'ஏ' கிரேடு வாய்க்கால்களில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

"ஒரத்தநாடு பக்கம் போயிருந்தேன். கல்லணைக் கால்வாயிலேர்ந்து பிரியற கல்யாண ஓடை வாய்க்கால்ல சீரமைக்கற வேலைகள் நடக்குது. அதுவும் பதினைந்து கி.மீ.க்குத்தான். அதன் மொத்த நீளம் நாற்பத்து ஒன்பது கி.மீ. தூரம். கல்லணைக் கால்வாயின் அருமலை வாய்க்கால் பாசன விவசாயி நான். எங்க ஊரு வாய்க்கால் வரைக்கும் இந்த வேலை வருமான்னு தெரியலை. எங்க கடைமடை வாய்க்கால்ல தண்ணி வந்து முப்பது வருஷம் ஆச்சுன்னு எங்க அப்பா சொல்வார். எந்தவொரு வாய்க்கால்லயும் அதனோட முழு நீளத்துக்குச் சீரமைப்பு வேலையைச் செயல்படுத்தினா நல்லது!" என்கிறார் விவசாயி அமுல்ராஜ்.

நாம் நேரில் சென்று பார்த்தது, ஒரத்தநாடு அருகே துறையூர் கிராமம் கல்யாண ஓடைக் கால்வாய். பொதுப்பணித் துறையின் கீழ் இயங்கி வரும் நீர் வள ஆதாரத் துறை, கால்வாய் சீரமைப்புப் பணியினை நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

கால்வாயின் உட்புறத்தை புல்டோசர் கொண்டு சமப்படுத்தி, உட்புற மணலை இருபுறக் கரைகளிலும் மேடுபடுத்தியிருக்கிறார்கள். உட்புறத் தளத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் முழுசாக அமைக்கப்படுகிறது. கால்வாயின் இருபுறக் கரைகளின் உட்புறங்களில், கரைகள் சரியாதிருக்க, அதனையும் சிமெண்ட் பலகைகள் கொண்டு முழுதாகப் பூசுகிறார்கள்.

"இதனால் கால்வாயின் உள்ளேயும் சரி, கரையின் உள்ளேயும் சரி செடிகள் மண்டிட வாய்ப்பே கிடையாது. வெள்ளக் காலங்களில் கரைகள் உடைப்பெடுக்காது. கால்வாயின் உள்ளே தாவரங்களின் வளர்ச்சி முற்றிலும் தடுக்கப்படுவதால், தண்ணீர் எங்கும் தேங்காது. இந்தச் சீர





* ஆறுபாதி கல்யாணம்

கால்வாய்ப் பிரச்னை

"எங்க கடைமடை கால்வாய்ல தண்ணி வந்து முப்பது வருஷம் ஆச்சு!"



★ அருள்ராஜ்



★ சேகர்

மைப்புப் பணிகளை தஞ்சை - நாகை - திருவாரூர் மாவட்டங்களின் கடைமடைப் பகுதி வரை நீட்டித்துச் செய்தால்தான் இந்தத் திட்டம் முழுமையான வெற்றி பெறும்!'' என்கிறார் கீழ்வன்னிப்பட்டு சேகர்.

''கீழ் காவிரி வடிநில வட்டத்தில், இரண்டு வருட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைகள் துவங்கப்பட்டு நடக்கின்றன. நூற்று நாற்பத்தைந்து கோடி ரூபாய் திட்டம் இது. கல்லணைக் கால்வாய் மொத்த நீளம் 148 கிலோ மீட்டரில் நூறு கிலோ மீட்டர் தூரமும், கல்யாண ஓடை வாய்க்காலின் 49 கி.மீ.ல் பதினைந்து கி.மீ.தூரமும், நெய்வாசல் வாய்க்கால், ராஜாமடம் வாய்க்கால், அலிவலம் வாய்க்கால் மற்றும் பண்ணை வயல் வாய்க்கால் போன்றவற்றிலும் இதே போன்று சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன'' என்கிறார் தஞ்சாவூர் பொதுப் பணித்துறை/ நீர்வள ஆதாரத் துறை உதவி செயற் பொறியாளர் ஏ.முகமது இக்பால்.

''கல்லணைக் கால்வாயில் மட்டும் தான், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் கடைமடைக்குத் தண்ணீர் சென்றடையும் என்பதெல்லாம் வெறும் கண் துடைப்புதான். கல்லணைக் கால்வாய் 1924-34களில் வெட்டி அமைக்கப்பட்டது. அதற்கு முந்தையது காவிரி, வெண்ணாறு. மேற்கண்ட இந்த மூன்று ஆறுகளிலிருந்தும் பிரிந்து செல்லும் 'ஏ' கிரேடு வாய்க்கால்கள் 1665. அவற்றிலிருந்து பிரிந்து செல்லும் 'பி' கிரேடு முதல் எஃப் கிரேடு வரையிலான வாய்க்கால்கள் 28,500. இவற்றின் மொத்த நீளம் சுமார் 25,000 கி.மீ. இவையனைத்திலும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள மோகனகிருஷ்ணன் தலைமையில், காவிரி உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அது ஆய்வு செய்து ஐந்தாயிரம் கோடி ரூபாய் திட்டத்தினை அரசுக்குப் பரிந்துரை செய்தது. அதில் மிகமிகச் சிறு பகுதிதான் தற்போது நடந்து வரும் சீரமைப்புப் பணிகள்.

அந்தந்த ஊராட்சிகளில் மத்திய அரசின் நூறு நாள் வேலை உறுதியளிப்புத் திட்டம் மூலமாக, இந்தக் கால்வாய்களைத் தூர் வாரித் தர வேண்டும். இந்த வேலைகளும் எவ்வித கமிஷன் மற்றும் ஊழல் இன்றி செயல்பட்டு முழுமையாக நிறைவேறினால் மட்டுமே தஞ்சை - நாகை - திருவாரூர் மாவட்டங்களின் கடைமடைப் பகுதிகளுக்கு காவிரித் தண்ணீர் பாய்ந்தோடி வரும்'' என்கிறார் காவிரிப் பாசன விவசாயச் சங்கங்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம்.

செய்தி, சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



* மகேந்திரனின் அத்தை மணிமேகலை

அத்தைமடி மெத்தையடி!

அந்த அதிகாலை பேருந்து பயணத்தில் லேசான தூக்கத்திலிருந்த என்னை, அத்தையின் மரணச்செய்தி தட்டி எழுப்பியது.

பேருந்து திருப்பூர், அவினாசி கடந்து தென்னம்பாளையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. காலை பத்து மணிக்கு கோவையில் கூட்டம். என்னால் கூட்டத்துக்குச் செல்ல முடியாது. எனது பயணம் மீண்டும் தஞ்சைக்கே திரும்புகிறது. நிறுத்தத்தில் நகரப் பேருந்தைத் தவிர வேறு எதுவும் நிற்பதில்லை. பனியன் நகரத்தின், மக்கள் கூட்டத்தில் கரைந்து, ரயில் ஒன்றைப் பிடித்து தஞ்சை வந்து, மாலை நான்கு மணிக்கு அத்தையின் ஊரான தொண்டராம் பட்டை அடைகிறேன்.

அத்தைக்குத் திருமணமாகிய நாளிலிருந்து என் உணர்வுகளில் நன்கு பதிவாகிப்போன ஊர் இது. அவருடைய திருமணம் நடைபெற்று ஒன்பது ஆண்டுகள் இருக்கலாம். அப்போதெல்லாம் நீர் நிரம்பிய ஆற்றங்கரையில், பூவரச மரங்களும், மாமரங்களும் சூழ்ந்து நிற்கும் புதுத் தெரு. அந்தத் தெருவில்தான் அத்தையின் வீடும் இருக்கிறது. தெருவில் நுழைகிறேன். சிறு குழந்தையாய் இருந்தபோது தம்பி என்று வாரியணைத்துத் தூக்கிய அத்தையின் முகம், பிரமாண்டமாகி மனக்கண்ணில் விரிகிறது. உடல் சிலிர்க்கிறது, ஆண்டுகள் பலவாகியும் பாசத்தில் விடுபட முடியாமல்.

இன்றைய தலைமுறையினர் பழைய கூட்டுக் குடும்பங்களைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. கிராமங்களில் மூன்று, நான்கு தலைமுறையைச் சார்ந்தவர்கள் ஒரே குடும்பத்தில் இருப்பார்கள். சில குடும்பங்களில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அறுபது அல்லது எழுபதைக் கூட தாண்டி விடுவதுண்டு. கூட்டு விவசாயத்துக்கு இந்தக் கூட்டுக் குடும்பம், அடிப்படைத் தேவையாக இருந்தது.


அந்தக் கால, இந்தக் கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் அத்தைமார்களின் அன்பில் குழந்தைகள் திண்டாடிப் போவார்கள். குழந்தைகள் எப்போதும் அத்தைகளின் முந்தானையைப் பிடித்துக்கொண்டே திரிவார்கள். அத்தைமார்களின் இந்த அன்புக்கு ஈடு இணை எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எனது அத்தை அந்தக் கூட்டு வாழ்க்கையின் உயர் பண்பை, கடைசி வரை இழக்காதவர். யாரிடமும் மாறாத அன்பும் பாசமும் அவர் காட்டும் பக்குவமும்

— சி. மகேந்திரன் —

அவரிடம் கடைசி வரை இருந்தது.

அரசியல் பணிகளில், பல ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்த சுழற்சியில் அத்தையைச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைந்துகொண்டே இருந்தன. எங்காவது திருமண நிகழ்ச்சிகளில் பங்கேற்க, தலைமைதாங்க... வருகிறேன் என்பதை அத்தை எப்படியும் அறிந்து கொண்டு வந்துவிடுவார்கள். திருமணம் நிறைவுறும்வரை காத்திருந்து, அதே பந்தலில் அமர்ந்து சிறிது நேரம் என்னிடம் பேசி விட்டுத்தான் செல்வார்கள். அத்தையின் பெண்மக்கள் சூழ்ந்து நிற்பார்கள். அத்தைக்கு மூன்று பெண் பிள்ளைகள். இரண்டு ஆண் பிள்ளைகள். கதிரேசன் அத்தையின் வளர்ப்பு மகன். ஒரு திருமண நிகழ்வில் அத்தையைச் சந்தித்தபோது, காதருகில் வந்து கதிரேசனுக்குத் திருமணம் நிச்சயமானதைப் பற்றி என்னிடம் சொன்னபோது அவர் முகத்தில் ஒருவிதமான மலர்ச்சி தெரிந்தது. எப்படியும் திருமணத்துக்கு வந்துவிட வேண்டும் என்றார்கள். பெற்ற பிள்ளைகளின் பாசத்தையும் வளர்ப்புப் பிள்ளையின் பாசத்தைப் பற்றியும் பேசத் தொடங்கி விட்டார்கள். அப்பொழுது அத்தையின் கண்கள் சிறிது கலங்கியதை உணர்ந்தேன். அத்தையின் உலகம் யாராலும் புரிந்து கொள்ள முடியாத புதிர் நிறைந்தது.

✱ சி.மகேந்திரன்



“அத்தைமார்கள் அன்புக்கு இணையாக இந்த உலகில் வேறெதும் இருப்பதாகத் தோன்றவில்லை!”

பெண்கள் குரல் எடுத்து ஒப்பாரி சொல்லி அழுது கொண்டிருக்கிறார்கள். கொட்டு முழக்கம் கேட்கிறது. தம்பியும், நானும், அக்காவும், தம்பியின் மனைவியும் வீட்டை நெருங்கு கிறோம். எங்களைப் பார்த்து அழுகுரல் கூடுதலாகிறது. அத்தை பெற்றெடுத்த புதல்வர்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு அழுகிறார்கள். பல ஆண்டுகள் பார்க்க முடியாத உறவினர்கள் அனைவரும் சூழ்ந்து கொள்கிறார்கள். துயரம் பெருக்கெடுக்க நிற்கிறார்கள். அத்தையின் உடல் அருகில் செல்கிறோம். அழுகுரல் அலறலாக மாறி, சிறுகச் சிறுக மேலே சென்று வான்வெளியில் கலக்கிறது.

அத்தையின் மரணத்தால் மிகுந்த பாதிப்பைப் பெற்றவர் மாமாதான். சர்க்கரை நோயால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அவரை ஒரு குழந்தையைப் போல பாதுகாத்து வந்தார் அத்தை. மாமாவுக்கு என்னைப் பார்த்தவுடன் பழையவை அனைத்தும் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். அவரது கலங்கிய முகம் பல தகவல்களைக் கூறியது. அவருடைய கண்களை என்னால் பார்க்க முடியவில்லை. மனித உறவு எத்தனையோ ஆழ அகலங்களைக் கொண்டது.

மாமாவுக்கு அரசியலில் ஈடுபாடு அதிகம். இரவுபகலாகத் திராவிட அரசியலில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். அந்தக் காலத்திலேயே இவரது திருமணம்கூட, சீர்திருத்தத் திருமணமாகத்தான் நடைபெற்றது. மாமாவின் அரசியல் ஈடுபாடு அத்தையிடமும் பற்றிக்கொண்டது. மூன்றாம் வகுப்போ நான்காம் வகுப்போ படித்தவர்தான் அத்தை. ஆனால், எப்போதும் எதையாவது படித்துக் கொண்டேயிருப்பார். கல்வி வாய்ப்பு மட்டும் கிடைத்திருக்குமானால் ஏதாவது ஒரு துறையில் பெயர் சொல்லும் அளவுக்கு உயர்ந்திருப்பார். ஒரு முறை உள்ளாட்சித் தேர்தலில் ஊராட்சி உறுப்பினருக்கு நின்று வெற்றி பெற்று விட்டார். மறுமுறை சந்தித்தபோது, 'தேர்தலில் நின்றீர்களா அத்தை?' என்றேன். அத்தைக்கு வெட்கம் தாங்கவில்லை. 'அதை ஏன் கேட்கிறீர்கள் தம்பி, மாமா கட்டாயப்படுத்தி



விட்டார்' என்று கூச்சத்தோடு தயங்கித் தயங்கிச் சொன்னதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

உடல் நிலை பாதிக்கப்பட்டு அத்தை சென்னை விஜயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நானும் தம்பியும் போய்ப் பார்த்தோம். நாங்கள் வந்தவுடன் அத்தையிடம் தனியான உற்சாகம் வந்து விட்டதாக அத்தை மகள் கூறினார். ''நாங்கள் என்னதான் செய்தாலும் அண்ணன் மகன்கள் வந்தால் தான் அம்மாவுக்குச் சந்தோஷம்'' என்று கிண்டலுடன் கூறியதைக் கேட்க, அத்தையின் முகத்தில் பெருமிதம் இருப்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

கால்களுக்குச் செல்லும் நரம்புகளின் ரத்த ஓட்டம் தடைப்பட்டுவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். அத்தையின் சுறுசுறுப்புக்கு இணையானவர்களைப் பார்ப்பது மிகவும் அபூர்வம். வீட்டு வேலை, வயல் வேலை என்று எதுவாக இருந்தாலும் அத்தையோடு போட்டி போட்டு யாராலும் வெற்றி கொள்ள முடியாது. அலுப்பு சலிப்பற்ற உழைப்பு அவருக்கு மட்டுமே சொந்தமானது. இயல்பிலேயே அமைந்த இரக்க சுபாவமும், ஓயாத உழைப்பும்தான் மற்றவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் தனித்துவத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அத்தையைப் படுக்கையில் பார்க்க எனக்குச் சம்மதம் இல்லை.


அத்தையின் துறுதுறுத்த சிறுவயது கால்களைப் பற்றி நிறையவே சொல்லக் கேட்டிருக்கிறேன். வாலிபர்கள் ஏறத்தயங்கும் செங்குத்தான மரங்களில் கூட அத்தையின் கால்கள் ஏறி இறங்கும். மறுநாள் காலை மற்றோர் அதிர்ச்சி... அத்தையின் கால்களில் ஒன்றை அகற்றவேண்டும் என்று மருத்துவர்கள் முடிவு செய்து விட்டார்கள். கால்கள், கைகளின் மீது நம்பிக்கை கொண்ட உழைப்பாளியான அத்தையால் இதனை எப்படித் தாங்கிக் கொள்ளமுடியும்?

இறுதி அஞ்சலி செலுத்த அத்தையை நெருங்கிச் செல்கிறேன். தன் குடும்பத்துக்காகவும், தன்னைச் சுற்றியிருப்பவர்களின் நன்மைக்காகவும் சுயநலமற்று ஓடி ஓடி உழைத்த அத்தை படுக்க வைக்கப்பட்டிருக்கிறார். என்னையறியாமலேயே எனது கண்கள் வெட்டி எடுக்கப்பட்ட கால்களைத் தேடுகின்றன. கண்களில் நீர் கசிகிறது. கால்கள் முறிக்கப்பட்டு பின்னர் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் ஆட்டுக்குட்டியைப் போல எனது மனம் செயலற்றுக் கிடக்கிறது. ●

செபக்டக்ரா... இது என்ன சப்போட்டா போல் ஏதோவொரு பழ வகையா என்று கேட்கிறீர்களா? கால்களைப் பயன்படுத்தி ஆடப்படும் ஒரு வகை வாலிபால்தான் செபக்டக்ரா. 'காலால் உதை... தலையால் அடி' - இதுதான் செபக்டக்ரா ஆடப்படும் முறை.

தாய்லாந்தில் தோன்றிய செபக்டக்ரா மலேசியாவின் தேசிய விளையாட்டு. 1990 முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இடம்பிடித்துள்ளது இந்த ஆட்டம். இந்த விளையாட்டின் ஆடுகளம், பயன்படுத்தப்படும் வலையின் அளவு போன்றவை ஷட்டில் பேட்மின்டனை ஒத்திருக்கின்றன.

இந்தியாவில், பொதுவாக வடகிழக்கு மாநிலங்கள்தான் இவ்விளையாட்டில் கோலோச்சிக் கொண்டிருந்தன. கடந்த சில ஆண்டுகளாக, தென் மாநிலங்களும் அவற்றுக்குச் சமமாகப் போட்டியில் இறங்கியுள்ளன. இந்திய அளவில் 2008-ஆம் ஆண்டு சாம்பியன்ஷிப்பை வென்றது ஆந்திர மாநிலம் ஜூனியர் ஆண்கள் அணி.




* பேச்சிமுத்து

தமிழகமும் சளைத்ததில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை வெண்கலப் பதக்கங்களும் - ஒரு முறை வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளது.

அதுமட்டுமல்ல; 2008-ல் பாங்காக்கில் தாய்லாந்து அரசர் பெயரில் நடைபெற்ற போட்டியில் இந்திய அணி பங்கேற்றது. அந்த அணியில் தமிழகத்தைச் சேர்ந்த மூன்று பேர் இடம் பெற்றனர்.

எதற்கு இந்த நீண்ட





பீடிகை என்கிறீர்களா? அந்த மூவரில் இருவர் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஜெயேந்திரா மெட்ரிக் பள்ளியைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பயிற்சியாளர் பேச்சிமுத்து தம் மாணவர்களின் பெருமைகளை ஆர்வத்துடன் பகிர்ந்து கொள்கிறார்.

''இப்பள்ளியில் ஜூனியர், சப் ஜூனியர் என்று இரு பிரிவுகளாகத் தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு விளையாடும் மாணவ, மாணவியர் அகில இந்திய வீரர்களாகத் தேர்வு செய்யப்பட்டு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு தமிழக விளையாட்டு துறை அமைச்சர் ரூ.5,000/- ரொக்கப்பரிசும் வழங்கியுள்ளார். தமிழகத்தில் ஆறு பேர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் ஐந்து பேர் இப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர். இவ்விளையாட்டில் ஈடுபட்டு வரும் மாணவ, மாணவியர் படிப்பிலும் படு சுட்டியாக விளங்குகிறார்கள் என்பது உண்மை. செபக்டக்ரா வீராங்கனைகளான நந்தினி, கௌரி என்ற இரு மாணவியர், அதிக மதிப்பெண்கள் பெற்று மருத்துவக் கல்லூரியில் படித்து வருகிறார்கள்'' என்கிறார்.

இப்பள்ளியின் தாளாளர் சங்கர், ''எங்கள் பள்ளி போன்று தமிழகத்தில் சில பள்ளிகளில் பயிற்சி கொடுத்து வருகின்றனர். இவ்விளையாட்டு பிரபலம் ஆக வேண்டும் என்றால்,



காலால் ஆடும் வாலிபால்!

தமிழக அரசு மணிப்பூர், நாகலாந்தில் உள்ள பயிற்சியாளர்களை வரவழைத்து சென்னை போன்ற நகரங்களில் பயிற்சி கொடுத்தால் தமிழகத்தில் உள்ள வீரர்கள் தான் தங்கம் வெல்வார்கள்!'' என்கிறார்!

- ஆர்.பாலா

வட்டமேஜை

'**கா**ற்று வரும் பருவம்' கதை முடிந்தது என்பது சிலயம்பட்டி கிராமத்திலிருந்து நம்மைப் புறப்பட்டுப் போய்விடச் சொல்லிவிட்டாற் போன்ற ஏக்கம். தத்ரூபமான பேச்சு வழக்கும் சம்பவக் கோவைகளும் மனத்தில் தங்கிவிட்டன. **-அகிலா ஸகதேவன், கம்பம்** ● இடையிடையே வன்காற்றாக மாறி பிரச்னைகளால் பெரிதுபடுத்து கிறாற்போலிருந்தாலும் இறுதியில் தென்றல் போல வீசி மலயமாருதமாய் மணம் பரப்பியது பாரதிபாலனின் காற்று வ(ரும்)ந்த பருவம்! **-சு.இந்துமதி, நெய்வேலி** ● தலையங்கம் இந்தியாவின் தார்மிகக் கடமையைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது. **- கல்யாணி பாலு, புதுக்கோட்டை** ● முத்தான மூன்று தொடர்களை வெளியிட்டதோடு, ராஜேஷ்குமாரின் 'த்ரில்லர்' க்ரைம்.காம் தொடரில் 'துப்பறிய வாங்க' என்று போட்டியை வைத்து பரிசும் கொடுப்பதாக அறிவித்திருந்தது கரும்பு தின்னக் கூலி! **-பி.ஆர். மயிலப்பன், ஈரோடு** ● உடல் தானம் செய்வதற்குரிய பார்மாலிட்டீஸ்களில் உள்ள இவ்வளவு இடைஞ்சல்களை அரசு சீரமைக்க வேண்டாமா? திலகபாமாவின் எழுத்து அரசு இயந்திரத்தின் கதவைத் தட்டி கண்ணைத் திறக்க வேண்டும். **-க.சுந்தர், நெய்வேலி** ● ''காப்பியில் கலை வண்ணம்'' பகுதியில் இடம்பெற்ற நான்கு படங்களும் அற்புத விளக்கு. **- தாரணி, அரியலூர்** ● இலங்கைத் தமிழர் பிரச்னையில் நாம் தலையிட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் தெள்ளத் தெளிவாக விளக்கியது தலையங்கம். **-என்.பாலகிருஷ்ணன், மதுரை** ● தா. பாண்டியனின் குடும்பச் சொத்து விவகாரத்தை அரசியல் பிரச்னையாக்கிப் பழிவாங்குவது... ரொம்ப சின்னப்பிள்ளைத்தனமால்ல இருக்கு! **- மல்லிகா அன்பழகன், சென்னை-78** ● அற்புதம்யா... ஆமாம்யா... இதோ... மனசுக்கு இன்னும் ஒரு



சிங்கம்ல...

சுறுசுறுப்பு! (க்ரைம்.காம்) இனி நாங்களும் துப்பறிவோம். சிங்கம்ல! - **கே.தமிழரசன், கோவை.** ● மைக்கேல் ஜாக்சன் 'ஒரு மனித அதிசயம்' என்று வர்ணிக்கப்பட்ட கடைசி பக்கக் கட்டுரை அந்த சாதனைக் கலைஞனுக்கு செலுத்தப்பட்ட ஆழமான அஞ்சலி. - **த.சத்தியநாராயணன், அயன்புரம்** ● இந்திரா பார்த்தசாரதியின் 'கிறுக்கன்' சிறப்புச் சிறுகதை, உண்மையிலேயே சிறப்புதான்! **-கே.கஸ்தூரி, காட்பாடி** ● மைக்கேல் ஜாக்சன் தன் அற்புத பாப் இசையால் சிரஞ்சீவி! **-கே.வி.ராமன், சேலையூர்** ● ஒரு த்ரில்லர் - ஒரு விஷுவல் - ஒரு ஹ்யூமர் என மூன்று சுவைகளுடன் கூடிய தொடர்கள் முக்கனிச் சுவையாக இனிக்க ஆரம்பித்துள்ளன. - **ரேவதி ப்ரியன், ஈரோடு.**

துப்பறிய வாங்க
போட்டி-1 முடிவு

சரியான விடை எழுதியவர்களில் குலுக்கல் மூலம் ரூ. 200/- பரிசு பெறும் ஐந்து பேர்

1. எஸ்.கோபிநாதன் - தஞ்சாவூர்
2. டி.உமாதேவி - சேலம்
3. அன்புமணி - ஈரோடு
4. வேதவல்லிசாரி - சென்னை
5. ப.ராமகிருஷ்ணன் - காயக்காடு

<u>வாசகர்களுக்கு கிரேஸி ட்ரீட்...</u>

அடுத்த வாரத்திலிருந்து அதிரடி காத்திருக்கிறது. அலர்ட் வாசகர்களே...

-ஆர்.

ஞாபகங்கள்

பல்லவி

''அவமானங்களைச் சேமித்து வையுங்கள். அவை உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் தீபங்கள்'' என்று சொல்லும் ஒரு கவிஞனின் திரை உலகப் பிரவேசப் போராட்டமும் காதலும் சேர்ந்த கதை.

சரணம்

கேமரா முன்பு கவிஞர் பா.விஜய். படத்திலும் கவிஞர் வேடம் என்பதால் இயல்பாக வந்து போகிறார். காதல், சோகக் காட்சிகளில் இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுத்திருக்கலாம். நாயகி ஸ்ரீதேவிகா மழலைத் தமிழில் 'வளவள' எனப் பேசுவது ரசிக்க வைக்கிறது.

வறுமையை மறைத்து பொய் வேடம் போடும் காட்சிகளும், அதைப் பிரதிபலிக்கும் பங்களாவும் மனத்தில் அழுத்தமாகப் பதிகின்றன. என்னதான் கவிஞரின் கதையாக இருந்தாலும் இடையிடையே வருகிற 'டூயட்கள்' செயற்கையாகி வேகத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றன. நாயகனின் திரைத்துறை போராட்டத்துக்கான காட்சி ஒன்றுகூட இல்லாதது படத்தின் பெரிய குறை.

கதை

தங்கை செய்த தவறால் காதல் திருமணத்தை வெறுக்கும் தந்தை; அவருக்குப் பயந்து பயந்து காதலிக்கும் மகள். இருவருக்கும் இடையேயான பாசப் போராட்டம். இதுதான் கதை. ஆனால், காமெடி குழைத்துக் குழைத்து படத்தை மெருகேற்றிவிட்டார் வி.சந்திரசேகரன்.

ப்ளஸ்

- பளிச்சென மனத்தில் ஒட்டிக்கொள்ளும் புதுமுகக் கதாநாயகி சுனுலட்சுமி
- சுனுவைச் சுற்றிச்சுற்றிக் காதலிக்கும் சத்யா
- காதுகளில் இனிமையாக இறங்கும் இனியவன் இசை (பாடல்)





அதனாலேயே அவரது தேசிய விருது வெற்றி, ஏதோ கடையில் கடலை மிட்டாய் வாங்கியது போல் சாதாரணமாகப் போய்விடுகிறது. தன்னம்பிக்கை மிக்க ஓர் இளைஞன், இறுதியில் எடுக்கும் முடிவும் ரசிக்கும் வகையில் இல்லை. வாழ்க்கையில் காதல் பிரதானமாக இருக்கலாம். அதைத் தாண்டி வாழ்வதற்கும் உலகில் நிறைய விஷயங்கள் இருக்கின்றனவே.

ஞாபகங்கள்... ஒருமுறை (மட்டுமே) வாசித்து மகிழும் புதுக்கவிதை.

- யுவராஜ்

✿ படத்தைத் தூக்கி நிறுத்தும் மயில்சாமி அண்ட் கோ நிகழ்த்தும் காமெடி தர்பார்

✿ மிடுக்கான அப்பாவாக, கதிகலங்க வைக்கும் எம்.எஸ்.பாஸ்கர்

✿ சிவசங்கரின் அதிரடியான நடன அமைப்பு

✿ போலி மந்திரவாதியாக தியாகு நிகழ்த்தும் அலப்பறை அசத்தல்.

த்தால் ரசிப்பேன்!

மைனஸ்

✿ நாடகத்தனமான காட்சி நகர்த்தல்

✿ தொய்வான படத்தொகுப்பு

✿ உருவியிருக்கிறாங்களோன்னு யோசிக்க வைக்கிற பின்னணி இசை

✿ விட்டேத்தியான சண்டைப் பயிற்சி

✿ விரல்விட்டு எண்ணிவிடும் காஸ்ட்யூம்கள்

✿ படுத்த படுக்கையில் இம்சிக்கும் அம்மா கேரக்டர்

✿ யூகிக்க முடிந்த திரைக்கதை!

✿ சுபம் போட்ட பிறகும் கதை தொடரும் அஜீப்பு.

சிரித்தால் ரசிப்பேன் - ஒருமுறை சிரிக்கலாம்.

- சந்தியா

‘‘இந்த விடியக்கருக்கலில் இந்த நொடிப்பொழுதில் அம்மையப்பன் கடைத்தெருப் பாலத்துக்கு தென்னண்டப் பக்கம் வந்து இறங்கி விடலாம். பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு திரும்பவும் பிறந்த மண்ணின் காற்றை நிம்மதியாகச் சுவாசிக்கலாம்'' என்று முப்பது நாளைக்கு முன்னே ஓர் அந்திப் பொழுதில் ராஜாங்கம் பிள்ளை தீர்மானித்தது இம்மி பிசகாமல் நிறைவேறி இருக்கிறது.

ராஜாங்கம் பிள்ளையின் அப்பா சொக்கலிங்கம் பிள்ளைக்கு என்று மூணுமா நஞ்சையும் ஒரு அறுவது குழி மனைக்கட்டும் அதில் உள்ள இரண்டு கட்டு ஓட்டு வீடும் தான் சுவாதீன உரிமையாக இருந்தன. இவரும் அப்பாரும் ஓடியாடி அசராம உழைச்சாங்க.

நாளாக நாளாக முன்னப் போல அவரால வேலை தலைப்புல மல்லுக்கு நிக்க முடியாம ஆயிட்டு. அதுக்குத் தோதா மவனுக்கு உத்திரப்பிரதேசத்தில் கலெக்டரா வேலை போட்டு வந்துட்டு. 'இவ்வளவு காலம் முழங்கா முட்டித் தண்ணி சுண்டுற வரைக்கும் உழைச்சது போதும். கொஞ்சநாள் என்னோட வந்து தங்கிடுங்க...' மவன் ஒத்தக் கால்ல நின்னுட்டான்.

மூணு மாநிலம் மாறியாச்சு. ஒவ்வொரு சாகுபடி பட்டத்துக்கும், புறப்பட்டுப் போய் தான் பிறந்த வீட்டுல ஒரு நாள் தங்கி, ஜீவனா இருக்கும் மண்ணை மிதிச்சிட்டு வந்துடணும் என்கிற ஆசை அடிச்சுக்கிட்டுதான் கிடக்கும். போன மாதம்தான் அவர் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு கிட்டியது.

அவர் மகன் தன் காரிலேயே அழைத்து வந்து, பேருந்தில் ஏற்றி அனுப்பி வைத்திருந்தான்.

கடைத்தெரு ஒன்றும் பெரிதாக மாறியிருக்கவில்லை. ஒரு சில ஓட்டுக் கடைகள் மட்டும் அடுக்குகளாக மாறியிருந்தன.

'...பெரியப்பா... நம்ம வயலை ஒட்டி உள்ள வயக்காரவங்க எல்லாம் நல்ல விலைக்கு வித்துட்டாங்க. நம்ம ஊரை ஒட்டியிருக்கிற கருப்பூர்ல பெரிய கம்பெனி வந்து தன்னோட பண்ணையை நடத்திக்கிட்டு இருக்கு. இப்ப அதுக்குப் போட்டியா இன்னொரு கம்பெனி வந்து இறங்கியிருக்கு. இனிமே நாம நம்ம நெலத்தில் தனிச்சு நின்னு வெள்ளாமை செஞ்சிட முடியாது. நானும் அப்பாகிட்ட பேசிட்டேன். வித்து வர்ற பணம் காசை வச்சு இருக்கிற ஓட்டு விட்டை ஒட்டு வீடா கட்டிக்கிட்டு மீதி இருக்கிறத அப்பா பேர்ல பேங்கில போட்டுப்புடலாம்ன்னுதான்... உங்க நிலத்தையும் சேர்த்து விலை பேசினா கூடுதலா முடிக்கலாம். வந்து சேருங்க...' என்று போன மாசம் தம்பி மவன் எழுதியிருந்த கடிதத்தை யாரிடமும் சொல்லாமல் கிழித்தெறிந்தார்.

அக்காக்குருவி

அவருடைய வீட்டுக்குத் திரும்பும் சந்தில் திரும்பினதும் புதியதான எந்த மாற்றமும் இல்லாமல் அன்றைக்கு இருந்தபடியே இருந்தது. அவர் தம்பியின் கடைக்குட்டி மவன் அவர் வருவதைப் பார்த்துவிட்டு ஓடிவந்தான். ''பெரியப்பா போன்ல

சொல்லியிருந்தா நான் வந்து அழைச்சிக்கிட்டு வந்திருப்பேன்ல'' என்று சொல்லிக் கொண்டு அவர் கையில் இருந்த



பெட்டியை வாங்கிக் கொண்டான்.

பன்னிரண்டு வருஷம் கழித்து வந்து தான் பிறந்த

சோலைசுந்தரபெருமாள்

மண்ணில் சுவாசம் செய்யும்போது இன்றைக்குப் புதுசாய் தெம்பு பிறந்திருப்பது போல ஓர் உணர்ச்சி உந்தியது.

இரவு. வீட்டு வாசலில் பெஞ்சைப் போட்டுப் படுத்துக் கொள்ளத்தான் ஆசைப்படுவார். அதைப்போலவே படுத்துக் கொண்டார். முதல் நாள் இரவு பேருந்தில் வந்த பயணக் களைப்பு போக அடித்துப் போட்டது போல் தூங்கினார். அவர் பக்கத்தில் தனியாக கயிற்றுக் கட்டிலைப் போட்டு அவர் தம்பி மவனும் படுத்திருந்தான். தெற்குப் பக்கத்தில் இருந்து விடியல் சேவல்கள் கூவின. அதற்கு முன்னேயே விழித்துக் கொண்டார்.

இவரோட எட்டுமா நிலமும் திருமதிக்குன்னம் போகிற பாதையில் ஒரு கிலோமீட்டர் தூரம் போனால் ஒரு வடிவாய்க் காலைத் தாண்டி சதுருச்சி வைச்ச பொட்டிப் போல இருக்கும். சொக்கநாதர் தெருவைக் கடந்து திருமதிக்குன்னம் பாதையைப் பிடித்து நடந்தார்.

அந்தப் பாதையில் வடவண்டப்பக்கம் பொன்னேரி நகர் என்றும் தென்னண்டப்பக்கம் சோலைபுரி என்றும் அடையாளப்படுத்தி விளம்பரப் பலகை வைத்திருந்தார்கள். வளமிக்க இந்த வயல்கள் இன்றைக்கு மனைப்பட்டமாக பிரிக்கப்பட்டு இருப்பதைப் பார்த்ததும் 'சொரக்' என்று வயிற்றில் பற்றி எரிந்தது.

எதிர்காலத்தைப் பற்றி

சிந்தனையே இல்லாமல் சந்ததிகளின் வாழ்வைப் பற்றி கவலையேபடாத அரசும் அந்த அரசைத் தேர்வு செய்யும் மக்களும் பார்த்துக் கொண்டு இருக்கும் வரையிலும் இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும் என்று நினைத்தபடி மெல்லப் போய்க் கொண்டு இருந்தார்.

தென்னண்டப்பக்கம் உள்ள நிலங்களில் வெள்ளாமை விட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று தெரிந்தது. வெள்ளாமை விடாமல் விடப்பட்டு இருந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன. அந்த வயல்களில் கோரை மண்டி கரடுமுரடாகக் கிடந்தன. பொழுதும் பளபளன்னு விடிந்து கொண்டு இருந்தது. அந்த ஒட்டு மொத்தப் பங்குகளையும் கோலுவது போல வடிகாலை உள்ளுக்குள் வைத்து சிமிண்ட் காங்கிரிட் போத்துகளை நட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலண்டப்பக்கம் அறுவடை செய்து களம் புழங்க என்று வைத்திருந்த பெதுவடை, ஆலமரத்தோடு கூடிய பெரும் திடலில் இருந்த பனை மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுக்கிடந்தன. ஆலமரத்தையும் வேரோடு பறிக்கும் திட்டத்தோடு இரண்டு ராட்சச பொக்லைன் இயந்திரங்கள் திடலை இறக்கி மட்டம் தட்டிக் கொண்டு இருந்தன. அதுகளைப் பார்த்தபடி வெட்கித்து நின்றவரைக் கடந்து போனது அந்த ட்ரக் வண்டி. தம் வயல்களைக் கிட்டத்தில் போய்ப் பார்க்கலாம் என்று நடந்தார்.

அவர் எதிரே கம்பு ஊன்றி வந்த முதியவரைப் பார்த்தார். அவருக்கு நெருக்கமாய் அறிமுகமான முகமாகத் தெரிந்தது. ''என்னா அய்யாவு! என்னைத் தெரியுதா?'' என்று கேட்டதும், அவருக்கும் கேள்விப்பட்ட குரலாய்த் தெரியவும், கண்ணை சுருக்கிக்கொண்டு பார்த்து, ''அய்யா! நல்லா இருக்கிறீங்களா? அம்மா புள்ள எல்லாம் வந்துயிருக்காங்களா? நீங்க போய் மாமாங்கமாயிட்டுங்களே... அதாங்க சட்டுன்னு தெரில...'' என்றார்.

''நீங்கள்லாம் எப்படியிருக்கீங்க? ஊரே இப்படி கந்தர்கோலமா கிடக்கே! இந்த ஊருக்கு என்னா வந்துட்டு அய்யாவு?''

''ஊரே இப்ப மாறிப்போயிட்டுங்க. பம்பாய்லருந்து ஒரு பெரிய கம்பெனிக்காக கருப்பூரை வாங்கி, கோலி இப்படி பண்ணை வச்சிட்டாங்க. நம்ம ஆளுங்களுக்கு உள்ளுக்குள்ள வேலையே கிடையாதுங்க. எல்லாத்துக்கும் மிசின் கொண்டாந்து எறக்கிட்டாங்க. நம்ம ஊரு ஆளுங்க எல்லாம் கோயம்புத்தூர், திருப்பூர், கேரளான்னு போயிட்டுங்க. போனவங்க போனவங்கதாங்க. யாரும்



திரும்பி வரக்காணோம். இப்ப எங்க தெருவில கிழங்கட்டைங்கதான் இருக்குங்க. போன பிள்ளைங்க அனுப்பி வைக்கிற காசை வைச்சிக்கிட்டு வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க. கீரையிலிருந்து கருவப்பிள்ளை கொத்தமல்லி வரைக்கும் இங்க பயிர் பண்ணி ஏத்திக்கிட்டுப் போயிடுறாங்கய்யா. இப்ப போனுச்சே ட்ரக் வண்டி... இந்த விடியல்ல போற மூணாவது வண்டிங்க. அந்த வண்டிய என்னோட பேரன் ஓட்டிக்கிட்டு

போறாங்க. அவன் வாரம் ஒரு நாள் இந்த நாள்ல வரும்போது நான் வந்து நிப்பேங்க. அவன் செலவுக்குக் கொடுத்துட்டுப் போவானுங்க...'' என்றார்.

வடிவாய்க்காலைத் தாண்டி ஒரு பங்கு விட்டு அடுத்ததாக இருந்தது ராஜாங்கம் பிள்ளையின் எட்டுமா பங்கும். நான்கு குண்டுகளாகத் தடுக்கப்பட்டு இருந்தது. நடுவரப்பில் இவர் போட்டு வளர்த்திருந்த வேப்பமரக்கன்று கனத்துப் போய் நின்றது. இந்தப் பங்குகளின் தலைமாட்டில் இருந்த தனித்த வேப்பமரம் கப்பும் கிளையுமாகப் படர்ந்து நின்றிருந்தது. அதன் வேர் முண்டில், வந்த களைப்பைப் போக்கிக் கொள்ள வரப்பை அணைத்தாற்போல

''செத்துப் போனவரு 'சிங்கம்' மாதிரி!''

''எதை வச்சு சொல்றீங்க?''

''சிங்கம்... சிங்கிளாத்தான 'போகும்'. அதை வச்சுத்தான்!''

- உ.குணசீலபாண்டியன்

உட்கார்ந்தார்.

''இந்த வேப்பமரங்களை விக்க தனியா ஒரு யாவாரியைக் கொண்டாந்து விலை வச்சுக் கொடுத்தா நல்ல விலைக்குப் போகுங்க. வயலை மட்டும் தனியாப் பேசி முடிச்சிக்கலாங்க...''

''என்ன அய்யாவு! உன்னோட வாயிலருந்து இப்படி வருது? உனக்குத் தெரியாதா? இந்த நிலம்தானே என்னோட குடும்பத்தைக் காப்பாத்திக்கிட்டு இருந்திருக்கு. இந்த நிலத்தை நான் வித்தா பெத்த புள்ளைய வித்தாப்போல.'' ராஜாங்கம் பிள்ளை துடிச்சுப் போயிட்டார்.

அய்யாவு அவர் மனசைப் புரிந்து கொண்டு ஆற்றுப்படுத்துவது போல...

''நான் என்னத்தச் சொல்லுறதுங்க. இன்னிய நிலைமையில ஊர்ல உள்ள நெலக்காரவங்க பணம்காச கூடுகுறைச்சல் பேசி பெரிய கம்பெனிக்கு சாசனம் பண்ணிக் கொடுத்துட்டாங்க. ஒருத்த ரெண்டு பேரு சாசனம் பண்ணிக் கொடுக்க மக்கரு பண்ணினா தாதாக்களை விட்டுப் படிய வைக்க ஏற்பாடு நடந்துக்கிட்டு இருக்காம். இப்பதான் என் மவன் சொல்லிட்டுப் போறான்ங்க. அந்தக் கம்பெனிக்கும் இந்தக் கம்பெனிக்கும் யாவாரப் போட்டியாம். அந்தக் காரம் இங்கவும் வெடிக்குதாங்கய்யா...'' அய்யாவுவின் குரல் தளர்ந்து போயிருந்தது.

''அய்யாவு என்னோட நிலத்தை அந்தக் கொலைகாரப் பாவிங்க தட்டிப் பறிச்சிடுவானுங்களா?'' பதறி அடிச்சி, ''என்னா அய்யாவு இது...'' என்று எழ முயன்றார். தடுமாறியது.

''பதறிடாதீங்கய்யா...'' என்று அவரைப் பிடித்து உட்கார வைக்க முயன்றார் அய்யாவு. ஆனால், அவர் பதற்றம் கூட, எழும்போது அய்யாவு ஊன்றிக் கொண்டு இருந்த கம்பைப் பிடித்துக் கொண்டார். அவர் கண் முன்னே அவர் எட்டுமா நிலமும் ராட்சச பொக்லைனால்... அவர் காலடியில் உள்ள மண் அவரை அறியாமல் பறிபோய்க்கொண்டு இருந்தது.

''காலம் இப்படியே போயிடாதுங்கய்யா... நீங்க மனசைத் தேத்திங்கய்யா...'' அய்யாவு அவரைப் பற்றுதலாக அழைத்துக் கொண்டு திரும்பியிருந்தார். விடியலைப் புரட்டிப் போட்டுக்கொண்டு இருக்கும் சூரியக்கதிர்கள் அவர்கள் முகத்தைப் பொசுக்கிக் கொண்டு இருந்தன. அவர்கள் தலைக்கு மேல் புறாக்கள் கூட்டமாகப் பறந்து போய்க் கொண்டு இருந்தன. ●

சுகானுபவம்;

ஆஹா! நாடாளுமன்ற கூட்டத் தொடர்கள் இப்படி நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' - நமக்குள் இந்த ஏக்கத்தை எழுப்பிய பழியை விஜய் சிவா - டி.எம்.கிருஷ்ணா ஜோடி மீதுதான் போட வேண்டும்!

இரண்டு பேரும் வெகு வித்தியாசமான கலைஞர்கள். விஜய் சிவாவின் சங்கீதம் ஜிலுஜிலுக்கும் அகண்ட காவிரி என்றால் கிருஷ்ணாவின் பாட்டு குதூகலமாய்க் கொட்டும் குற்றால அருவி! இந்த இருவரும் சேர்ந்து ஒரு கச்சேரி செய்த போது காண்பித்த பரஸ்பர மதிப்பும் ரசிப்பும் லாலுவுக்கும் மம்தாவுக்கு



* பிசிறின்றி இணைய முடிகிற இலகுத்தன்மை - விஜய் சிவா, டி.எம்.கிருஷ்ணா, பாம்பே ஜெயஸ்ரீ இணைந்து கோவையில் நிகழ்த்திய இசையறிமுக நிகழ்ச்சியின்போது...

மிடையே நிலவாதோ என்று ஏங்கினோம். அவரவர் பாணியும் மனோதர்மமும் அடுத்தவருடைய படைப்புக்கும் வெளிப்பாட்டுக்கும் இடையூறு செய்யாமல் ஒரே மேடையில் மிளிர்ந்தபோது, பா.ஜ.க.வும் காங்கிரஸும் ஏன் இவர்களைப் பின்பற்றக் கூடாது என்று பெருமூச்சு விட்டோம்!

கிருஷ்ண கான சபா, அதன் முன்னாள் செயலர் யக்ஞராமன் நினைவாக ஏற்பாடு செய்திருந்த இந்த ஞாயிற்றுக்கிழமை (28.6.09) கச்சேரிக்கு கிலோ கணக்கில் எதிர்பார்ப்புடன் வந்த ரசிகர்கள், டன் கணக்கில் சந்தோஷத்தை அள்ளிக் கொண்டனர்!

''காப்பியும் டீயும் கலந்தாப்போல ஏதோ இருக்கும்னு நினைச்சேன், இப்படிப் பிச்சு உதறிவிட்டார்களே!'' என்றும்,

''வாழ்நாளில் இப்படி ஒரு கச்சேரி கேட்டதில்லை'' எனவும்,

''இனிமேல் கேட்கப்போவதுமில்லை!'' எனவும் ரசிகர்கள் அந்த சுகானுபவம் குறித்துத் தீர்மானம் இயற்றியபடி திரும்பினர். ரசிகர்களுக்குப் பழக்கமான பாடல்கள் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியின் ஸ்வீட் சர்ப்ரைஸ், கிருஷ்ணா கிருஷ்ணனாகவும் விஜய் சிவா கோபிகையாகவும் பாத்திரம் ஏற்று மாற்றி மாற்றிப் பாடிய வினா-விடை சுலோகம். கிருஷ்ண கர்ணாம்ருதம் என்று லீலா சுகர் இயற்றிய கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்ட சுலோகத்துக்கு விஜய் விளக்கம் சொன்னபோது சிரிப்பு சிரிப்பாக வந்தது என்றாலும், அதனை உணர்ச்சி சொட்ட இருவரும் பாடியபோது கண்ணே பனித்துவிட்டது! பக்கவாத்தியமாக இந்த நிகழ்ச்சிக்கு ஆர்.கே.ஸ்ரீராம் குமார் வயலின், அருண் பிரகாஷ் மிருதங்கம், பி.எஸ்.புருஷோத்தமன் கஞ்சிரா. இந்த மினிமம் காரண்டி பக்கவாத்தியக் கூட்டணி அன்றைய நிகழ்ச்சிக்கு மாக்ஸிமம் மெருகு சேர்த்ததையும் சொல்லியாக வேண்டும்.

இவ்வளவு தனித்தன்மை மிக்க கலைஞர்கள் இணைந்து பாட எவ்வாறு ஒப்புக்கொள்கிறார்கள் என்ற எண்ணம் எழ, கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பாம்பே ஜெயஸ்ரீயும் டி.எம்.கிருஷ்ணாவும்

ஆசிரியர் பக்கம்

சுவானுபவம்!

இணைந்து செய்த கச்சேரி நினைவுக்கு வந்தது. ஹிந்து நவம்பர்ஃபெஸ்ட்டின் ஓர் அங்கமான அந்த நிகழ்ச்சியும் ரசிகர்களின் பேராதரவைப் பெற்றது. ''இந்த நிகழ்ச்சி எங்கள் நீண்ட கால நட்பின் கொண்டாட்டம்'' என்று நிகழ்ச்சி தொடங்கும் முன் கிருஷ்ணாவும் ஜெயஸ்ரீயும் அறிவித்ததும் ஞாபகம் வந்தது.

நட்பு! அதன் விளைவான அன்பு; அதனால் மாறுபட்ட சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம்! ஏற்றுக் கொண்டதால் ஓர் இலக்கில் பிசிறின்றி இணைய முடிகிற இலகுத்தன்மை! இந்த இலகுத்தன்மை தானே காம்பினேஷன் கச்சேரிகளின் வெற்றியை உறுதி செய்கிறது.

இதே இலகுத்தன்மையுடன் கிருஷ்ணா - ஜெயஸ்ரீ காம்பினேஷன் ஆரம்பித்துள்ள நிறுவனம் மாத்ருகா. பெயரில் ரொம்ப சீனியராகத் தோன்றும் இந்த நிறுவனம், இளைஞர்களுக்கான கர்நாடக சங்கீத அமைப்பு ஒய்.ஏ.சி.எம்முடன் கைகோத்துக் கொண்டு சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம், 'சுவானுபவா' என்ற, மாணவர்களுக்கான ஆறு நாள் இசை அமர்க்களத் திருவிழாவை அட்டகாசமாக அரங்கேற்றியது.

இப்போது மீண்டும் சுவானுபவாவுக்கான திட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன. நட்சத்திரக் கலைஞர்களின் பங்கேற்புடன் இசை, நடனக் கச்சேரிகள், லெக்-டெம், அளவளாவல், நேர்காணல் என்று நாள் முழுதும் இசையைச் சுவாசிக்க நூற்றுக் கணக்கான இளைஞர்கள் (இசை மாணவர்கள்) தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்... மேலும் விவரங்களுக்கு www.kalkionline.com, www.svanubhava.com பாருங்கள். தொடர்புக்கு svanubhava@gmail.com

ஆகஸ்ட் 4 முதல் 9 வரை நடைபெறவிருக்கும் சுவானுபவாவில் கல்கி சேகரிக்கும் சுவானுபவத் துளிகள் ஆகஸ்ட் மாத கல்கி இதழ்களிலும் இணைய தளத்திலும் இடம்பெறும். படித்துவிட்டு மகிழ்ச்சித் தீர்மானம் இயற்றத் தயாராகுங்கள் வாசகர்களே!



• படம்:எஸ்.ஹரிஹரன்



கல்கி அடுத்தடுத்த அதிரடிகள்...

26.07.09 இதழ்

உதகை சிறப்பிதழ்

உதகை மாவட்டத்தின் சுற்றுலா பகுதிகள், பிரச்னைகள், தீர்வுகள், பரவச கோயில்கள், வாசகர் படைப்புகள்... ஜில்லெனத் தயாராகிறது.

02.08.09 இதழ்

நகைச்சுவைச் சிறப்பிதழ்

இதில் நீங்களும் உங்கள் சரவெடிகளைக் கொளுத்திப் போடலாம்

- ஸ்ட்ராங், ஹோல்ஸேல் ஹ்யூமர்
- ஹைக்கூ வடிவில் ஜோக்கூ
- கலகல அனுபவ ரீடர்ஸ் கார்னர்

சிரிப்பு கொப்பளிக்கும் படைப்புகளுக்குச் சிறப்பு பரிசுகள் காத்திருக்கு.
எதுவா இருந்தாலும் அஞ்சலட்டையில் சிரிப்பு ஸ்பெஷல் என்று குறிப்பிட்டு ஒரு வாரத்துக்குள் வந்து சேரும்படி அனுப்புங்க

மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்
முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-
30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-
வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ. 2500/-

வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.



கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, மங்கையர் மலர் என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032.

தொலைபேசி : **4343 8888**

Fax : 044 - 4343 8899

email: marketing@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.